மலர் - 04 இதழ் - 8 - பிப்ரவரி 2026

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

இலக்கிய
சமய
பண்பாட்டுப்
பன்மொழி
மின்னிதழ்

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

தை பூசம் பிப்ரவரி 1, 2026
தமிழ்க்கடவுள் முருகன் கோவில், பத்து மலை,
மலேசியா

எறும்பீசுவரத்து வேதிபாதச் சிற்பங்கள்
மு. நளினி, இரா. கலைக்கோவன்

ஆதித்தமிழ்க் கடவுள் முருகன்: சூரசம்காரத்தின் மெய்ப்பொருளும் ஞானத் திருமணமும்
அண்ணாமலை சுகுமாரன்

Glimpses of Kamba Ramayanam Geetha Mathivanan (Writer)

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிதாமகர்கள்
மு. பழநிச்சாமி

வரலாற்றுத் தொல்லெச்சமான நீலிக்கண்ணீர்!
புலவர். பூங்கொடி பராங்குசம்

"பராசக்தியும் மொழிப்போரும்"
முனைவர் சிவ இளங்கோ

இன்னும் பல ...

தமிழர் இலக்கிய சமய பண்பாட்டு ஆய்விதழ்

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

மலர் - 04 இதழ் - 8

பிப்ரவரி 2026

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர்
முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி
பொறுப்பாசிரியர்
முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன்
ஆசிரியர் குழு
முனைவர் தேமொழி (அமெரிக்கா)
Dr. புதேரி தானப்பன் (டில்லி)
வடிவமைப்பு
அருணேஷ்
செயற்கை நு ண்ணறிவு படங்கள்
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

Thamizhanangu
Printed and Published by :
E.Satish Rajkumar (Advocate)
3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar,
Madhurai, Tamil Nadu – 625 018.
Ph : +91 78711 23226, +91 70109 97639

கட்டுரைகள் அனுப்ப..
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம் பெற்றுள்ள கருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும். அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை
– இதழ் ஆசிரியர்

உள்ளடக்கம்

1. **எறும்பீசுவரத்து வேதிபாதச் சிற்பங்கள்** 3
முு. நளினி, இரா. கலைக்கோவன்

2. **ஆதித்தமிழ்க் கடவுள் முருகன்: சூரசம்காரத்தின் மெய்ப்பொருளும் ஞானத் திருமணமும்** 10
அண்ணாமலை சுகுமாரன்

3. ***Glimpses of Kamba Ramayanam - Book review*** 16
Geetha Mathivanan (Writer)

4. **கார்ல் சாகனின் வெளிர் நீலப் புள்ளி** 19
தேமொழி

5. ***Rare Thiruppugazhs of Arunagirinathar*** 22
Akshayan Manivannan

6. **பூமர நிழல்- கவிதைகள் - முத்தமிழ் விரும்பி - ஒரு பார்வை** 27
பொன். குமார்

7. **இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிதாமகர்கள்** 42
மு. பழநிச்சாமி

8. **‘சிறு-வீட்டு-பொங்கல்’ முதல் ‘நவின் தாண்டுள்’ வரை – தமிழ்நாட்டையும் மகாராஷ்டிராவையும் இணைக்கும் பழம்பெரும் அரிசி மரபுகள்:** 47
-பேரருளாளர் முனைவர் J இரவிக்குமார் ஸ்றீஃபன் G.,

9. **மக்கள் நலம் பேணுவோம்** 51
ச. அய்யம்பிள்ளை,

10. **வரலாற்றுத் தொல்லெச்சமான நீலிக்கண்ணீர்!** 56
தமிழ்மாமணி, புலவர். பூங்கொடி பராங்குசம்

11. **"பராசக்தியும் மொழிப்போரும்"** 61
முனைவர் சிவ இளங்கோ

12. **தலைநகரில் காற்று மாசு : புகையும் புகைச்சலும்** 64
முனைவர் ச. சீனிவாசன்

13. **எளிய முறையில் யாப்பறிவோம்:** 73
நெருப்பலையார்.இராம இளங்கோவன்,

14. **மரபின் வேர்கள் -2** 76
டாக்டர் புதேரி தானப்பன்

15. ***TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor*** 87
Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D

புரட்சிகவிஞர் பாரதிதாசனின் இந்தி எதிர்ப்புப் பாடல் 1938 இல் எழுதப்பட்டது

செந்தமிழைக் காப்பதற்குச்/
சேனை ஒன்று தேவை - பெருஞ்
சேனை ஒன்று தேவை
.
திரள்திரளாய்ச் சேர்ந்திடுவீர்
புரிவம் நல்ல சேவை.

இந்திதனைத் தமிழரிடம்
ஏன் புகுத்த++ வேண்டும்?- இவர்
ஏன் புகுத்த வேண்டும்?
எம்முயிரில் நஞ்சுதனை
ஏன்கலக்க வேண்டும்?

பைந்தமிழை மாய்ப்பதற்க்கே
பகைமுளைத்த திங்கே! - கொடும்
பகைமுளைத்த திங்கே!
பாதகரை விட்டுவைத்தால்
தமிழர்திறம் எங்கே?

சந்தத்தமிழ் மொழியிழந்தால்/
தமிழர் நிலை தளரும் - நல்ல
தமிழர் நிலை தளரும்
தமிழர்திறம் காட்டிடுவோம்
முழங்கிடுவீர் முரசம் !

எறும்பீசுவரத்து வேதிபாதச் சிற்பங்கள்

மு. நளினி, இரா. கலைக்கோவன்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி

சிராப்பள்ளித் தஞ்சாவூர்ச் சாலையில் 15 கி. மீ. தொலைவில் உள்ளது எறும்பியூர். இவ்வூர்க் குன்றின் உச்சியிலுள்ள முற்சோழர் கோயில், சிராப்பள்ளி மாவட்டத்தின் சிறப்பான மலைக்கோயில்களுள் ஒன்றாகும். எறும்பீசுவரர் கோயிலாக அறியப்படும் இதன் இறையகம் (விமானம்) ஒருதள வேசரக் கற்றளியாக அமைந்துள்ளது.

உபானத்தின் மீது பாதபந்தத் தாங்குதளம் பெற்று, 5. 74 மீ. பக்கமுடைய சதுரமாக எழும் இறையகம், அதன் முன்னுள்ள முகமண்டபம் ஆகியவற்றின் சுவருக்கும் தாங்குதளத்திற்கும் இடைப்பட்டுள்ளஉறுப்பு வேதிகைத்தொகுதி. கம்புகளுக்கு இடைப்பட்ட பாதங்களுடனான கண்டம் (உள்ளடங்கிய பகுதி), கீழ்நோக்குத் தாமரைவரி, வேதிகை என அமைந்துள்ள இத்தொகுதியின் பாதங்கள் சுவரில் அமையும் தூண்களின் கீழ்ப்பகுதிகளாகும். இப்பாதங்களில் பெரும்பாலன சிற்றுருவச் சிற்பங்கள் கொள்ள, சிலவற்றில் கொடிக்கருக்குகளும் பூக்களும் பறவை, விலங்குருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. விமானத்தின் உயரத்தை எழுச்சியுடன் கூட்டும் இவ்வேதிகைத்தொகுதியின் பாதச் சிற்பங்களை விரிவான அளவில் காணலாம்.

வேதிபாதச் சிற்பங்கள்

இறையகம், முகமண்டபம் இரண்டிலும் 60ஆக உள்ள வேதிபாதங்களில், 14 முகமண்டபப் பகுதியிலும் 46 விமானக் கட்டுமானத்திலும் இடம்பெற்றுள்ளன. அவற்றுள், விமானப்பகுதியில் இரண்டு பாதங்களும் முகமண்டபப் பகுதியில் நான்கு பாதங்களும் மட்டுமே செதுக்கல் ஏதுமின்றி வெறுமையாக உள்ளன. எஞ்சியவற்றுள் 33 பாதங்கள் சிற்பங்கள் பெற, 10 பாதங்கள் கொடிக்கருக்கு கொண்டுள்ளன. மூன்று பாதங்களில் உள்ள சிற்பங்கள் அடையாளப்படுத்த முடியாத அளவிற்குத் தேய்ந்துள்ளன. நான்கு பாதங்களில் நந்திகளும் இரண்டில் அன்னப்பறவையும் ஒன்றில் யானையும் மற்றொன்றில் யாளியும் செதுக்கப்பட்டுள்ளன.

கருவறையின் கிழக்குப்பாதங்களில் தனித்த நந்திகளும் முகமண்டபத் தெற்குப்பாதத்தில் இரட்டை நந்திகளும் வடக்குப் பாதத்தில் மூன்று நந்திகளும் காட்டப்பட்டுள்ளன. சிராப்பள்ளி மாவட்டத்தில் துடையூர் விஷமங்களேசுவரர் போன்ற ஒன்றிரண்டு சோழர் காலக் கோயில்களிலேயே நந்திகள் இத்தகு பெருமைநிலை பெற்றுள்ளன. கிழக்குப்பாத நந்திகிரீவநந்திகளைஒத்துள்ளமையும் இங்கு எண்ணத்தக்கது.

வேதிபாதச் சிற்பங்கள் உள்ள சிராப்பள்ளி மாவட்டக் கோயில்களில் எறும்பீசுவரமும் விஷமங்களேசுவரமும் மட்டுமே பதினொரு ஆடற்சிற்பங்களைக் கொண்டுள்ளன. எறும்பியூர்ச் சிற்பங்களுள் ஒன்று சிவபெருமானின் ஆடலாக அமைய, நான்கில் ஆண் இசைக்கலைஞராகவும் பெண் ஆடலரசியாகவும் காட்டப்பட்டுள்ளனர். சிலம்பின் அரங்கேற்றுகாதை குறிப்பிடும் பதினோராடல்களில் ஒன்றான குடக்கூத்து மூன்று பாதங்களில் மிளிர்வதும் தமிழ்நாட்டின் வேறெந்தத் திருக்கோயிலின் பாதச்சிற்பத் தொகுதிகளிலும் காணமுடியாத காட்சியாகும். தனித்த ஆடவர் ஆடல் மூன்று பாதங்களில் பதிவாகியுள்ளது.

பாகவதப் படப்பிடிப்புகளாக கருடன்மீதான விஷ்ணுவும் கண்ணன் உறியிலிருந்து வெண்ணெய் எடுப்பதும் ஆயர்களைப் பெருமழையிலிருந்து காக்க கோவர்த்தனமலையைக் குடையாகப் பிடிப்பதும் தன்னைக் கொல்ல வந்த காளை வடிவ அரக்கனை அடக்கி அழிக்கும் வீரமும் காட்டப்பட்டுள்ளன. இராமாயணப் பக்கங்களிலிருந்து சூர்ப்பனகையின் மூக்கறுப்பும் வாலி, சுக்ரீவப் போரும் வாலிமீது இராமன் அம்பெய்வதும் எடுக்கப்பட்டுள்ளன. வாலி, சுக்ரீவப்போர் மேற்கிலும் வடக்கிலும் இரண்டு முறை காட்டப்பட்டுள்ளமையும் இக்கோயிலுக்கே உரிய தனித்தன்மையதாக விளங்குகிறது.

தமிழ்நாட்டின் வேறெந்தச் சோழர் காலக் கோயிலின் பாதச்சிற்பங்களிலும் இடம்பெறாத அளவிற்கு எறும்பியூர்ப் பாதங்கள் பல்வேறு இறைவடிவங்களை, அவற்றுள் சிலவற்றை அவற்றின் வாகனங்களோடு தம்மில் கொண்டுள்ளன. சிம்மவாகினி, எருமையின் மேல் இயமன், மூஞ்சுறு தாங்கும் பிள்ளையார், குதிரையின் மேல் செண்டேந்திய ஐயனார், பேய்

சுமக்கும் காளி, நந்தியின் மீது மழு ஏந்திய சிவபெருமான், இரட்டையர்களாய்க் கதிரும் நிலவும் ஆகியவற்றுடன் முத்தலைஈட்டியுடன் பாயும் காளியையும் இங்குப் பதிவுசெய்துள்ளனர். இவை தவிர, சடைப்பாரத்துடன் நிற்கும் இருவரும் யாளிப் போர்வீரர் இருவரும் கருடாசன பூதமும் அமர்நிலை அரக்கரும் பத்மநிதியும் எந்தக் குழுவிலும் இணைக்கமுடியாத தனித்த சிற்பங்களாக எறும்பியூர்ப் பாதங்களை அலங்கரிக்கின்றனர்.

சிவபெருமானுக்குரியதான இக்கோயிலில் அவர் தொடர்பான தோற்றங்கள் இலிங்கவழிபாடு, யானையை அழித்தவர், சிவஆடல், நந்தி ஊர்தியர் என மிகமிகக் குறைந்த அளவிலேயே காட்டப்பட்டுள்ளமை அக்காலச் சமயப் பெரும்போக்கைக் காட்டுவதாகக் கொள்ளலாம்.

ஆடற்சிற்பங்கள்

மண்டலநிலையில் இருபாதங்களையும் பார்சுவத்தில் அமைத்து சிவபெருமான் ஆடும் ஆடலுக்கு, கீழே கால்களைக் குறுக்கீடு செய்து வலப்புறம் திரும்பி அமர்ந்திருப்பவர் தம் மடியிலுள்ள குடமுழவை வாசித்தும் இறைவனைப் பார்த்தவாறு இடப்புறம் அமர்ந்திருப்பவர் தாளங்களை இயக்கியும் இசைகூட்ட, ஆடலைப் போற்றுமாறு வலப்புறம் மேலே உள்ள வானவர் கையுயர்த்தியுள்ளார். சடைமகுடம், பனையோலைக் குண்டலங்கள், இடைத்தொங்கல் பெற்ற சிற்றாடை கொண்டு நேர்ப்பார்வையராய் ஆடும் இறைவனின் பின் கைகளில் வலப்புறம் துடி, இடப்புறம் தீயகல். வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை அர்த்தரேசிதமாகியுள்ளது. ஆடும் இறைவனின் இருபுறத்தும் கவரிகள்.

குடக்கூத்துச் சிற்பங்கள் மூன்றனுள் இரண்டில் ஆடவர் தனித்தாட, பெண்ணாடும் குடக்கூத்து இசைக்கலைஞரைப் பெற்றுள்ளது. பாதங்களைப் பார்சுவத்தில் இருத்தி, இடக்கையை அர்த்தரேசிதமாக்கி, இடுப்பை இடப்புறம் நன்கு உயர்த்திச் சிற்பத்தளத்தின்

மூன்றில் இரண்டு பகுதிகளில் பரவியுள்ள பெண் குடக்கூத்துக் கலைஞரின் வலக்கை மேற்பகுதியில் பானை. முழங்கையளவில் மடங்கியுள்ள அக்கையின் கீழ்ப்பகுதி மார்பருகே கடகமாக்கப்பட்டுள்ளது. உயர்த்தி முடித்த கொண்டை, சரப்பளி, கைவளைகள் கொண்டு ஆடும் பெண்ணின் வலப்புறம், அதே அமைப்பிலான கொண்டை, பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, இடைத்தொங்கல் பெற்ற இடுப்புச் சிற்றாடையுடன் உடல் வலப்புறம் திரும்பியிருக்குமாறு செண்டுதாளக் கலைஞராக ஆடவர்.

ஆண் குடக்கூத்தர்களுள் ஒருவர் கரண இளைஞர். வலக்காலை ஊர்த்வஜாநு கரணத்தின் முதல் நிலையில் இருத்தி இடப்பாதத்தைப் பார்சுவமாக்கியுள்ள அவரது இடக்கை முழங்கையளவில் மடங்கி மார்பருகே பதாகமாய் அமைய, மார்பருகே தாழ்ந்துள்ள வலக்கையின் மேற்பகுதியில் பானை. தலையை இலேசாக இடப்புறம் சாய்த்து, வலப்பார்வையராக முக்கோண இடைத்தொங்கல் பெற்ற சிற்றாடையுடன் உச்சிக் கொண்டையும் சரப்பளியும் பெற்றாடும் அவரது பானையின் வாய் நன்கு அகன்றுள்ளது. இரண்டாமவரோ வலப்பாதத்தைப் பார்சுவமாகவும் இடப்பாதத்தை அக்ரதலசஞ்சாரத்திலும் நிறுத்தி, இடக்கையை அர்த்தரேசிதத்தில் வீசி, மார்பருகே மடிந்து இறங்கியுள்ள வலக்கையின் மேற்புறத்தே பானை நிறுத்திக் குடக்கூத்து காட்டுகிறார். இதுவும் வாயகன்ற பானை என்ற போதும் கழுத்தின் குறுக்கம் உயரத்தைக் கூட்டுகிறது. நிறைவடையாத பாதச்சிற்பங்களில் இதுவும் ஒன்று.

தனியர் ஆடலைப் பதிவுசெய்துள்ள மூன்று பாதங்களுள் ஒன்றில் சடைப்பாரம், பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, கைவளைகள், முக்கோணத்தொங்கலுடனான இடைச்சிற்றாடை பெற்று மண்டலத்தில் பார்சுவப் பாதங்களுடன் ஆடும் ஆடவரின் இடக்கை மடிந்து மார்பருகே காட்சிதர, வலக்கை முழங்கை அளவில் மடிந்து மேலுயர்த்தப்பட்டுள்ளது. சுடர்முடி, பனையோலைக் குண்டலங்கள், சுவர்ணவைகாக்ஷம், கைவளைகள், முக்கோணத்தொங்கல் பெற்ற இடைச்சிற்றாடை கொண்டு ஆடும் மற்றோர் ஆடவரின் பாதங்கள் பார்சுவத்தில் அமைய, வலக்கை மேலுயர்த்திய பதாகமாக உள்ளது. இடக்கை நெகிழ்ந்துள்ளது. ஆடவரின் இடப்புறம் அழகிய தோரணம் காட்சிதர, இடையாடையின் முடிச்சுத்தொங்கல்கள் இடப்புறம் காட்டப்படுள்ளன. மூன்றாமவர் சிறுமகுடம், பனையோலைக் குண்டலங்கள், சுவர்ணவைகாக்ஷம், முடிச்சுத்தொங்கல்களுடனான இடைக்கட்டு இருத்தும் சிற்றாடை அணிந்து, மண்டலப் பார்சுவத்தில் வலக்கையில் பதாகம் காட்டி, இடக்கையை அர்த்தரேசிதமாக்கியுள்ளார். தலையின் இடச்சாய்வால் முகம் வலம் திரும்பியுள்ளது.

நான்கு பாதங்களில் ஆண் இசைக்கலைஞருடன் பெண் ஆடற்கலைஞர் இணைந்தாடும் காட்சியைப் பார்க்கமுடிகிறது. அவற்றுள் நிறைவடையாதிருக்கும் பாதச்சிற்பத்தில் வலப்பாதத்தைப் பார்சுவத்தில் திருப்பி, இடக்காலை ஊர்த்வஜாநு கரண முதல் நிலையில் உயர்த்தியுள்ள ஆடற்காரிகையின் இடக்கை மேலுயர்த்திய பதாகமாக அமைய, வலக்கை தொடையில் இருத்தப்பட்டுள்ளது. மண்டலப் பார்சுவத்தில் இடுப்புக்கு மேற்பட்ட உடற்பகுதி வலச்சாய்வில் அமைய, இடத்தோளில் தொங்கும் இடக்கைக் கருவியை வலக்கையால் தட்டிக் கயிற்றுப்புரிகளை இடக்கையால் இளக்கியும் இறுக்கியும் இசைகூட்டுகிறார் ஆடற்பெண்ணின் வலப்புற ஆண் கலைஞர்.

தோரணங்கள் பின்னிருக்கத் தாளக்கலைஞர் வலப்புறத்தும் ஆடற்பெண் இடப்புறத்துமாய்க் காட்சிதரும் மற்றொரு சிற்பத்தில் சடைமகுடம், பனையோலைக் குண்டலங்கள், சிற்றாடை கொண்டு சமபாதத்தில் நின்று ஆடற்கலைஞரை நோக்கியவாறு செண்டுதாளங்களை இயக்கும் இசைஞர் பாதத்தின் மூன்றில் ஒருபகுதியில் விளங்க, ஆடலர் இரண்டு பங்குகளில் பரவியுள்ளார். மண்டலப் பார்சுவத்தில் இடக்கையைத் தொடையில் இருத்தி, வலக்கையில் கடகம் காட்டி ஆடும் அவரும் பனையோலைக் குண்டலங்கள் அணிந்துள்ளார். இடைத் தொங்கலுடனான சிற்றாடையின் முடிச்சுத்தொங்கல்கள் வலக்காலின் புறத்தே ஆட்டநிலைக்கேற்ப நெகிழ்ந்துள்ளன.

ஆடற்பெண் வலப்புறத்தும் இடக்கைக் கலைஞர் இடப்புறத்துமாய் அமைந்த ஆடற்காட்சியில் பெண், சரப்பளி, பனையோலைக் குண்டலங்கள், பட்டாடை அணிந்து, பாதங்கள் இரண்டையும் பார்சுவத்தில் இருத்தி, வலக்கையைப் பதாகமாய் மார்பருகே நிறுத்தி, இடக்கையில் வியப்பு காட்ட, இடப்புறம் சவடியும் சிற்றாடையுமாய் இசையெழுப்பும் இடக்கைக் கலைஞரும் பார்சுவப் பாதங்களுடன் மண்டலநிலையிலேயே காட்சிதருகிறார்.

இதே அமைப்பிலான மற்றொரு சிற்பத்தில் வலக்கை முழங்கையளவில் மடிந்து மேலுயர்த்திய பதாகமாக அமைய, இடக்கையைக் கடியவலம்பிதமாக்கி ஆடும் வலப்பெண் பனையோலைக் குண்டலங்கள், சவடி, இடைத்தொங்கலுடனான சிற்றாடை அணிந்துள்ளார். இடக்கை வாசிக்கும் இடப்புற ஆடவரோ கரண்டமகுடராய்ப் பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி கொண்டு மண்டலநிலையில் பார்சுவப் பாதங்களுடன் காட்சிதருகிறார்.

ஊர்திகளில் இறைவடிவங்கள்

சோழர் கோயில்களின் பாதச்சிற்பங்களில் ஊர்திகளில் அமர்ந்தநிலையில் விஷ்ணு, முருகன் தவிர ஏனைய இறை வடிவங்களைப் பார்ப்பது அரிது. ஆனால், எறும்பியூர் வேதிபாதங்களில் சிவபெருமான், விஷ்ணு, காளி, கொற்றவை, பிள்ளையார், ஐயனார் ஆகியோருடன் எமனும்கூட எருமையில் அமர்ந்த நிலையில் பதிவாகியுள்ளார். வல முன் கை வாள் கொள்ள, இட முன் கை சிங்கத்தின் கழுத்தில் இருக்க, பின்கைகளில் சங்கு, சக்கரம் ஏந்தி சிம்மவாகினியாகக் காட்சிதரும் கொற்றவையின் தலையில் கரண்டமகுடம். பனையோலைக் குண்டலங்கள், சரப்பளி, சுவர்ணவைகாக்ஷம் அணிந்துள்ள இறைவியின் இடையில் பட்டாடை. முதுகு விரிப்புடன் உள்ள சிம்மம் வாலை உயர்த்தி வளைத்தபடி முன்னங்கால்களுள் ஒன்றை உயர்த்தி வாய்திறந்த நிலையில் உள்ளது.

சடைப்பாரத்துடன், வலச்செவியில் பிணக்குண்டலம், இடச்செவியில் பனையோலைக் குண்டலம் அணிந்து, வல முன் கையில் காக்கும் குறிப்புக் காட்டி, இட முன் கையைக்

கடகமாகத் தொடைமேல் இருத்தியுள்ள காளியைத் தன் தோளில் தாங்கும் பெண் பேய் கருடாசனத்தில் திரங்கிய மார்புகளுடன் அமைய, அதன் வலக்கை தொடைமீதுள்ளது. காளியின் வலக்கால் பேயின் வலப்பாதத்தில் அழுந்த, இடப்பாதம் அதன் தோள் மீதுள்ளது. பேயின் இடக்கை காளியின் இடக்காலைத் தழுவித் தாங்க உயர்ந்துள்ளது. காளியின் பின்கைக் கருவிகளை இனங்காண முடியவில்லை.

எருமையின் மீது எமன் ஒரு பாதத்திலும் நந்தியின் மீது சிவபெருமான் ஒரு பாதத்திலும் காட்சிதந்தபோதும் சிற்பங்கள் நிறைவடையாமையால் அவர்தம் தோற்றப்பொலிவை அறியக்கூடவில்லை. சிவபெருமானின் வலப் பின் கையில் மழு. எமன் கைக்கருவி கொடுவாளாகலாம். கருடாசனத்திலுள்ள கருடன் தோள்களில் உத்குடியாசனத்திலுள்ள விஷ்ணுவின் பின் கைகளில் சங்கு, சக்கரம். கிரீடமகுடம் அணிந்துள்ள அவரது வல முன் கை காக்கும் குறிப்புக் காட்ட, இட முன் கை முழங்கால் மீது நெகிழ்ந்துள்ளது. கருடன் இருகைகளாலும் இறைவனின் திருவடிகளைத் தாங்கியுள்ள இச்சிற்பமும் நிறைவுறவில்லை.

இவற்றினின்று மாறுபட்ட நிலையில் ஒரேபாதத்தில் இரு தெய்வங்களாகப் பிள்ளையாரும் ஐயனாரும் அவரவர் ஊர்திகளான மூஞ்சுறு, குதிரை மீதமர்ந்தவர்களாகக் காட்சிதருகின்றனர். கரண்டமகுடத்துடன் இடம்புரியாக உள்ள பிள்ளையாருக்கு மட்டும் இருபுறத்தும் கவரிகளும் மேலே குடையும். பின் கைகளில் அங்குசம், பாசம் கொண்டுள்ள அவரது வல முன் கையில் உடைந்த தந்தமும் இட முன் கையில் மோதகமும் உள்ளன. சடைப்பாரம், பனையோலைக் குண்டலங்களுடன் விளங்கும் ஐயனாரின் வலக்கையில் செண்டு. இடக்கை குதிரையின் கழுத்தைப் பற்றியுள்ளது. பிள்ளையாரின் ஊர்தியான மூஞ்சுறு அமர்நிலையில் காட்சிதர, ஐயனாரின் குதிரை நடைபயில்கிறது.

சிறப்புச் சிற்பங்கள்

ஆடல், ஊர்தி இறைகள் தவிர்த்த சிற்பங்களில் நான்கினை அவற்றின் செதுக்குத் திறத்துக்காகவும் தனித்தன்மைக்காகவும் விரிவாகப் பார்ப்பது பயன்தரும். சோழர் காலப் பாதச்சிற்பங்களில் அரிதாகக் காணப்படும் சூரிய, சந்திரர் இங்கு இணைந்த நிலையில் பறக்கும் கோலத்தில் மிகச் சிறந்த உடலமைப்புடன் காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வலக்கையில் மலர் ஏந்தி, இடக்கையால் போற்றும் அவர்தம் தலை சுற்றி ஒளிவட்டம். இலேசான வலச்சாய்வுடன் முகமும் விண்ணுலாவிற்கேற்ப வளைவுகள் பெற்ற உடலமைப்பும் இச்சிற்பங்களில் மிக நன்றாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

முன்னிரு கைகளில் முத்தலைஈட்டி ஏந்தி, பின் கைகளில் வலப்புறம் கத்தியும் இடப்புறம் கேடயமும் கொண்டு அசுர வேகத்தில் செல்லும் சுடர்முடிக் காளியின் சுந்தரவடிவம் சின்னஞ்சிறு தூண் பாதத்தில் சிறப்பாக வடிக்கப்பட்டுள்ளது. அம்மையின் நெற்றிப்பட்டமும் பனையோலைக் குண்டலங்களும் முடிச்சுத்தொங்கல்களுடன்

இடையாடையை இருத்தும் இடைக்கட்டும் அவர் எழிலுக்கு எழில் சேர்க்கின்றன. முடிச்சுத்தொங்கல்களின் பரவல் காளியின் விரைவை உணர்த்துகின்றன.

காளை வடிவில் வந்த அரக்கனைக் கண்ணன் அழிக்கும் காட்சி பல கோயில்களில் காணப்பட்டாலும் எறும்பியூர்ப் பதிவு இணையற்றது. காளையின் தலையை வலக்கையால் இழுத்துத் தன் பக்கம் திருப்பிய நிலையில் இடக்கையை அதன் முதுகில் ஊன்றி அழுத்தும் கண்ணனின் கோலம் உடலமைப்பு, மெய்ப்பாடு இரண்டு நிலைகளிலும் உச்சத்தைத் தொட்டுள்ளது. ஒரு நிகழ்வை அது நடக்குமாறு போலவே சிற்பமாக்குவது எளிதானதன்று. தேர்ந்த உளித்திறம், கற்பனையாற்றல், நிகழ்வு பற்றிய செயல்தெளிவு ஆகியன இருந்தால்தான் பதிவு காலத்தை விஞ்சி நிற்கும். அவ்வகையில் இங்குள்ள கண்ணன் காளையழிக்கும் காட்சி தமிழ்நாட்டின் வேறெந்தக் கோயில் பதிவிலும் பார்க்கமுடியாத சிற்ப அற்புதமாக விளைந்துள்ளது.

சிராப்பள்ளி மாவட்டச் சோழர் கோயில்கள் பலவற்றில் வேதிபாதச் சிற்பங்களைக் காணமுடிந்தாலும் எறும்பியூர்ச் சிற்பங்கள் அவற்றின் ஆடல் காட்சிகளாலும் ஊர்திகளிலான இறை வடிவங்களாலும் தனித்துவம் பெற்றுள்ளன.

Thirukkural

In English - Dr. Chandrika Subramanian

1. The Praise of God

1. A leads all letters; the Ancient Almighty leads the cosmic life and its evolution.

2. God is perfect knowledge. Learning is vain without worshipping His feet and walking His path.

3. God walks on the psychic bloom. Long they live on the earth who clasp His feet.

4. They alone surmount the miseries of existence who surrender at the feet of God who is void of desire or aversion.

5. They get free from dark dual throngs who hail the Glory of God.

6. The Master of five senses, His path is Truth. They prosper long in the world who follow it.

7. God is unequalled, non gets rid of mental worries without surrender at His feet.

8. God is the ocean of virtues. Who touch His feet swim the sea of vicious destiny.

9. That head is vain which bows not to the Lord of eight virtues. It is like senses inert and inept.

10. They alone cross the sea of births who adore the feet of God the mystic Pilot; none else.

ஆதித்தமிழ்க் கடவுள் முருகன்: சூரசம்காரத்தின் மெய்ப்பொருளும் ஞானத் திருமணமும்

அண்ணாமலை சுகுமாரன்
சித்தரியல் ஆய்வாளர், புதுவை

யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கணியன் பூங்குன்றனாரின் வாக்கு, உலகெங்கும் பரவிய தமிழினத்தின் உலகளாவிய பார்வையை மட்டுமல்ல, அத்தமிழினம் தன்னுடன் கொண்டு சென்ற தனது பண்பாட்டு வேர்களையும் குறிக்கிறது. அத்தகைய ஆதி வேர்களில் முதன்மையானது, தமிழர்களின் ஆதி முழுமுதற் கடவுளான முருகப்பெருமானின் வழிபாடு. "சேயோன் மேய மைவரை உலகமும்" எனத் தொல்காப்பியம் குறிப்பிடும் குறிஞ்சி நிலத்தின் தலைவன் அவனே. கந்தன், வேலவன், முருகன் எனப் பற்பல பெயர்களால் அழைக்கப்படும் அவன், காலப்போக்கில் புராண இணைப்புகளால் சிவனின் தம்பியானான் (சில மரபுகளில் மகனானான்) என்பது பிற்காலத்திய தனி வரலாறு. ஆனால், தமிழர்கள் சென்ற இடமெல்லாம் தங்கள் இறைவனான முருகனையும் உடன் கொண்டு சென்றனர். இன்று உலகெங்கிலும் தமிழர் வாழும் நாடுகளில் கந்தர் சஷ்டி விழாவும், அதன் உச்ச நிகழ்வான சூரசம்காரமும் சீரோடும் சிறப்போடும் கொண்டாடப்படுவது இதன் சான்றாகும்.

தமிழர்களின் ஆதி கடவுளாக முருகன் விளங்கினார். சங்க இலக்கியங்களில், முருகன் குறிஞ்சி நிலத்தின் தெய்வமாக, வேடர்களின் காவல் தெய்வமாக, வேல் ஏந்திய இளைஞனாக புனையப்பட்டார். "திருமுருகாற்றுப்படை"யில், நக்கீரர் முருகனை ஆறு முகங்களுடன், ஆறு புனித தலங்களுடன், ஞானத்தின் வடிவமாக விவரிக்கிறார். ஆனால், பிற்காலத்தில், சைவ சமயத்தின் வளர்ச்சியுடன், முருகன் சிவனின் மகனாகவும், கணபதியின் தம்பியாகவும் புராணங்களில் இணைக்கப்பட்டார். இந்த மாற்றம் தமிழர்களின் பண்பாட்டு ஒருங்கிணைப்பின் அடையாளம் – தமிழ் மரபு, வடமொழி புராணங்களுடன் இணைந்து, முருகனை உலகளாவிய தெய்வமாக உயர்த்தியது.

முருகனின் வழிபாடு தமிழகத்தைத் தாண்டி, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரிஷியஸ், தென்னாப்பிரிக்கா, மற்றும் புலம்பெயர் தமிழர்கள் வாழும் உலகின் பல பகுதிகளுக்கு பரவியது. எங்கெல்லாம் தமிழர், அங்கெல்லாம் முருகன்! அவரது திருவிழாக்கள், குறிப்பாக கந்தர் சஷ்டி, தமிழர்களின் ஒற்றுமையையும் ஆன்மிக உணர்வையும் பறைசாற்றுகின்றன.

ஆனால், ‘‘சூரசம்காரம்" என்பது வெறுமனே ஒரு போரின் வெற்றியைக் கொண்டாடும் நிகழ்வா? இல்லை. அதன் பின்னால் ஆழமான தத்துவார்த்த உண்மையும், மனித வாழ்வின் உயர்நிலைக்கான வழிகாட்டுதலும் மறைந்துள்ளன.

கந்தர் சஷ்டி: ஆன்மிகப் பயணம்

கந்தர் சஷ்டி, ஆறு நாட்கள் நடைபெறும் திருவிழா, முருகனின் வீரத்தையும் ஞானத்தையும் கொண்டாடுகிறது. இந்த விழாவின் உச்சகட்டம் சூரசம்ஹாரம் – சூரபத்மனை முருகன் வெற்றி கொள்ளும் நிகழ்வு. இது வெறும் புராணக் கதையல்ல, மாறாக, மனித மனதின் ஆணவம், கன்மம், மற்றும் மாயையை அழிக்கும் தத்துவப் பயணம்.

சூரசம்ஹாரம் என்றால் என்ன?

சூரசம்ஹாரம், முருகன் தாரகாசுரன், சிங்கமுகாசுரன், மற்றும் சூரபத்மன் ஆகிய அசுரர்களை வெற்றி கொள்ளும் கதை. ஆனால், இது உருவகமாக (allegory) மனிதனின் உள் பகைவர்களை – ஆணவம் (arrogance), கன்மம் (karmic bondage), மற்றும் மாயை (illusion) – அழிப்பதைக் குறிக்கிறது. சூரபத்மன், ஆணவத்தின் உருவகம், முருகனின் வேல் மூலம் வெல்லப்படுகிறான். ஆனால், முருகன் அவனை அழிக்கவில்லை; மாறாக, அவனை சேவல் (ஞானத்தின் சின்னம்) மற்றும் மயில் (அழகு மற்றும் அருளின் சின்னம்) ஆக மாற்றி அருள்கிறார். இது "சம்ஹாரம்" என்பது அழிப்பு அல்ல, மாறாக உயர்ந்த மாற்றம் (transformation) என்பதை உணர்த்துகிறது.

சாமகாரம் மற்றும் ஹாரம்:

‘‘சம்ஹாரம்" என்ற சொல், ‘‘சம்" (உயர்ந்த, முழுமையான) மற்றும் "ஹாரம்" (மாலை, அருள்) எனப் பிரிக்கப்படுகிறது. இது முழுமையான மாற்றத்தைக் குறிக்கிறது – ஆணவத்தை ஞான ஒளியால் அழித்து, மனிதனை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வது. இதற்கு இச்சாசக்தி (வள்ளி – ஆசை, உணர்வு) மற்றும் கிரியாசக்தி (தேவயானை – செயல், பக்தி) தேவை. இதனாலேயே, சூரசம்ஹாரத்தைத் தொடர்ந்து வள்ளி-தேவயானை

திருமணம் கொண்டாடப்படுகிறது, இது மனித மனதின் ஞானத்துடன் இணைந்த ஆன்மிக ஒற்றுமையைக் குறிக்கிறது.

சூரசம்ஹாரம், தமிழ் சைவ சமயத்தின் தத்துவ மையமாக உள்ளது. "திருப்புகழ்" மற்றும் "கந்தர் சஷ்டி கவசம்" போன்ற இலக்கியங்கள் இதை வீரமாகவும், ஆன்மிகமாகவும் விவரிக்கின்றன. முருகனின் வேல், ஞானத்தின் சின்னம், உபநிடதங்களில் குறிப்பிடப்படும் "பிரம்மாஸ்திரத்தை" ஒத்ததாகக் கருதப்படுகிறது. ஆய்வு ரீதியாக, இது தமிழர்களின் உளவியல் மற்றும் தத்துவ சிந்தனையை வெளிப்படுத்துகிறது – ஆணவத்தை அழித்து, அருளை பரப்புவது.

சூரசம்ஹாரத்தின் கலாச்சார முக்கியத்துவம்

உலகெங்கும் தமிழர்கள் வாழும் இடங்களில் – இலங்கையில் பரந்தன், மலேசியாவில் பத்து மலை, சிங்கப்பூரில் திருவேற்காடு – சூரசம்ஹாரம் திருவிழாவாக கொண்டாடப்படுகிறது. இது ஒரு நாடக வடிவில் *(theatrical performance)* முருகனின் வீரத்தை வெளிப்படுத்துகிறது. கோயில்களில், சூரபத்மனின் உருவத்தை எரிப்பது அல்லது வேலால் தாக்குவது போன்ற காட்சிகள் மக்களை உற்சாகப்படுத்துகின்றன.

மும்மலங்களும் மூன்று அசுரர்களும்:*

சைவ சித்தாந்தம், மனித ஆன்மாவைப் பிணைத்திருக்கும் மூன்று மலங்களைக் (குற்றங்களைக்) குறிப்பிடுகிறது. அவை: *ஆணவம், கன்மம், மாயை.*

1. ஆணவம் *(Aanavam):** ‘நான்' எனும் அகந்தை, செருக்கு. இதுவே அனைத்துத் தீமைகளுக்கும் மூல காரணம். "அகத்தில் இருப்பது" அகங்காரம்.
2. கன்மம் *(Kanmam):** நாம் செய்யும் நல்வினை, தீவினைகளின் பயன். இது பிறவிச் சுழற்சிக்குக் காரணமாகிறது.
3. மாயை *(Maayai):** உலகப் பொருட்களை உண்மையானவை என நம்பச் செய்யும் தோற்ற மயக்கம்; பற்று.

கந்தபுராணத்தில், இந்த மூன்று மலங்களே மூன்று கொடிய அசுரர்களாக உருவகப்படுத்தப்படுகின்றன. தாரகாசுரன் (மாயையின் வடிவம்), சிங்கமுக சூரன் (கன்மத்தின் வடிவம்), மற்றும் இவர்களுக்கெல்லாம் தலைவனும், ஆணவத்தின் முழு உருவமுமான சூரபத்மன்.

சம்காரம் என்பது அழித்தலா? ஆட்கொள்ளுதலா?

சூரசம்காரத்தின் உச்சகட்ட நிகழ்வைக் கவனியுங்கள். முருகப்பெருமான் தனது ஞானத்தின் வடிவமான ‘வேல்' கொண்டு சூரனை அழிக்க முற்படுகையில், அவன் மாமரமாக மாறுகிறான். வேல் அந்த மரத்தைப் பிளக்கிறது. ஆனால், சூரபத்மன் முற்றிலுமாக அழிக்கப்படவில்லை. இதுவே இந்நிகழ்வின் சூட்சுமம்.

"சம்காரம்" என்ற சொல்லின் ஆழம்:

“சம்காரம்" என்ற சொல்லை நாம் பொதுவாக ‘அழித்தல்' அல்லது ‘கொன்றொழித்தல்' என்ற பொருளிலேயே பயன்படுத்துகிறோம். ஆனால், , அதன் வேர்ச்சொல் வேறு பொருளைத் தருகிறது.

* *சம் (Sam) = உயர்வானது, முழுமையானது, நிறைவானது.*
* *ஹாரம் (Haram) = மாலை (Garland).*

ஆகவே, “சூர-சம்-ஹாரம்" என்பது, சூரனை அழிப்பது என்பதை விட, “சூரனை ஆட்கொண்ட உயர்வான, முழுமையான செயல்" அல்லது "அருள்மாலை சூட்டிய நிகழ்வு" எனப் பொருள் கொள்வதே சாலச் சிறந்ததாகும். ஆணவத்தை ஞானத்தால் வென்று, அதனையும் தன்வயப்படுத்தி, முழுமையாக்கும் உன்னத நிகழ்வே இது.

*அவன் பிளவுபட்ட இரு கூறுகளும், *சேவல் (Rooster)* மற்றும் *மயில் (Peacock)* ஆக மாறுகின்றன. முருகப்பெருமான் அந்த இரண்டையும் ஆட்கொள்கிறார். மயிலைத் தனது வாகனமாகவும் (Vehicle), சேவலைத் தனது கொடியாகவும் (Emblem) ஏற்றுக்கொள்கிறார்.*

இதன் தத்துவம் என்ன? ஆணவம் (சூரன்) முற்றிலுமாக ‘அழிக்கப்பட்டால்' அங்கே இயக்கம் நின்றுவிடும். மாறாக, அது ‘ஆட்கொள்ளப்பட'வேண்டும்; கட்டுப்படுத்தப்பட்டு, நல்வழிப்படுத்தப்பட வேண்டும். பேரறிவாகிய ஞானம் (வேல்) தலையிடும்போது, கட்டுக்கடங்காத ஆணவம், இறைவனையே தாங்கிச் செல்லும் வாகனமாக (மயில்) மாறுகிறது. அறியாமையின் இருளைக் கிழித்து, ஞானத்தின் வரவைக் கூவி அறிவிக்கும் நாதமாக (சேவல் கொடி) மாறுகிறது. இது அழித்தல் அல்ல; இது ஆட்கொள்ளுதல். இது அருட்பெருஞ் செயல்.

ஞானத்திற்குத் தேவை செயலாற்றல் (இச்சா சக்தி, கிரியா சக்தி):

சூரசம்காரம் முடிந்துவிட்டது. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள் ஞானத்தால் (வேலால்) வெல்லப்பட்டுவிட்டன. ஆன்மா தூய்மையடைந்தது. ஆனால், அத்துடன் ஆன்மீகப் பயணம் முடிந்துவிடுகிறதா? இல்லை.

ஞானம் மட்டும் தனித்து இயங்காது. ‘அறிவு' (ஞானம்) இருக்கிறது; ஆனால் அந்த அறிவைச் செயல்படுத்த ‘விருப்பமும்' (Will) ‘செயலும்' (Action) தேவை. இந்தத் தத்துவத்தையே சூரசம்காரத்திற்கு அடுத்த நாள் நடக்கும் "திருக்கல்யாணம்" உணர்த்துகிறது.

முருகப்பெருமான் ஞான சக்தி (வேல்) ஸ்வரூபமானவர். அவர் தனது பயணத்தை முழுமையாக்க, மேலும் இரண்டு சக்திகளை மணக்கிறார்:

1. *இச்சா சக்தி (Ichha Sakthi - விழைவாற்றல்):* எதையும் செய்ய வேண்டும் என்ற ‘விருப்பம்' அல்லது ‘ஆற்றல்'. இவளே குறமகள் *வள்ளி*.*
2. *கிரியா சக்தி (Kriya Sakthi - செயலாற்றல்):* அந்த விருப்பத்தைச் செயல்படுத்தத் தேவையான ‘செயல்' அல்லது ‘ஆற்றல்'. இவளே தேவர்களின் மகளான *தெய்வயானை*.*

ஞானம் (முருகன்), விருப்பம் (வள்ளி) மற்றும் செயல் (தெய்வயானை) ஆகிய மூன்றும் இணையும்போதுதான் வாழ்வு முழுமையடைகிறது. அகந்தையை வெல்வது (சூரசம்காரம்) முதல் படி. அந்த ஞானத்தைக் கொண்டு, விருப்பத்துடன் செயலாற்றுவதே (திருக்கல்யாணம்) வாழ்வின் நிறைவு.

*முடிவுரை:***

கந்தர் சஷ்டி என்பது வெறும் விழா அல்ல. அது மனிதனின் அகப்பயணத்தின் குறியீடு. ஆறு நாட்கள் விரதமிருந்து, நம்முள்ளே இருக்கும் ஆணவம், கன்மம், மாயை எனும் அசுரர்களை, முருகனின் ஞானமாகிய வேல் கொண்டு பிளந்து, அந்த ஆணவத்தையே நமது வாகனமாக்கி, பின்பு ஞானத்துடன் நமது விருப்பத்தையும் (இச்சா சக்தி) செயலையும் (கிரியா சக்தி) இணைத்து, ஒரு முழுமையான, நிறைவான வாழ்வை வாழ்வதே சூரசம்காரமும் திருக்கல்யாணமும் நமக்கு உணர்த்தும் மெய்ப்பொருள். இதுவே ஆதித்தமிழன் கண்ட வாழ்வியல் தத்துவம்.

வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா! ஞானவேல் முருகனுக்கு அரோகரா!

புதிய ஒரு பாடல்

சந்தம்:

*தனதன தந்தன தனதன தந்தன
தனதன தந்தன ...... தனதான*

*அகமெனு மொன்றெழும் ஆணவ மும்பொடி
படவரு கன்மமும் மாயையு மென்றிடு
அசுரரை வென்றிடு ...... கதிர்வேலா!*

*“சம"மது வுயர்வென "ஹாரமு" மாலையாய்
அருள்வது தந்திடு ஞானமு மாகியே
அவனைநீ ஆட்கொடு ...... மயிலோனே!*

*அறிவது வென்றபின் ஆற்றல்கள் வேண்டியே
விழைவது (இச்சை) கிரியையு மாயிரு சக்திகள்
அணையவே கல்யாண ...... பெருமாளே!*

*முருகனே கந்தனே ஆதித் தமிழர்தம்
முதல்வனே எங்கள்தம் வாழ்வினை வந்தருள்
குருபர என்றுமை ...... துணையாரே!*

Glimpses of Kamba Ramayanam - Book review

Geetha Mathivanan (Writer)
Sydney

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்,
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை,
உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை – பாரதி

For generations, the Tamil people have revered Kamban for his extraordinary poetic genius and his unsurpassed mastery of the Tamil language. The Kamba Ramayanam stands as an enduring testament to his epic vision and poetic excellence, celebrated and cherished across the ages.

The linguist and eminent Tamil scholar V. V. S. Aiyer, in his book "Kamba Ramayanam – A study" written in 1917, offered a comparative study of Kamban with other poets, highlighting the distinctive qualities of his style, diction, and poetic imagination.

"The title 'Kavi Chakravarthi,' bestowed by our ancestors, was not a mere expression of praise; it was a proclamation of truth. All who deserve to be hailed as emperors in the realm of poetry must bow their heads in reverence at the shrine of Kamban. Homer, Virgil, Dante, Shakespeare, Milton, Molière, and Goethe—celebrated as the greatest poets of the Western classics—stand below Kamban in the highest domains of poetic achievement and have not surpassed him. Even within our own land, when illustrious poets such as Ilango Adigal, Kachiappar, Sathanar, Tulsidas and Kalidasa are compared with Kamban, the balance does not tilt in their favour."

Aiyer even dares to summon Vyasa and Valmiki themselves to comparison. He points out that since the Vyasa Bharatham is a Samhita—a sacred compilation of Vedic hymns—it is not appropriate to place it alongside the Kamba Ramayanam for comparison. Yet he maintains that if the comparison is made purely on poetic grounds, the Kamba Ramayanam is at least equal to the Vyasa Bharatham and does not fall short of it by even the smallest measure. He further states that an impartial, diligent and patient reading of the Valmiki Ramayanam and the Kamba Ramayanam inevitably leads one to conclude that the later has surpassed the former.

What is the benefit of keeping the phenomenal 'Kavi chakravarthi' Kamban, who is at the forefront of the world's greatest poets, within the confines of Tamil?

With the aim of bringing Kamban's poetry to non-Tamil readers, allowing them to experience the full richness of the Kamba Ramayanam without diminishing its beauty, and enabling the next generation of Tamils, educated primarily in English, to marvel at Kamban's profound mastery of Tamil, Dr. Chandrika Subramaniyan has undertaken a truly remarkable endeavour. By carefully rendering complex Tamil verses intelligible in English, she has made this monumental work accessible without diluting its essence, thereby accomplishing this noble task with distinction.

We extend our heartfelt gratitude to her children, whose encouragement played a vital role in bringing this work on Kamba Ramayanam to fruition.

Those who are proficient in languages can easily translate short stories, essays or novels. But epics? And that too without losing their poetic beauty?

Poetry is what gets lost in translation – Robert Frost

It is a great challenge to transmit the language of one land without distorting its culture and tradition to the language of another land that is completely unfamiliar with the previous one. Dr. Chandrika Subramaniyan has handled that challenge with great ease and has succeeded in doing so.



From more than ten thousand songs comprising the 118 patalams of Kamba ramayanam, selecting only 100 songs is not an easy task.

The author has elucidated Parasurama patalam which contains nearly 50 poems, with just two songs. By choosing a song in which Raman asks why he should and shouldn't kill Parasuraman, and an another song in which Parasuraman answers, the Parasuraman story is explained in an easy way to the readers.

For a complete understanding of the epic, a brief explanation of each kandam is given in a very simple form as an introduction.

The English meanings of Tamil words unfamiliar to non-Tamil readers and their explanations are given in an easy-to-understand manner.

The author clearly shows the effort taken by not referring '*கவுரி*' as 'flywhisk' in common, but as 'Yak-hair fan'.

She explains *'தாரை வார்த்தல்'* as 'pouring the holy water' and with added information that it is one of the sacred rituals of a marriage ceremony.

காற்று வந்து அசைத்தலும்– By referring to them as '*சஞ்சீவி மலையின் காற்று அசைந்து வந்து படவும்*' in Tamil and 'The medicinal air from the Herbal Mountain touched' in English, she leads the readers to understand the meaning of 'air' in that particular song.

Another thing that impressed me a lot is that the characters of the Kamba Ramayanam are mentioned as Raman (ராமன்), Bharathan (பரதன்), Seethai (சீதை), Lakshmanan (லக்ஷ்மணன்), Anuman (அனுமன்), Ravanan (ராவணன்), Vibeeshanan (விபீஷணன்), Kumbhakarnan (கும்பகர்ணன்) as in Tamil.

This book, Glimpses of Kamba Ramayanam, is a great testament to Dr. Chandrika Subramaniyan's intense love for Tamil and her deep commitment to carrying forward the epic excellence of Tamil across country, language, religion, race and generations.

மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளி நாட்டோர்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும் – பாரதி

I am pleased to congratulate Dr. Chandrika Subramaniyan on her excellent work and express my hope that this book will reach readers around the world and fulfil the purpose of this wonderful project.

கார்ல் சாகனின் வெளிர் நீலப் புள்ளி

தேமொழி
சான் ஃபிரான்சிஸ்கோ

கார்ல் சாகன் (1934-1996), ஒரு புகழ்பெற்ற அமெரிக்க வானியலாளர், வானியற்பியலாளர், அண்டவியல் ஆய்வாளர். சிக்கலான அறிவியல் கருத்துக்களை எளிய முறையில் தெளிவிக்கக்கூடிய வகையில் உரையாற்றக் கூடிய வல்லமை பெற்றிருந்த அறிவியல் உரையாளராக அறியப்பட்டதால் மக்களிடம் அவர் உரைகளுக்கு நல்ல செல்வாக்கு இருந்தது.

கார்ல் சாகனின் ஆலோசனையின் பேரில், 1990 பிப்ரவரி 14 அன்று விண்கலம் வாயேஜர் -1 புவியின் சுற்றுப்புறத்தை விட்டு சூரிய மண்டலத்தின் விளிம்புகளுக்குப் புறப்படும்போது, புவியை இறுதியாக ஒருமுறை சுற்றிவந்து படம் எடுத்தது. புவியின் இந்த வெளிர் நீலப் புள்ளி உருவப்படத்தைப் படம்பிடித்தபோது வாயேஜர்-1 விண்கலம் சுமார் 4 பில்லியன் மைல்கள் தொலைவில் இருந்தது, சிதறிய ஒளிக்கதிர்களின் இடையே சூரியனுக்கு மிக அருகில் படம் எடுத்ததன் விளைவாக, இப்படத்தில் பூமி, ஒரு சிறிய ஒளிப் புள்ளியாக, 0.12 பிக்சல் அளவுள்ள வெளிர் நீலப் புள்ளியாகத் தெரிகிறது.



கார்ல் சாகன் எழுதிய "பேல் ப்ளூ டாட்: எ விஷன் ஆஃப் தெ ஹியூமன் ஃப்யூச்சர் இன் ஸ்பேஸ்" (Pale Blue Dot: A Vision of the Human Future in Space by Carl Sagan) என்ற நூல் அதிகம் விற்பனையான நூல்களுள் ஒன்று. இது விண்வெளி ஆய்வின் தேவையை வலியுறுத்தியது. கார்ல் சாகனின் 'வெளிர் நீலப் புள்ளி: விண்ணை நோக்கிய பார்வையால் உணரும் மனிதர்களின் எதிர்காலம்' என்ற இந்த நூலின் கருத்து மிகவும் பரவலாக வாசிக்கப்படு பாராட்டப்படும் ஒரு கட்டுரை. அதன் மொழிபெயர்ப்பு கீழே தரப்பட்டுள்ளது.

நாம் விண்வெளிக்குச் சென்று அங்கிருந்து புவியைப் பார்த்தால், அது ஒரு சிறிய புள்ளியாகத் தான் தெரியும்...

“மீண்டும் அந்தப் புள்ளியைப் பாருங்கள். அதோ அங்கே. அதுவே நம் வீடு. அதுவே நாம் இருக்குமிடம். அங்குதான் நீங்கள் விரும்பும் அனைவரும், நீங்கள் அறிந்த அனைவரும், நீங்கள் எப்போதாவது கேள்விப்பட்ட அனைவரும், இதுவரை வாழ்ந்த ஒவ்வொரு மனிதரும் தங்கள் வாழ்கையை அங்கேயே வாழ்ந்தார்கள்.

நமக்கு மகிழ்ச்சியும் துயரமும் தரும் அனைத்தும், நம்பிக்கை தருவதற்குத் தோன்றிய ஆயிரக்கணக்கான மதங்கள், கொள்கைகள், பொருளாதாரக் கோட்பாடுகள், வேட்டையாடியும் சேகரித்தும் வாழ்ந்த முன்னோர்கள் அனைவரும், ஒவ்வொரு வீரரும் கோழையும், ஒவ்வொரு பண்பாட்டை ஆக்கியவரும் அழித்தவரும், ஒவ்வொரு அரசரும் உழவரும், காதலிக்கும் இளவயது இணையர்கள் அனைவரும், ஒவ்வொரு தாயும் தந்தையும், வாழ்க்கையில் நம்பிக்கை கொண்டுள்ள ஒவ்வொரு குழந்தையும், கண்டுபிடிப்பாளர்களும் ஆய்வாளர்களும், ஒவ்வொரு வாழ்வியல் நெறி வழிகாட்டியும், ஒவ்வொரு ஊழல் அரசியல்வாதியும், ஒவ்வொரு ‘சூப்பர் ஸ்டார்’ பிரபலங்களும், ஒவ்வொரு ‘உயர்வாக மதிக்கப்பட்டத் தலைவர்களும்’, ஒவ்வொரு புனிதரும் பாவியும் என நம் மனிதயின வரலாற்றில் வாழ்ந்த அனைவரும் அந்தச் சூரிய ஒளிக்கதிரில் மிதக்கும் தூசித் துகள் போலத் தெரியும் அந்தச் சிறு புள்ளியில்தான் வாழ்ந்தார்கள்.

பரந்த பிரபஞ்ச அரங்கில் பூமி என்பது மிகச் சிறிய மேடையே. இந்த ஒரு சிறு புள்ளியின் ஒரு மூலையில் வாழ்பவர்கள், தாங்கள் சென்ற இடத்தில் தம்மைப் போலவே இருக்கும் உலகின் மற்றொரு மூலையில் வாழ்பவர்களுக்கு இழைத்த முடிவில்லா கொடூரங்களை எண்ணிப் பாருங்கள். அவர்கள் ஒருவரையொருவர் அடிக்கடி எவ்வளவு தவறாகப் புரிந்து கொள்கிறார்கள், எவ்வளவு ஆவலுடன் ஒருவரையொருவர் கொல்லத் தயாராக இருக்கிறார்கள், எவ்வளவு தீவிரமான வெறுப்பை அவர்கள் வளர்த்துக் கொள்கிறார்கள் என்பதை நினையுங்கள். பெருமையும் வெற்றியும் அடைய வேண்டும் என்று, இந்தப் புள்ளியின் ஒரு சிறு பகுதியினைத் தற்காலிகமாக ஆதிக்கம் செய்யும் ஆசையில், எத்தனை தளபதிகளும்



THE PALE BLUE DOT OF EARTH "That's here. That's Home. That's us." Image: NASA / JPL
Copyright © 1994

பேரரசர்களும் இரத்த ஆறுகளை மண்ணில் ஓட்டவிட்டார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள்.

நம்முடைய தோரணைகள், கற்பனையான நமது முக்கியத்துவம் என்ற உணர்வு, பிரபஞ்சத்தில் நமக்கு ஒரு தனிச் சிறப்பிடம் இருக்கிறது என்று கருதும் அறியாமை ஆகியவற்றை எல்லாம் இந்த வெளிர்நீலப் புள்ளி சவாலுக்கு உள்ளாக்குகிறது. இந்தப் பரந்த, அனைத்தையும் சூழ்ந்த பெரிய அண்டவெளி இருளில், நம் பூமி ஒரு தனிமையான சிறு துகள் மட்டுமே. இந்தப் பரந்த அண்ட வெளியில் நம்மிடமிருந்து நம்மையே காப்பாற்ற வேறு எங்கிருந்தாவது உதவி வரும் என்பதற்கு எந்த ஓர் அறிகுறியும் இல்லை.

இதுவரை உயிர் வாழத் தகுதியான உலகமாக அறியப்பட்ட ஒரே இடம் பூமி தான். வேறு எங்கும், நாம் எதிர்நோக்கும் குறைந்த அளவு எதிர்காலத்தில், மனித இடம் குடியேற வேறிடம் ஏதும் கிடையாது. ஆமாம். வேறு கோள்களுக்குச் சென்று வரமுடியும், —ஆனால் குடியேற இன்னமும் வாய்ப்பில்லை. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், இப்பொழுது வாழ நமக்கு இருக்கும் ஒரே இடம் இந்தப் பூமிதான்.

வானியல் உண்மைகள் மனிதரிடம் பணிவு மனப்பான்மையை, பண்பை உருவாக்கும் அனுபவம் என்று சொல்லப்படுகிறது. நாம் காணும் நமது சிறிய உலகின் இந்தத் தொலைதூர உருவத்தை விட மனித அகந்தையை அறியாமையை உணர்த்தும் சிறந்த சான்று வேறொன்றும் இல்லை.

எனக்கு இது, நாம் ஒருவருக்கொருவர் மிகவும் அன்பாக நடந்து கொள்ள வேண்டிய பொறுப்பையும், இதுவரை நாம் அறிந்த ஒரே இல்லமான இந்த மங்கலான வெளிர் நீலப் புள்ளியைப் பாதுகாத்து, மதித்து, நேசிக்க வேண்டிய கடமையையும் வலியுறுத்துகிறது.”

— கார்ல் சேகன், பேல் ப்ளூ டாட்: எ விஷன் ஆஃப் தெ ஹியூமன் ஃப்யூச்சர் இன் ஸ்பேஸ்

உதவிய தளங்கள் :

- *காணொளி: https://youtu.be/tgQ1PtkZvGU*
- *தகவல்:* https://www.planetary.org/worlds/pale-blue-dot

Rare Thiruppugazhs of Arunagirinathar

Akshayan Manivannan
Sydney

Arunagirinathar, the 14th century sage who was devoted to Lord Murukan, is widely considered one of the greatest poets ever to have lived due to his impossible grasp of rhythm. Although he is said to have composed 16000 such Thiruppugazh songs, we have only 1300 available to us now. This article looks at some of the lesser known Thiruppugazh compositions, under various categories:

Life History

The life history of Arunagirinathar is quite well known. He spent his early years seeking sensual pleasures, losing both his family wealth and his physical health. Later in his life, he looks back on this chapter with pain, singing of his reluctance to follow the advice of wise well-wishers:

> With words like nectar,
> the great virtuous One*
> graced me with knowledge of the righteous path –
> yet I was called the fool, the lowly one,
> who knew not to follow his words.
> (Excerpt from kamala kumiLitha)

* The legendary commentator of Arunagirinathar's works, Sengalvaraaya Pillai, notes that "the great virtuous One" is likely a reference to the presiding deity of Arunagirinathar's hometown – Annamalaiyaar, who came down in the form of a sage out of compassion, to correct Arunagirinathar's ways.

However, not following this advice, Arunagirinathar spends some more time in pursuit of material pleasures which leads to him developing the dreaded leprosy disease. Shunned by his relatives and society, and truly understanding the weight of his past sins, he sees no other way to live and climbs up the high gopuram of the Annamalai temple, in order to end his life. As the popular story goes, he jumps off shouting "Murukaaaa", but just as he is about hit the ground he falls into the arms of Lord Murukan.

There is no direct reference to this incident in the works of Arunagirinathar as we have them today. Remember that approximately 14,700 thiruppugazh songs aren't available to us now, and these may have contained a recount of this event. Overall. it is impossible to

verify the accuracy of this legend. However, it is undeniable that Murukan did reveal himself to Arunagirinathar on that fateful day and did grace him:

In order to impress the bright effulgence of Sivam in my heart,

He came mounting the peacock, spreading his tender, radiant smile
to speak words of wisdom.
Could I ever now forget his cool eyes, and his twin flowery feet? *
(Excerpt from kurambai malasalam)
To provide sweet grace and rule over me,
He came in Annamalai, with his band of devotees.
In either dream or in my life can I ever forget,
His lotus-like feet, adorned with the anklet,
which came for my sake, as the Vedas resounded on all sides?
(Excerpt from kumara gurupara guNathara)

* The initiation of a devotee into Saivam happens through deekshai, a specific ritual performed by a qualified guru. This song alone contains references to many different forms of deekshai, through verbal instruction, through benign eyesight and through the guru placing his feet on the devotee's head. This last form of deekshai is called thiruvadi deekshai and is considered the most exclusive. Arunagirinthar sings in many places of thiruvadi deekshai given to him by Murukan.

Following the grace provided by Murukan, we see in his poetry lesser-known episodes in his life, though equally as important:

He with matted locks of hair,
adorned with the fragrant konrai wreath,
blessed me with the white sacred ash,
so that all my sadness was eradicated.
...
The bright personification of bliss – Valli, who touched me
so that my two-fold karmas and the primal faults * of lowly me
were completely destroyed,
(Excerpts from thamizhOthiya)

* the three malas (sense of self, karma and illusion) which prevent the soul from reaching God

The first excerpt relates how Siva (of matted locks and konrai flower) bestowed the sacred ash upon Arunagirinathar, (a similar grace can be found in the life history of other sages too, such as Maanickavaasagar). The second is a direct recollection of what is known as sparisa deekshai, where the head of the devotee is caressed by the hand of the guru, in this case Murukan's consort Valli!

Ambikai

Arunagirinathar was a huge devotee of Parvati. This has lead some to speculate that he was actually of the Sakta sect. This can also be seen in many Thiruppugazhs such as the beautiful amudhamooru which consists mostly of Ambikai namavali (listing various names of the God in succession). A rarer song is the following. See how beautifully he describes the form of Ambikai:

She has breasts like bright green mountains
and locks of hair sought in delight by bees.
Her kayal-fish like eyes are lotuses,
bright as the sharp sword.
White pearls wrought of wisdom and devotion
make up her radiant smile.
She has a forehead shaped like a bow,
and her coral lips are like the senpaka flower.

She is beauty experienced only through divine realization –
She is the enchanting Parvati, the parrot-like One
of slender waist, thin as both lighting and thread.
(Excerpt from pachchai oNgiri)

Lamentation with the self

A big reason why texts such as the Thiruvasagam and the Thiruvarutpa are given such an elevated status within religious literature is the visceral struggle between the devotee and the mind. However, much progress one makes in their spiritual journey, they are always up against a seemingly unconquerable enemy, the ever-desirous sense organs. For this reason we can't help but feel Manickavaasagar's pain when he lays bare all his faults and begs Sivan not to forsake him, in the same way that Vallalar's emotive Tamil brings tears to one's eyes. Arunagirinathar has sung many such songs too.

You do not melt singing about Him
    nor do you melt hearing His divine praise
You do not melt thinking of the coming of death
    nor do you seek the truth, despite your sadness
You do not desire the liberation
    graced by the Lord, eternally adorned by snakes
nor do you know to praise the Lord
    even by the tip of your tongue
You refuse the good path, you don't shed your body
    instead preferring vicious rebirths
You don't understand what has been fated for you
    seeing even this, I have something to say, listen!
He will grace you with vision of Him
    and the ability to sing of His glory.
He is Murukan, ever easy of access to devotees
    and if you praise Him,
He will eradicate your twin karmic faults
(Excerpt from paattil urugilai)

The single greatest specialty of the Thiruppugazh though is its chandam (rhythmic pattern). Arunagirinathar has been dubbed the "unparalleled master of rhythm" for the ease with which he handles complex patterns while matching seamlessly with Tamil prosody requirements (ethukai, monai). One very restrictive but enchanting chandam:

Chandam:

thaana thantha thaana thantha thaana thantha thaana thantha
    thaana thantha thaana thantha ..... thanathaanaa

Transliteration:

aana nangaL moovi reNdum aaRi raNdu thOLum angai
aadal venRi vElum enRu ….. ninaivEnO

Tranlsation:

Will I ever think on His six faces,
His twelve shoulders and the victorious Spear
which radiates in his beauteous hands
(Excerpt from thOl elumbu)



Love poetry

The akam tradition of Tamil literature is one of its most important aspects. It describes the love story between a hero and heroine in various grammatically codified stages. The akam genre makes up a large fraction of Tamil Sangam Literature, and has later become an indispensable aspect of religious poetry as well.

For example, in the following song we see the speech of the mother of the girl in love with Murukan. Tamil's rich literary tradition is in full display in this song, as Arunagirinathar very succinctly captures the typical occurrences which aggravate the love-sickness of the young girl in love with Murukan. The song is in the form of the speech of the girl's mother:

As Cupid shoots his five flowery darts, and the kuyil bird sings,
the moon ascends the sky,
dreadful as the sun, the poison of the ocean
or the northern inferno at the end of the world.
As the seven seas roar like drums, and the melody of the flute,
along with the jingling of bells around the cows necks
enter her two ears, ferocious as arrows.
Not knowing her love-sickness,
the village mothers spread hurtful gossip.

(Excerpt from iravi ena)

பூமர நிழல்- கவிதைகள் - முத்தமிழ் விரும்பி - ஒரு பார்வை

பொன். குமார்

ஒரு நல்ல கவிதை என்பது எவ்வகையிலாவது வாசகனைச் சென்றடைந்து விடும். ஒரு நல்ல கவிதைக்கு அடையாளமாக எதையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. ஆனால் வாசகனால், விமர்சகனால் அடையாளம் காண இயலும். ஒரு படைப்பாளியால் சுட்டிக்காட்ட இயலும். படைப்பாளியே உணராத தன்மைகள் கொண்டதாயிருக்கும். 1985ஆம் ஆண்டு முதலே எழுதி வத்தாலும் செப்டம்பர் 1993 கணையாழி இதழில் வெளிவந்த 'நீட்சி' என்னும் நல்ல கவிதையே முத்தமிழ் விரும்பி என்னும் கவிஞரை இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளது. ஒரு நல்ல கவிதை என்பது அதை உருவாக்கியவனையும் அடையாளம் காட்டும் என்பதற்கு 'நீட்சி' ஒரு சான்று. கவிதையையும் கவிஞரையும். அடையாளப்படுத்தியவர் எழுத்தாளர் சுஜாதா. தற்போது முத்தமிழ் விரும்பி தந்திருக்கும் தொகுப்பு 'பூமர நிழல்'. இத்தொகுப்பிற்கு அணிந்துரை வழங்கிய கவிஞர் தென்பாண்டியனும் நீட்சி கவிதையைச சுட்டிக் காட்டியது கவிதையின் சிறப்பைக் காட்டுகிறது.

முதலாமாண்டின் மத்தியில்
நெய்வேலி மோகன்
அழைத்துப் போனான்
நாகலாபுரம் காமராஜ்
முறைத்துக் கொண்டான்
எனத் தொடங்கிய 'நீட்சி'
நேற்றிரவு அப்படி
நடந்திருக்கக் கூடாதென
பக்கத்து வீட்டுக்காரர்
பக்குவமுரைத்தார்.
தந்தை காலத்தில்
இப்படி நடந்ததில்லை யென
தாயழுதாள்.
மனைவி பட்ட அடியால்
விடியலிலும் குழந்தைகள்
வெகுண்டு ஒதுங்க



அறை மூலையில்
ஒதுங்கிக் கிடந்தது
தட்டை பாட்டில்
என்று முடிகிறது.

கவிதையில் தொடக்கத்திலிருந்தே பாடுபொருள் மறைபொருளாகவே கையாளப்பட்டுள்ளது. பூடமாகவே புனையப்பட்டுள்ளது. சொல்லாமல் சொல்லல் கவிதையிலொரு யுத்தி. கல்லூரியில் தொடங்கியதொரு பழக்கம் ஒருவனை எப்படி குடிகாரன் ஆக்கியது என எடுத்துரைத்துள்ளார். ‘அருத்தி’ யும் அவ்வாறே எழுதப் பட்டுள்ளது. முத்தமிழ் விரும்பினாலும் நான்காம் தமிழாம் நவீனமாயும் எழுதியுள்ளது

குறிப்பிடத்தக்கது.
எம்போதும் போல்
இருப்பதில்லை காற்று.
பசுமை
மழை வாசம்
மண் வாசனை
இல்லவே இல்லை.
காற்றைப்போல்
இருப்பதில்லை
நகாத்துக் காற்று.
காற்றைப் போல்
உணர்ந்தால்
புறநகர்க் காற்று

என்கிறது ‘காற்று’. இன்று காற்று சுத்தமாயில்லை என்பதே உண்மை.

காற்றுக்காகக் கதவு திறக்க
காற்றடித்துக் கதவடைக்க
அடைப்பட்டுப் போனது
காற்று

என்னும் ‘கதவும் காற்றும்’ சாதாரணமானதெனினும் பலவற்றின் குறியீடாகவும் கொள்ளத்தக்கதாயுள்ளது.

முகம் மனிதனின் அடையாளம். முகம் தோற்றத்தில் ஒரு
மாதிரியிருந்தாலும் சூழலுக்கேற்ப மாறுமாற்றலுடையது.
‘முகங்கள்’ கவிதையும்
எப்போதும் போல்
இருப்பதில்லை என்றாலும்
ஏதாவது ஒரு முகம்
இருக்கும் நிச்சயம்

என்கிறது. இது எளிமையெனிலும் சொற்களை கவிதைக்கேற்ப கையாளப்பட்டுள்ளது கவனத்திற்குரியது. முடிவில்

எனதும் உனதுமாய்
இருக்கும் முகங்களில்
ஒன்றாய் இருக்குதொரே சாயல்
என்பதோ சிந்தனைக்குரியது. ஒரே சாயல் என்பது மனிதம்
என கொள்ளத் தோன்றுகிறது.

1990-க்கு பின்பே எழுதப்பட்ட கவிதைகள் ஆனாலும் கவிஞர் கல்லூரிக் காலம், கடந்த காலம் ஆகிய நினைவுகளைக் கூர்ந்து அசைபோட்டுள்ளார்.

ஓரிரு முடிகள் நரைக்க
குறையத் தொடங்கும் பற்களின் நலம்
முன் வழுக்கையின் தெறிப்பு
வேறொன்றும் பேசியது
அதிகக் கவனமற்று
நினைவில் மூழ்கியது காலம்
என்கிறது 'மறுபடியும்'.

மீண்டும் அந்தப்
பணி நாட்களை நோக்கியே
விரிவென உணரா மனம்
என்கிறது 'நிகழின் சிறப்பில்'.

தஞ்சையின் புள்ளியில்
திருப்புதல் தேர்வுகள்
தொடங்கியிருக்கும் இதே வேளையில்
தளிர்த்துக் கிளைத்திருக்கும்
புங்க மரம்
என்கிறது 'நினைவின் நிகழ்.' நினைவுகளை மட்டும் எடுத்துக்
கூறாமல் நிகழ்வுகள் சிலவையும் பதிந்துள்ளார்.

இரண்டாண்டுகள் கழித்து
சில வார்த்தகைள்.
அருகிலிருக்கிறேன் அவசியம் வா.
இனி பேருந்திலோ
புகை வண்டியிலோ
சாலை நடுவே ஒருநாள் சந்திக்கலாம்
எனது பேருந்தும் வந்தே விட்டது
என்கிறது ' நிறுத்தம் '.

இதே பாதையில் தான்
இத்தனை நாட்களும்
விழுபடவில்லை
இந்தத் தோட்டமும்
சில பூக்களும்
பாதையோரத்தில்
பலமுறை கண்ட முட்புதர்கள்
என்கிறது ‘நடைபாதை’. இதுவொரு நிகழ்வெனினும் ‘பாதை ‘
யென்பது வாழ்வென்னும் அர்த்தம் தொனிக்கிறது. ‘திரும்பவும்’
விடை பெற்ற பின்னும்
விரலசைக்கும் எண்ணங்கள்
பிரியும் வேளையிலெல்லாம்
பிரியாத கண்ணீர்
என்கிறார். ‘பதிலுக்கு’
சொன்ன போதெல்லாம்
விடை பெறவில்லை
விடை பெற்ற போது
சொல்ல வில்லை

என்கிறார். இது தத்துவச் சாயல் கொண்டது.

வழியில் மறித்த நண்பருக்கு
நேரமாச்சென விடை கொடுத்து
ஓட விடை பெற்றிருக்கும் வண்டி
என்கிறது ‘மாலைக் காட்சி.’ தொடர்ந்து ‘பதிவில்’
தெரியாத முகமொன்று
தெரிந்தது போல் கைகாட்ட
புரியாமல் தலையாட்டிப்
போனேன் நானும்
என்கிறார். இவ்வாறு சிறு கவிதைகளைத் தொகுப்பு நெடுக
விரவி வாசிப்பிலொரு சிலிர்ப்பேற்படுத்தியுள்ளார்.

‘தேக்கம்’ என்னும் ஒரு சிறு கவிதையில்
ஒரு நாள் மழை
ஒரு வாரம் வடியும் வெள்ளம்
எழுத இருக்கிறது நிறைய
எழுதப் படாமல் கடிதம்
என்கிறார். மேலும் ‘இருப்பு’ கவிதையிலும்
காத்திராத வேளையில்

காத்துக் கிடக்கின்றன
கடிதங்கள்
என்கிறார். இவையிரண்டும் கடிதம் குறித்தானது எனினும் ‘வேறு’ ‘வேறு’விதமாயுள்ளது.

01
அலுப்பும் சலிப்பும்
களைப்பும் கடுப்புமாய்
நெருப்பின் தகிப்பில்
புலகும் பொழுதில் ஒலிரும்
அழைப்பு மணி

02
வாழ்த்துத் தந்தி
வத்திருக்கக் கூடாது
தூங்கும் அகாலத்தில்
என்பதும் அனுபவமாயுள்ளது.

பசியே மனிதனை இயங்கச் செய்கிறது. மனிதனை மட்டுமல்ல அனைத்துயிரினங்களையும் இயங்கச் செய்கிறது. வாழ்வைச் சுழல வைக்கிறது. சுழற்சி மூலம் புரிய வைத்துள்ளார்

சாக்கடை நீரோரம்
மேய்ந்து கொண்டிருக்கும்
எருமையின் மேல் ஒரு குருவி
காலருகே கொக்குகள்
கிளறிய காலடித் நடத்தே
நெளியும் புழு.
கசியும் வரப்பருகே
இன்றிரவு
கடைவதற்காக
காட்டுக் கீரை பறிக்கும் ஒருத்தி
என காட்சியாய் விரிய வைத்துள்ளார்.

கணபதி மாநகரில்
கறிக்கடை
நெஞ்செலும்பும் ஈரலும்
கால் கிலோ வேணும்.
இடுப்பு வேட்டி இழுபட
கீழே பார்த்தால்
குட்டியாடு
என்று லிவரித்த ‘ஞாயிறு காலை’ முடிவாக

வீட்டில் மதியம்
பூண்டு வெங்காயக் குழம்பு

என நிறைவடைகிறது. இறுதியிரண்டடிக்கு முன்னர் எழுதப் பட வேண்டியவையெல்லாம் வாசக சிந்தனைக்கே விட்டுள்ளார். எனினும் கவிஞரின் கருணைக்கு சான்றாகியுள்ளது.

‘கோடை மழைக்கால குறிப்புகள்’ கவிதையில்
பல குறிப்புகள் பதியப்பட்டுள்ளன. அதிலொன்று
ஆடுகளையோட்டிய ஒரு மூதாட்டி
கண் இடுக்கி சூரியனில் நேரம்
பார்க்கிறாள் விரல்களின் மறைப்பில்
என்பது கிராமத்தில் நேரம் பார்க்கும் முறையேயிது. இவ்வாறு
பதிவு செய்திருப்பது சுட்டத்தக்கது.

பயணம் தொடர்பான கவிதைகளை கவிஞர் மிகப் பிரியமாக எழுதியுள்ளார் என்பதற்கு சான்றாக பலவுள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு அனுபவம்

தருகின்றன. எனினும்
சந்திப்பின் உள்நுழையும்
கைகளோடு நீட்டிக் கொள்கின்றன
செல்லிடப் பேசியின்
உரையாடல்கள்
என்பதிலுள்ள ‘செல்லிடப் பேசி’ ‘சிக்னல்’ இல்
மஞ்சள் மாறி
பச்சை விழ
சினுங்கித் தொலைகின்றன
செல்ஃபோன் ஒலிகள்

ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இது முரண். இதுபோல்

‘அலகிலா விளையாட்டு’ இல் ‘ஞெகிழி’ என்றவர் ‘நிலை’யில்
‘பிளாஸ்டிக்’ என்பதும் முரண். ஆனாலும் ஆங்கிலத்தின் தமிழ்
வடிவத்தையே ஆங்காங்கே கையாண்டுள்ளார். இது இன்றைய
சூழலில் எதார்த்தமேயாகிவிட்டது. முத்தமிழ் விரும்பி
எழுதலாமா என்பதே ஐயப்பாடு.

நார்களும்
குவியலாயிருக்கும் மலர்களும்
புன்னகையோடு
பல சரங்கள் மாலைகளாகும்
சில
மலர் வளையங்கள்
மனங்களைப் போலவே

மலர்களும்

என்னும் இந்த மலர்களும் வித்தியாசமாயெழுதப்பட்டிருந்தாலும்

ஒரு கொடியில்
இரு மலர்கள்
ஒன்று மண மேடைக்கு
இரண்டு பிணபாடைக்கு
என்னும் முந்தைய கவிதையொன்றை நினைவூட்டியது.
'இந்த மலர்களும்' பழைய வாசம் வீசுகிறது.

'தொலைக்காட்சி' ஊடகம் அசுரத் தனமாய் வளர்ச்சியடைந்து மக்களை இறுகப் பிடித்துள்ளது. இதன் ஆக்கிரமிப்பை எதிர்த்து பல கவிதைகள் €ருவாக்கப்பட்டிருந்தாலும் 'வடிவம்'

வித்தியாசமானது.
ஏதோ இரு பாதங்களிடை
இருக்கும் ஒரு தலை உறங்கும்
ஒற்றை அறையே வீடாகி
விசாலமாய் அன்று.
தனித்த அறைகள்
தனிச் சாளரங்கள்
பார்வைகளிடைத் தெரியும்
அகண்ட வானம்
இருப்பினும் எல்லாமுமாக
இணைக்கும் பெரிய தொரு
செவ்வகம் உள்வாங்கியிருக்கும்
சின்னஞ்சிறு வட்டங்கள்
முன்னறை நடுவில்
அந்தப் பெட்டியின் திரைச் சதுரம்
விசால மற்றுக் கிடக்கும்
பெரிய வீடென்ற பெயரில்

என தொலைக்காட்சிப் பெட்டி குறித்தெழுதியுள்ளார். ஓரிடத்திலும் தொலைக்காட்சிப் பெட்டி என குறிப்பிடவில்லை.

இவ்வூடக சாதனத்தை பூடமாகவே புரிய வைத்துள்ளார்.எனினும் 'செவ்வகம்', 'சதுரம்' என வடிவம் குறிக்கும் சொற்கள் இடம் பெற்றுள்ளன.

கேணிக்குள் வாளிவிட்டு
நீரள்ள
முயலுகையில்
உள்ளிருந்து பறக்கும்

குருவிகள் இரண்டு
எனத் தொடங்கும் ‘இளைப்பாறல்’ கவிஞரின் கவிமனத்துக்கு
எழுத்தாவணமாயுள்ளது. ஓர் இயற்கைக் காட்சியை அதன்
தன்மைக் கெடாமல் கவிதையாக்கியுள்ளார். அதில்
இறங்கிய நீர்மட்டம்
கோடை செல்லும்
என்னும் வரிகள்
கவிஞர் பெயரை
கவிதை சொல்லும்
என எழுதத்தூண்டுமளவிற்கு கவிஞரின் கவியாளுமையும்
சொல்லாடலும் உள்ளன. தொகுப்பின் இடையிடையே
யுள்ளவை ‘இளைப்பாறல்கள்’ ஏற்படுத்துகின்றன.

‘பூமர நிழல்’ என்னும் இத்தொகுப்பில் பல்வேறு பாடு பொருள்களுள்ளன. பாலியல் விவகாரத்தையும் பதிவு செய்துள்ளார்.

தெளிந்து நீளும்
சாலையொன்றில்
இரைச்சல் சுமந்து
எதிரில் வாகனம்
மரங்களில் மோதி
விலகிய விழிகளில்
பக்கவாட்டில்
மூன்றிருக்கை தள்ளி
சிறு பூச்சரம்
இருபுறம் தொங்க
அலையும் சிகையைக் கோதும்
வளைக் கரத்தில்
குவியும் மனது

என்னும் ‘குவியம்’ ஆணின் மன இயல்புகளை அப்பட்டமாக எடுத்துக்காட்டியுள்ளது.

குத்தும் குலுங்கும்
தவிர் தளர்
பால் முலை
படுத்துக் கொள்ள மடி
தேடித் திரியும் மனசு

என்னும் ‘ஆதியாகியும்’ அவ்வாறே. இவ்விரண்டும் கவிஞரின் கூற்றாகயிருந்தாலும் ‘மௌனம்’ சாமியாரை தோலுரித்துக் காட்டுகிறது.

காவியுடுத்தி
மான் தோல் விரித்து
கைவிரல்கள்
மாலையொன்றை உருட்டிக்
காத்திருக்க
எங்கே மேனகை
என வினவியது சாமியார்களின் மீது விழுந்த சாட்டையடி.

ஒன்றை உருவி
ஒன்றின் மேல் வீசி
கலைத்துப் போட்ட சீட்டுகள்.
ஜோக்கர் தேடி
துருப்புகள் இறக்கி
கைவிசிதிகளில் பொருத்தி
நீ முந்தி நான் முந்தி
அடுக்கிப் பார்த்தால்
அட்டைப் பெட்டிக்குள்
அழகாய்த் தெரிந்தாலும்
கலைத்துப் போட்டால்தான்
காரியம் விளையும்
விளையாற்ற அறிவுறுத்துகிறது.
என்னும் ‘காரியசித்தி’ சூதாட்டம் குறித்து மட்டுமின்றி பலவற்றை
வினையாற்ற அறிவுறுத்துகிறது.

உணவுண்டு
கையலம்புகையில்
கண்ணாடி பார்த்து முடி திருத்த
என்ன அவசரம்
வழிவிட வேண்டும்
அடுத்தவளுக்கு
‘ஞானம்’ வேண்டும் என அறிவுத்த்தியிருப்பது பாராட்டத்தக்கது.

ஒரே நிலத்தில்
நீயும் நானும்
திருவிழாக்கள்
கொடிகள் கோஷங்கள் கூடினாலும்
வழிகள் தனித்தனியாய்
ஏதரவதொரு சாதி மதம்
சான்றிதழ்களில்

கூடாரங்கள் தனித்தும்
தெருக்களில் அடுத்துமிருக்க
ஒன்றாய்
உணவு விடுதிகளும் வியாபாரமும்
இருக்கிறது இருவருக்குமாய்
ஏதோவொரு கடவுள்
நமது வீதியில் சில நாட்களாய்
காவல் முகாம்
சீருடையில் துருத்தும் துப்பாக்கிகள்
எனும் ‘வாழ்நிலம்’ தொகுப்பில் கவனத்திற்குரியதிலொன்று,
எல்லாமொன்றாறிருந்தாலும்
வேறுபாட்டால்
சாதி, மதம் வேறுபட்டால்,

கலவரமுண்டாகிறது என்கிறார். வரிக்கு வரி தொடர்பில்லாமலிருந்தாலும் இடை வெளியிலே தான் பொருள் பொதிந்துள்ளது. ஒரு கவிஞராக முத்தமிழ் விரும்பி கவிதை படைத்திருந்தாலும் வாசகரையும் சித்திக்கச் செய்து விடுகிறார்.

‘பூமர நிழல்’ என்னும் இத்தொகுப்பினுள்ள ‘பூமர நிழல்’
என்பது நெடிய கவிதை. நெஞ்சுருக்கும் படைப்பு. தோழனாக
இருந்த தந்தையின் இறப்பைத் தாளமுடியாமல் எழுதிய கவிதை.
அப்பாவுக்குப் பெற்றோர் இல்லை
சின்னஞ்சிறு வயதில் அப்பா
இறந்தாராம்.
நான் பிறந்த சில மாதத்தில்
அப்பாவியும் இறந்தாராம்.
ஆனாலென்ன, அம்மாச்சி தாத்தா
உண்டு அணி அணியாய்ச் சுற்றம்
உண்டு மாமன்மார் மூவருண்டு.
சித்தனை துணையிருக்கப் பல்லக்கில்
பூக்களிடைப் பூவாகிப் புறப்பட்டார்
தனி வழியே.
காவேரி கிருஷ்ணா நதிகளின்
சங்கமத்தில் உதித்த நதியிவன்
கரைகளற்று ஓடும் காட்டாறு
என்ற மன வொலியில்
வெறியேறித் தவிக்கவிலே
பூமர நிழலாகும்
நினைவுகளே படுக்கை தரும்

பொறிஞர் கவிஞர்
முத்தமிழ் விரும்பி

என இழப்பின் வலியை எழுத்தில் பதிந்துள்ளார். இத் தொகுப்பிலுள்ள கவிதைகள் பல்வேறு வகையினவாயுள்ளன. அடர்த்தி மிகுதி. எளிமையாய் சில நட்பு பாராட்டுகின்றன. இருண்மையாய் பலவிருந்தாலும் திரும்ப வாசித்தலில் தெளிவு ஏற்பட்டு விடுகிறது. நவீனத்தில் கவிதைகள் நடைபயின்று வந்தாலும் ஒரு முன்மாதிரியாயுள்ளார். நவீனக் கவிஞர்கள் வரிசையில் முத்தமிழ் லிரும்பிக்கு ஒரு தனித்த இடமுண்டு என்பது இத்தொகுப்பின் மூலம் உறுதியாகிறது. இது முதல் தொகுப்பு என்பது ஏற்புடையதல்ல. ஒரு முதிர்வு படைப்பில் காண கிடைக்கின்றது. படைப்புகள் சமகால நிகழ்வுகளாயுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. தமிழ்க் கவிதை மரபில் சொற்களைக் கையாளுவதில் ஒரு புதிய யுத்தியை படைத்துள்ளார். கவிதைகள் வாசகனுக்கு ஒரு புதிய கவிதானுபவத்தை

ஏற்படுத்தித் தரும் என்பதில் ஐயமேதுமில்லை. எழுதப்பட்ட வரிகளை விட இடைவெளியில்தான் ஏராளமான செய்திகளைச் சொல்லிச் செல்கிறார். ஒரு வாசகனையும் படைப்பாளியாக்கும் வல்லமை மிக்கதாயுள்ளன கவிதைகள். அழகாக வடிவமைத்து அச்சாக்கப்பட்ட இத்தொகுப்பில் அச்சுப் பிழைகள் பலவீனம். கனமான தொகுப்பில் கவிதைகள் கவனத்துடன் திரும்ப வராமல் தவிர்த்து இருந்தால் மேலும் கனத்திருக்கும்.

காலத்தின்
சிமிட்டலில்
தொலைந்து தொலைந்து
தோன்றும்
சிகரங்கள்
உதிராமல்
ஒரேயொரு சிகரம்
ஒவ்வொரு முறையும்
என்கிறது 'இலக்கு' கவிதை.

உதிராமல் ஒரேயொரு சிகரமாயுள்ளது 'பூமர நிழல்' என்னும் இத்தொகுப்பு.

வெளியீடு :

கடற்குதிரை ஏ4 நேதாஜி நகர், சூளை மேடு கோவை - 641 005

மதுரை, சந்திரோதயம் பதிப்பகத்தின் நூல் விலைப்பட்டியல்

Mob.: 7010997639

வ. எண்	நூல்கள்	விலை (Rs.)
1.	திருவிளையாடல் புராணக் கதைகள் எளிய உரைநடையில்	200

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்

2.	உன்னோடு உரையாடுதல்	100
3.	காதல் மொழி	80
4.	பார்வையில் பூத்த நிலா	100
5.	தேனடையும் வரலாறு	100
6.	நுண்கலை மருத்துவன்	200
7.	தொடரும் புழுதிக்கால்கள்	100

முனைவர் செ. இராஜேஸ்வரியின் எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்

1.	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர்.	200
2.	எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்	200
3.	சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)	200
4.	வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட	200
5.	மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.	200
6.	எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி	200
7.	எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி	200
8.	ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.	200
9.	வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I	200
10.	நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I]	200
11.	பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II]	200
12.	இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.	200
13.	முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்	200
14.	இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.	200
15.	எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு	200
16.	படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு	200
17.	Unique Fandom of MGR	200
18.	எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்	200
19.	எம்.ஜி.ஆர். படத்தில் சண்டைக் காட்சிகளின் சுவாரஸ்யங்கள் – I	200
20.	எங்க வீட்டுப்பிள்ளை	200
21.	எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும்	200

முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்

1.	*தலைமை பொறுப்பேற்கலாம்*	*120*
2.	*இணையத் தமிழ்*	*150*
3.	*ஊடகச் சட்டங்கள்*	*250*
4.	*ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ்*	*200*
5.	*கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்)*	*100*
6.	*மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)*	*50*

சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

1	*பண்பாட்டு நகர்வுகள் (தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு)*	*200*
2.	*பெண் தெய்வ வழிபாடு*	*200*
3.	*தேவேந்திரன்*	*200*
4.	*மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை)*	*200*
5.	*இரு நிலத்தில் திருமுருகன்*	*200*
6.	*முன்னோர் வழிபாடு (கதிரவன், காலதேவன், நாகர் வழிபாடும்)*	*200*
7.	*வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்*	*200*
8.	*யானைக்கடவுள்*	*200*
9.	*பெண் பூப்பின் புனித வழிபாடு*	*200*
10.	*பெண் தெய்வ வழிபாடு தோற்றமும் வரலாறும்*	*300*
11	*வழிபாட்டின் வேர்களைத் தேடி*	*300*

சமய விளக்க நூல்கள்

1	*சாமிகளின் சரித்திரம் (வரலாறும். வழிபாடும்)*	*300*
2	*விரதங்களின் விளக்கம்*	*200*

முனைவர் செ. இராஜேஸ்வரியின் கவிதைத் திறனாய்வு நூல்கள்

1.	*பாடுபொருளும் பாசப்பொருளும்*	*250*
2.	*"பூ மர நிழலி"ன் களமும் காலமும்*	*200*
3.	*"2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு*	*100*
4.	*கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல்*	*100*
5.	*பயணக் கவிதைகள்*	*100*

ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பு முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*எட்டுத்திக் கும் செல்வீர்*	*200*
2.	*அவன் கடவுளுக்கு நிகரானவன்*	*200*
3.	*செக்கச் சிவந்த ரோஜா*	*200*
4.	*கலீல் ஜிப்ரா னின் "மணலும் நுரையும்"*	*200*
5.	*கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"*	*200*
6.	*மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)*	*200*
7.	*கவிதை மொழிபெயர்ப்பு*	*200*
8.	*நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் (Co-author)*	*300*
9.	*மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்*	*200*
10.	*Translating Tamil poetry*	*300*

சிறு கதை நூல்

1.	அமராவதியின் காதல் - சத்யப்பிரபா	120
2.	ரோஜா மொட்டு *(கவிதை சித்திரங்கள்)*	100
3.	மகிழ் பேரின்பம் *(poems)*	200
4.	பொன் வேலி *(poems)* நூல்கள்	200
5.	திருக்குறள் கதைகள் - பகை மாட்சி	100

தே. ஞானசேகரனின் நூல்கள் ஆங்கிலத்தில் – முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*Emerging Mallarism*	*100*
2.	*Festival of lord Indra*	*250*
3.	*Role of Devendirar's in Indian war of Independence (Sundaralingam Kudumbanar)*	*200*
4.	*Re reading of Pallu literature (in print)*	*300*
5.	*Mallariyan Literature (in print)*	*200*
7.	*Frontyard without My Dad (Poem)*	*200*
2.	*Emerging Mallarism*	*100*

English Novel Part

1.	*Aranyani – Vijeni*	*300*
2.	*Genetic traits of Vengai anchor by Tamilmagan*	*250*
1.	*Love Thamizh (online multilingual monthly about Tamilnadu History Language and Culture)*	*500*

Tamil Classics in English (Selected Poems)

1.	*Ainkurunuuru*	*200*
2.	*Kurunthokai*	*200*
3.	*Puranaanuuru*	*200*
4.	*Pastoral Literature of Classic Tamil (Mullai Pattu & Mullai Kali)*	*300*
5.	*A Classic Portrait of Madurai City (Madurai – Kanchi (Tamil) – the earliest heroic poetry)*	*300*
6.	*Songs of Classic Tamil Poetess Avvai*	*300*

Didactic Literature

1.	*Naaladiyaar*	*200*
2.	*Aacharak Kovai*	*200*

Medievel Literature

1	*A peasant with two wives (Mukoodal Pallu)*	300
2	*A Predictress from the Hill (Thiru Kutrala Kuravanji)*	300
3	*One line guidelines in Tamil*	200

திருக்குறள் ஆய்வுநூல் வரிசை

1	உலகத் தமிழர்களின் ஒரே நூல் - திருக்குறள்	200
2	வாழ்வியல் வழிகாட்டி திருக்குறள்	200

Sangam Classics in Modern Tamil

1.	குறுந்தொகைக் கவிதைகள் (தற்காலத் தமிழில்)	200

Studies on Tamil Grammar

1.	தமிழ் இலக்கணத்தில் வேற்றுமை உருபுகள்	300

ஜோதிட நூல்கள்

1. மேஷ ராசி சூட்சும ரகசியம்
2. ரிஷப ராசியின் சூட்சம ரகசியம்
3. நவரத்தினமும் உபரத்தினமும்
4. மிதுன ராசியின் சூட்சம ரகசியம்

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிதாமகர்கள்



மு. பழநிச்சாமி
நூலக அதிகாரி– பணி ஓய்வு
நாகமலை, மதுரை –19
மின்னஞ்சல் : vmps834@gmail.com

நஅறிமுகம்

நீண்ட நெடிய ஆங்கில ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்த இந்திய மக்களுக்கு, வாழ்வின் விடி வெள்ளியாய் வந்துதித்த ஒளிக்கீற்றுத்தான், இந்திய அரசியலமைப்புச் சட்டம். "ஏழை என்றும் அடிமை என்றும் எவனும் இல்லை ஜாதியில் இழிவு கொண்ட மனிதர் என்பது இந்தியாவில் இல்லையே" என்னும் பாரதியின் வைர வரிகளுக்குச் சட்டபூர்வ அங்கீகாரம் தந்த பெட்டகம் தான் இந்திய அரசியலமைப்புச் சட்டம். பிறந்த சாதியால், பேசும் மொழியால், சார்ந்த சமயத்தால், வாழும் மாநிலத்தால் வேறுபட்டுக் கிடக்கும் அனைவரையும் தாயின் மணிக்கொடிக்கீழ் ஒன்றுபடுத்திக் கொண்டு வந்து நிறுத்தி, அனைவருக்கும், சரி நீதி எனக் குரல் கொடுக்கும் நீதி நெறி விளக்கம் தான் இந்திய அரசியலமைப்புச் சட்டம். இந்த இந்தியத் துணைக்கண்டத்தின் தென்கோடிக் குமரி முதல், வடவிமய அடிவாரம் வரை உள்ள மக்கள் அனைவரும் சமனொத்து வாழ, வழி வகுக்கும் சமத்துவத்தேரை, வடம் பிடித்து இழுக்க வந்த வலுவான எந்திர சக்தி தான், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம். ஒட்டுமொத்த இந்திய மக்களின் உணர்வுகளையும் உள்வாங்கி, அந்தந்த நிலைக்குத்தக, அனைத்தையும் சமனொத்துப் பகிர்ந்துதர, மந்திரித்து தந்த மகத்துவம் மிக்க மந்திரக்கோல் தான் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று பேசும் வான்புகழ் வள்ளுவத்தை வடித்தெடுத்துப் பிழிந்து தந்த கனிச்சாறு தான், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்.

"வாய்மையே வெல்லும்" "சத்தியமேவ ஜெயதே" என்னும் சத்திய வாக்கை நித்திய வாழ்வில் பொருத்திக் காட்டிப் பாதுகாப்பு அளிக்க வந்த செங்கோலின் பெருமிதம் தான், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம். வேதம் வரைந்த கையும், கீதை புகன்ற வாயும், ஒன்றுபட்டு ஊடாடிக் கிடக்கும் சமுதாய அறக் கோட்பாட்டை, முரசறைந்து முழக்கும் மூதுரைதான் இந்திய அரசியலமைப்புச் சட்டம். கிணற்றின் ஆழத்தையும் கயிற்றின் நீளத்தையும் கண்டறிந்து செயல்படுவதைப் போல், அறிஞர்கள் குழு ஒன்றுபட்டு,

செல்லும் அளவும் சிந்தையைச் செலுத்தி உருவாக்கிய ஒப்பற்ற பாதுகாப்புப் பெட்டகம் தான், இந்திய அரசியலமைப்புச் சட்டம்.

இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிதாமகர்கள்

நிபுணத்துவம் எங்கிருந்தாலும் ஈர்த்துத் தனதாக்கிக் கொள்ளும் வகையில், பண்டித ஜவஹர்லால் நேரு தலைமையில் அமைந்த அன்றைய காங்கிரஸ் அரசு, எதிர் வரிசையில் இருந்த நீதிக்கட்சியைச் சேர்ந்த, நிதி நிபுணத்துவம் பெற்ற, ஆர்.கே.சண்முகம் செட்டியார் அவர்களை இந்திய அரசின் முதல் நிதி மந்திரி ஆக்கியது. அதேபோல் மாறுபட்ட கருத்துப் பள்ளியைச் சேர்ந்த டாக்டர் பீம்ராவ் ராம்ஜி அம்பேத்கர் அவர்களை, அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கும் வேந்தராக அறிவித்து, அந்த அரசு தனக்குப் பெருமை சேர்த்துக் கொண்டது.

அம்பேத்கர் : இந்திய அரசியலமைப்பின் சிற்பி

இந்திய அரசியல் அமைப்பின் சிற்பி எனவும், இந்திய அரசியல் அமைப்பின் தந்தை எனவும், வரலாற்றில் தனிக்கெனத் தனியொரு இடம் பெற்றவராகத் திகழும் அம்பேத்கர், வெல்லும் சொல் வழக்கறிஞராக, சட்ட மேதையாக, பொருளாதார நிபுணராக. அரசியல்வாதியாக, சுதந்திரப் போராட்ட வீரராக, சமூகச் சீர்திருத்தவாதியாக, எழுத்தாளராக, பத்திரிக்கையாளராக, தலித், மற்றும் பௌத்த சமயத்தை ஊக்குவித்தவராக, சுதந்திர இந்தியாவின் முதல் நீதி மற்றும் சட்ட அமைச்சராக பாரத ரத்னா விருதைப் பெற்றவராக, என இவ்வாறு அறியப்படும் பல்துறை வித்தகர் தான் அம்பேத்கர். இத்தகைய அறிஞரின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு, அம்பேத்கரைத் தவிர ஆறு உறுப்பினர்களைக் கொண்ட வல்லுனர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. (அம்பேத்கரைச் சேர்த்து இக்குழுவில் இடம்பெற்றவர்கள் ஏழு பேர்).

ஆலடி கிருஷ்ணசாமி ஐயர் :

ஆலடி கிருஷ்ணசாமி ஐயர் என்பவர் இக்குழுவில் ஒருவர். சென்னை கிறித்தவக் கல்லூரி என்னும் நாற்றங்காலில் விளைந்து முற்றிக் கதிர்சாய்ந்த பயிர்தான் ஆலடி கிருஷ்ணசாமி அய்யர். சட்டச் சொல்லின் பொருள் அறிந்து அற்புத உரை சொல்லும் இவர், நெல்லூர் மாவட்டத்தில் உள்ள புதூர் என்னும் ஊரில், ஓர் அர்ச்சகரின் மகனாகப் பிறந்து, திவான் பகதூராக உயர்ந்து அரசியலமைப்பை எழுதுவதில் முனைப்பும் முக்கியத்துவம் கொண்டு பணியாற்றியவர்.

கோபால்சாமி ஐயங்கார்

இக்குழுவின் இன்னொரு உறுப்பினர் கோபால்சாமி ஐயங்கார் என்பவர் ஆவார். தஞ்சையைச் சேர்ந்த இவர், சென்னை பிரசிடென்சி கல்லூரி சட்டக் கல்லூரியில் பயின்று பச்சையப்பன் கல்லூரியில் உதவிப் பேராசிரியராக ஆகி, ரயில்வே அமைச்சராகத் திகழ்ந்து, இந்தியாவின் சார்பில் ஐநா சபைக்குச் சென்றவராக மாறி, இவ்வாறு பல்வேறு பரிணாம வளர்ச்சி பெற்றுத் திகழ்ந்து, தன் கூர்த்த அறிவனைத்தையும் ஒருமுகப்படுத்தி, இச்சட்ட வரைவிற்குத் தோள் கொடுத்து நின்றவர் ஆவார்.

கே. எம். முன்ஷி

இக்குழுவின் இன்னொரு உறுப்பினர் குஜராத்தைச் சேர்ந்த கே. எம். முன்ஷி என்பவர் ஆவார். சுதந்திரப் போராட்ட வீரராக, வழக்கறிஞராக, ஆளுநராக, என்று பல்வேறு நிலையில் நின்று, நிலை பேறு பெற்று, இக்குழுவில் இணைந்து, தன் மேதமையின் முழு வீச்சையும் இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் உருவாக்கத்திற்கு தந்து உதவியவர்.

சர். சையது முகமது

அஸ்ஸாமை சேர்ந்த, சர். சையது முகமது என்பவர் இக்குழுவின் இன்னொரு உறுப்பினர் ஆவார். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், நகராட்சித் தலைவராக, அசாமின் பிரதமராக அறியப்படுபவர். அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கத்திற்கு முக்கிய பங்காற்றியவர்களில் இவரும் ஒருவர்.. பி எல் மிட்டர் என்பவரும் டிபி கைத்தான் என்பவரும் இக்குழுவில் இடம் பெற்ற மேலும் இருவர் ஆவர்.

அரசியல் அமைப்பு நிர்ணய சபை

அரசியல் அமைப்பு நிர்ணய சபை என்பது அரசியலமைப்பை உருவாக்க மற்றும் திருத்துவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு. இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபை 27.8.1947 அன்று மேற்கண்ட இந்திய அரசியலமைப்பு வரைவுக் குழுவை (Drafting comittee of Indian constitution) உருவாக்கிச் செயல்பட ஆணையிட்டது.

ஜவஹர்லால் நேரு, ராஜேந்திர பிரசாத்,. சரோஜினி நாயுடு, ஸ்ரீ ஹரே-க்ருஷ்ண மஹாதாப், சர்தார் வல்லபாய் படேல், மௌலானா அபுல் கலாம் ஆசாத், பண்டிட் கோவிந்த் வல்லபபந்த், டாக்டர். பி.ஆர். அம்பேத்கர், ஆச்சார்யா ஜே.பி. கிருபலானி, ஸ்ரீ சரத் சந்திர போஸ், ஒன்பது பெண்கள் உட்பட 270 பிரதிநிதிகள் இதில் இடம் பெற்றிருந்தனர். இந்திய அரசியலமைப்புச் சட்ட அசல் கையெழுத்து ஆவணத்தில் 283 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர். அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களில் அன்றைய குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் முதலாவதாக இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தில்

கையொப்பமிட்டவர் ஆவார். பெரோஸ் காந்திதான் இந்திய அரசியலமைப்பில் கடைசியாக கையெழுத்திட்டவர்.

பாரம்பர்யக் கலாச்சாரப் பிரதிபலிப்பு

1947-ல் வரைவுக் குழு நிறுவப்பட்டதிலிருந்து உலகிலேயே மிக நீளமான, கையால் எழுதப்பட்ட (Lengthiest written constitution in the world) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க 2 ஆண்டுகள், 11 மாதங்கள் மற்றும் 18 நாட்கள் ஆனதாக அறிய முடிகிறது. நந்தலால் போஸ் மற்றும் பியோஹர் ராம்மனோகர் சின்ஹா (Beohar Rammanohar Sinha) உட்பட சாந்திநிகேதனைச் சேர்ந்த கலைஞர்களால், பார்டர் கட்டி அழகுபடுத்தப்பட்டு அலங்கரிக்கப்பட்ட தாளில். பிரேம் பிகாரி நரேன் ரைசாடா (Prem Behari Narain Raizada) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைக் கையால் எழுதும் இமாலய சாதனையை செய்து முடித்தார். அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புப் பக்கத்தைப் படைத்தவர், ஜபல்பூரைச் சேர்ந்த பியோஹர் ராம்மனோகர் சின்ஹா, (Beohar Rammanohar sinha) என்பவர் ஆவார். இவர் இக்கலைப் படைப்பை உருவாக்கும் முன், அஜந்தா எல்லோரா குகைகள், சாஞ்சி, சாரநாத், மற்றும் மகாபலிபுரம் போன்ற இடங்களுக்கு ஆய்வுப் பயணங்களை மேற்கொண்டு, அவற்றின் அழகை எல்லாம் உள்ளத்தில் உள்வாங்கிக் கொண்டு, அதன் பிறகே முகப்புப் பக்க, வனப்பைக் கூட்டும் செயலை மேற்கொண்டார். அதன் தொடர்ச்சியாக அரசியலமைப்பின் சாரத்தை விளக்குவதற்கும், பாரம்பர்யக் கலாச்சாரத்தைப் பிரதிபலித்துக் காட்டும் வகையிலும் அவர், பத்மம், நந்தி, ஐராவதம், மற்றும் மயூர் போன்ற தொன்மங்களைப் பயன்படுத்தி ஒளிரச் செய்தார்.

அரசியலமைப்பின் ஆன்மா

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரை (Preamble) இந்திய அரசியலமைப்பின் ஆன்மாவாக, திறவு கோலாக அமைந்து, முழு அரசியலமைப்பின் தத்துவத்தையும் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடியாகத் திகழ்கிறது என அறிஞர்கள் கூறுகின்றனர். “இந்திய அரசமைப்புச் சட்டமானது காலத்தின் சூழ்நிலைகளின் தேவைக்கேற்ப ஒற்றையாட்சி முறையாகவும் கூட்டாட்சி முறையாகவும் இருக்கும்” என்றும், “சாதாரண காலங்களில் கூட்டாட்சி முறையாகவும், போர்க்காலங்களில் ஒற்றையாட்சி முறை யாகவும்" இயங்கிடும் வண்ணம் அரசியலமைப்புச் சட்டமானது வடிவமைக்கப் பெற்றுள்ளது என்றும் (Unique Blend of regidity and flexibility) அரசியல் அமைப்புச் சட்ட வல்லுனர்கள் விளக்கம் தந்துள்ளனர். கையால் எழுதப்பட்ட அரசியலமைப்பு ஆவணப் பிரதி, ஹீலியம் வாயுவால் நிரப்பப்பட்டு, கண்ணாடிப் பேழையில் நாடாளுமன்ற வளாகத்திலுள்ள நூலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

சமன்பாட்டு உரிமைகளின் பாதுகாப்புப் பெட்டகம்

இக்குழுவினரால் தொகுக்கப்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்ட முன்வடிவம், அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 26 ஜனவரி 1950 அன்று இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. எனவே ஆண்டுதோறும் ஜனவரி 26, நாளைக் குடியரசு நாளாக சிறப்பாகக் கொண்டாடப் பட்டு வருகிறது. இதையொட்டி . தேசிய அரசியல் சாசனம் எனப்படும் சட்ட தினம் (சம்விதான் திவாஸ்) ஆண்டுதோறும் நவம்பர் 26-ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. பேச்சுரிமை,

எழுத்துரிமை, அனைவருக்கும் வாக்குரிமை, கல்வி கற்பதில் சம உரிமை, பின்பற்றும் மத வழிபாட்டில் சமஉரிமை, நிதி - நீதி மேம்பாட்டு உரிமை, இட ஒதுக்கீட்டு உரிமை, பின்தங்கிய மக்களை மேம்படுத்தும் மேம்பாட்டு உரிமை, குடி மக்களின் கடமைகள் மற்றும் உரிமைகள், ஆளும் அரசை நெறிப்படுத்தி நடத்திச் செல்ல வைக்கும் உரிமை, போன்ற பல்வேறு சமன்பாட்டு உரிமைகளை வழங்கி, இந்தச் சமுதாயத்தை ஒப்பும் உயர்வும் அற்ற சமுதாயமாக உயர்த்த வழிகோலும் வாழ்வியல் சிந்தனையின் அடி நாதமாக அமைவது தான் இந்த அரசியலமைப்புச் சட்டம்.

நிறைவாக...

இத்தகைய அரசியல் அமைப்புச் சட்டத்தை நிர்வகித்துப் பாதுகாக்கும் பொறுப்பை மேற்கொள்ள இருக்கும், இன்றைய அரசாயினும் சரி, எதிர்வரும் காலங்களில் வந்து போக உள்ள எந்த அரசாயினும் சரி, குடியரசுக் கோட்பாட்டைக் கட்டமைத்துக் காத்து நிற்கும் கற்கோட்டையாகிய இந்த அரசியலமைப்புச் சட்டத்தை, சிதிலமாகவிடாமல், பக்திச் சிரத்தையோடு போற்றிப் பாதுகாத்து வந்தால், நாடு நலம் பெறும், மாதம் மும்மாரி மழை பொழியும், மக்கள் அனைவரும் மகிழ்வும் நிறைவும் பெற்று வாழ்வாங்கு வாழ்வர்.

Thirukkural

In English - Dr. Chandrika Subramanian

2. The Blessing of Rain

11. This world lives by rain. Rain is heaven's nectar, the elixir of life, the sustaining force.

12. The rain cherishes nourishing food and itself forms the food. It quenches hunger and thirst.

13. This wonderful earth encircled by seas, will be tortured by hunger if rains fall.

14. Tillers cannot toil in the soil unless clouds shower blessed rains. No rain, no agriculture.

15. Deluging rain causes ruin. But it is again rain that cherishes life by enabling cultivation.

16. Without drops from heaven not a blade of grass will grow on the earth. Nature parches up.

17. If clouds do not favour, even the vast ocean will lose its fertility. No sea, no cloud.

18. No worships to gods, no offerings. No religious life, will be possible under a dry sky.

19. Householder's charity and saint's austerity will fall on the earth if rains fall in heaven.

20. Life in the world is impossible without water. No duty can sustain without rain water

.‘சிறு-வீட்டு-பொங்கல்’ முதல் ‘நவின் தாண்டுள்’ வரை – தமிழ்நாட்டையும் மகாராஷ்டிராவையும் இணைக்கும் பழம்பெரும் அரிசி மரபுகள்:

–பேரருளாளர் முனைவர் J இரவிக்குமார் ஸ்றீஃபன் G.,
நிறுவுநர், திராவிடவியல் மறுமலர்ச்சி நடுவம்

நான் சிறுவனாக இருந்த காலத்தில், பொங்கல் திருநாள் முடிந்த பின், கிராமத்திலுள்ள சிறுமிகள், நீர் நிலைகளில், முக்கயமாக ஆற்றங்கரையில் கூடி இனிப்புப் பொங்கல் சமைப்பது வழக்கமாக இருந்தது. சமைப்பதற்கு முன், அவர்கள் ஆற்றங்கரையிலிருந்து எடுத்த மண்ணால் ஒரு சிறிய குடில்போன்ற அமைப்பை உருவாக்குவார்கள். மண் கிடைக்காதபட்சத்தில், தரையில் ஒரு வீட்டின் வரையறையை வரைந்தோ அல்லது தற்காலிகமாக ஒரு குடில்போல் அமைக்கவோ செய்வார்கள் (இரண்டாவது படத்தைப் பார்க்கவும்). இந்த அடையாளமான “சிறு வீடு”தான் அந்தக் கொண்டாட்டத்தின் மையமாக விளங்கியது.

சிறு-வீட்டுப்-பொங்கல் கொண்டாட்டத்திற்கான தயாரிப்புகள், தை மாதத்திற்கு முன்பான மார்கழி மாதத்திலேயே தொடங்கிவிடும். சிறுமிகள் தங்கள் வீட்டுன் முத்தத்தில் போடும் கோலத்திற்கு நடுவில் ஒர் பூசணி அல்லது செம்பருத்தி மலரால் அலங்கரிப்பார்கள். இந்த விழா, பொதுவாக, முக்கியமான பொங்கல் திருநாளுக்கும், தை மாதத்தில் வரும் ‘பூசம்’ நாளுக்கும் இடையில் உள்ள ஒரு விடுமுறை நாளில்—அதிலும் பெரும்பாலும் ஞாயிற்றுக்கிழமை அன்று கொண்டாடப்படும். குழந்தைகள், பொங்கல் பண்டிகையின் போது மீதமிருந்த அரிசி மற்றும் வெல்லத்தை கவனமாகச் சேமித்து வைத்து, இந்த “சிறு-வீட்டுப்-பொங்கலு”க்காக பயன்படுத்துவார்கள்.

இந்த சமையல் முழுவதும் பெற்றோரின் எந்த உதவியுமின்றி, சிறுமிகள் ஒரு சிலரால் மட்டுமே சேர்ந்து செய்யப்படும் ஒரு கூட்டு முயற்சியாக இருந்தது. சில சிறுமிகள், சிறிய சேலைகளை உடுத்திக் கொண்டு, தங்கள் தாய்மாரின் உதவியின்றி தனியாகச் சமைப்பதன் மூலம், தங்களின் வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் அடையாளப்படுத்துவார்கள். பொதுவாக மண் அடுப்புகள் பயன்படுத்தப்பட்டாலும், அவற்றை ஆற்றங்கரைக்கு எடுத்துச் செல்லாமல், மூன்று கற்களை அமைத்து அதன்மேல் பாத்திரம் வைக்கக் கூடிய ஒரு தற்காலிக அடுப்பை உருவாக்குவார்கள். சமையலுக்கான தண்ணீர் நேரடியாக ஆற்றிலிருந்து எடுக்கப்படும். பொங்கல் இட்ட பின், சிறுமிகள் குழுக்களுக்குள் பரிமாறிக் கொண்டு, அனைவரும் சேர்ந்து உண்ணுவார்கள். மேலும், ஒவ்வொரு குழுவும் தங்கள் பெற்றோருக்குச் சுவைக்கக் கொஞ்சம் பொங்கலை வீட்டிற்குக் கொண்டு செல்வார்கள்.

ஒரு சிறுவனாக, இந்தச் நிகழ்வில் பங்கேற்க வேண்டும் என்ற ஆசை எனக்கும் இருந்தது. ஆனால் இது "பெண்களுக்கு மட்டுமே" என இத்திருநாள் அறிவிக்கப்பட்டுள்ளதால், ஆண் சிறுவர்களுக்கு அனுமதி இல்லை. அதனால் மனம் தளராமல், நான் எங்கள் வீட்டின் பின்புறத் தோட்டத்தில் தனியாகப் சிறு-வீட்டுப்-பொங்கல் சமைப்பேன். சிறுவயது கற்பனை காரணமாக, சில சமயங்களில் மிட்டாய்களை சேர்த்து பொங்கலிடுவேன்; அதனால் அதன் நிறமும் சுவையும் மாறி, பெரும்பாலும் சிறப்பாக இருக்காது. இருந்தாலும், என் அம்மா அதை பொறுமையுடன் சாப்பிடுவார்கள்; ஒருபோதும் குற்றம் சொல்லமாட்டார்கள்.

இந்த விழாவின் ஆழமான நோக்கம், சிறுமிகளை அறுவடைச் மகிழ்சிகளில் பொறுப்புடன் பங்கேற்க ஆயத்தப் படுத்துவதும், வாழ்க்கையைத் தாங்கி நிறுத்தும் நீர்வளத்தின் முக்கியத்துவத்தை உணரச் செய்ய வைப்பதும்தான். உண்மையில், ''சிறு-வீட்டுப்-பொங்கல்' என்பது மகிழ்ச்சியும், கூட்டுணர்வும், கற்றலுமாக அமைந்த ஒரு 'மகிழ்வுலா' போன்ற கொண்டாட்டமாக இருந்தது.

மெட்ராஸ் (சென்னை) போன்ற பெரும் நகரங்களில், இந்தப் 'உலாப்போக்கு' மரினா கடற்கரைக்கு செல்வதன் மூலம் கொண்டாடப்படும் ஒரு நிகழ்வாக மாறியது. வழிவழி

நடைமுறைக்கு மாறாக, பெற்றோர்களும் குழந்தைகளுடன் செல்வது வழக்கமாகியது. இதன் விளைவாக, சமையல் செய்வது மெதுவாக இந்த வழக்கத்திலிருந்து மறைந்தது. கடற்கரையில் வீசும் பலமான காற்று, சிறிய அடுப்புகளில் சமையல் செய்வதை நடைமுறையில் செயல்படுத்தக் கூடாதாக்கிக்கியது. அதனால், பெற்றோர் கண்காணிப்பில் அலைகளில் கால்களை நனைப்பதே முக்கிய நிகழ்வாக மாறியது.

எனது இளவயது காலத்தில், பொங்கலும், மாட்டுப் பொங்கலும் மட்டுமே விடுமுறை நாட்களாக இருந்தன. பின்னர் 'திருவள்ளுவர் தினம்' விடுமுறையாக அறிவிக்கப்பட்டபோது, இந்தக் கடற்கரைப் பயணங்கள் அந்த நாளுக்கு மாற்றப்பட்டன. இதனால், அவை 'காணும் பொங்கல்' என அழைக்கப்படத் தொடங்கியது —அதாவது "சுற்றுலா பொங்கல்" (மூன்றாவது படத்தைப் பார்க்கவும்). 'பொங்கல்' என்ற பெயர் தொடர்ந்தாலும், சமையல் அந்த நாளின் வழக்கத்தில் இடம்பெறுவதில்லை.

இன்றைக்கு, சிறு-வீட்டுப்-பொங்கல் பெரும்பாலும் திருநெல்வேலி மாவட்டத்தின் கிராமப்புறங்களில், குறிப்பாக தாமிரபரணி ஆற்றங்கரை கிராமங்களில் மட்டும் உயிருடன் இருப்பதாகத் தோன்றுகிறது.

மகாராஷ்டிராவில், தமிழர்களின் அறுவடைத் திருவிழாவான 'பொங்கல்' பண்டிகை 'புதிய அரிசி' என்று பொருள் படும் 'நவீன் தண்டுல்' (नवीन तांदूळ महोत्सव) என்ற திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது (நான்காவது படத்தில் உள்ள கடைகளின் விளக்கப் பலகைகளைப் பார்க்கவும்). உடலை குளிர்விக்கும் தன்மை கொண்ட பால் சார்ந்த பொங்கலுக்கு மாற்றாக, மகாராஷ்டிர மக்கள் எள்ளும் வெல்லமும் கொண்டு தயாரிக்கப்படும் 'தில்குல்' இனிப்புகளைச் செய்கிறார்கள். இந்த இனிப்புகள் அந்தப் பகுதியின் குளிரான காலநிலைக்கு ஏற்றவையாகும். எள்ளு உடலுக்கு வெப்பம் அளிப்பதுடன், நோய் எதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கிறது—மார்ச் அல்லது ஏப்ரல் மாதங்களில் வரும் ஹோலி பண்டிகை வரை நீளும் மென்மையான குளிர்காலத்தில் 'தில்குல்' மிகவும் பயனுள்ளதாகும். 'தில்குல்' பரிமாறும்போது, "தில்குல் சாப்பிட்டு இனிமையாகப் பேசுங்கள்" என்ற சொல்லாடல் பயன்படுத்தப்படுகிறது; இச் சொல்லாடலால், இனிமையையும், ஒப்புரவையும், மேலும் ஒற்றுமையான புதிய தொடக்கங்களையும் ஊக்குவிக்கிறது.

சமையல் முறைகள் மாறுபட்டாலும், சிறு-வீட்டுப்-பொங்கலை நினைவூட்டும் சிறிய மண் பானைகள் மகாராஷ்டிராவில் பரவலாக விற்பனை செய்யப்படுகின்றன (ஐந்தாவது படத்தைப் பார்க்கவும்). இந்தப் பானைகளில் புதிதாக அறுவடை செய்யப்பட்ட அரிசியும் கரும்புத் துண்டுகளும் நிரப்பப்படுகின்றன. இதன் மூலம், மராத்தியரின் 'புதிய அரிசி' திருவிழாவுக்கும், தமிழரின் பொங்கல் பண்டிகைக்கும் உள்ள இணைப்புப் பாலத்தைச் காணமுடிகிறது.

புவியியல் அமைப்பும் காலநிலையும் காரணமாக திருவிழா நடைமுறைகள் மாறுபட்டாலும், அவற்றின் அடிப்படை ஆன்மா வியக்கத்தக்க அளவில் ஒன்றுபட்டதாகவே உள்ளது. இது தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா இடையே ஒரு

பண்பாட்டு பாலமாக அமைகிறது. ‘பஞ்ச திராவிட’ என்ற கருத்தில் பாரம்பரியமாக மகாராஷ்டிரா மற்றும் குஜராத்தும் அடங்குவதால், இந்த தொடர்ச்சி ஆச்சரியமல்ல.

பஞ்ச திராவிட என்ற கருத்து, ஸ்கந்த புராணம் என்பதின் ஒரு பகுதியாகிய ‘சஹ்யாத்ரிகண்டம்’ பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர், 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த காஷ்மீர் வரலாற்றாசிரியர் கல்ஹணர் தமது ராஜதரங்கிணி நூலில் இதனைப் பிரபலப்படுத்தினார்.

‘தண்டுலம் / தண்டுல்’ என்ற சொல் "அரிசி" என்ற பொருளைக் குறிக்கும் ஒரு ‘மிகப் பழமையான தமிழ்ச் சொல்’ ஆகும். இந்தச் சொல் பின்னாளில் ‘சமஸ்கிருதத்திற்கும் கடந்து சென்றது’. கிமு 2ஆம் நூற்றாண்டுக்கும் கிபி 4ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது எனக் கருதப்படும் திருமூலர் இயற்றிய திருமந்திரம் எனும் தமிழ்த் மெய்யியல் நூலில் பின்வரும் வரி இடம்பெறுகிறது:

> “தண்டுலம் விரித்துநற் றருப்பை சாத்தியே” (இரண்டாம் தந்திரம் – 17 : கரு உருவாக்கம்)

இந்தச் செய்யுளில் தண்டுலம் என்ற சொல் அரிசி என்ற பொருளிலேயே தெளிவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோல், கிபி 10ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் சூளாமணி நிகண்டு என்னும் நூலில் பின்வரும் வரிகள் காணப்படுகிறது:

> “தண்டிலம் தருமணன் மணிமுத்தாகத் தண்டுல மியற்றி” (சுயம்வர காண்டம், பாடல் 277)

இந்தச் செய்யுளிலும் தண்டுலம் என்பது அரிசியை குறிப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள தமிழ் லெக்சிகன் என்னும் நூலில் தண்டுலம் / தண்டுல் (பக்கம் 1735) என்ற சொல் உமி நீக்கப்பட்ட அரிசி எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த இலக்கிய மற்றும் அகராதி ஆதாரங்கள் அனைத்தும் ‘தாண்டுள்’ என்பது அரிசியை குறிக்கும் ஒரு பழமையான தமிழ்ச் சொல் என்பதைக் உறுதி செய்யும் தரவுகள் ஆகின்றன.

இனிய புதிய ‘தாண்டுள்’ திருநாள் நல்வாழ்த்துகள்!

மக்கள் நலம் பேணுவோம்

ச. அய்யம்பிள்ளை,
மேனாள் பேராசிரியர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத்தில் கிடைத்த சில தகவல்கள்தான் (The Hindu, Only 20% of candidates accepted PM Internship Scheme offers: Data, 3.12.2025, p.9) இந்தக் கட்டுரையை எழுதத் தூண்டின.

முதலில் அந்தச் செய்தியைப் பார்ப்போம்.

இந்தச் செய்தியுடன் தொடர்புடைய நடுவன அரசு அமைச்சர்களால் பாராளுமன்றத்தில் அளிக்கப்பட்ட புள்ளிவிவரங்களின்படி, 2024ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையில், பிரதம மந்திரி பயிற்சித் திட்டம் (PM Internship Scheme) என்ற ஒன்று அறிவிக்கப்பட்டது. அதன்படி ஒவ்வோர் ஆண்டும் 1.25 இலட்சம் நபர்களுக்குப் பயிற்சி (internship) வழங்கத் திட்டமிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இரண்டு நிலைகளாக மொத்தம் 1.65 இலட்சம் நபர்களுக்கு 500 பெரிய (தனியார்) நிறுவனங்களிலிருந்து அழைப்பு விடுக்கப்பட்டது. இதில் 33,300 (20.2%%) அழைப்புகளே ஏற்கப்பட்டன; அழைப்பை ஏற்காததற்கு, இடப்பொருத்தம் இன்மை, நீண்ட பயிற்சிக் காலம் போன்ற காரணங்கள் கூறப்பட்டு இருந்தன. அழைப்பை ஏற்றுச் சேர்ந்தவர்களில், 6,618 (19.9%) நபர்கள் பயிற்சியை முடிக்காமல் இடையிலேயே விட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். எனவே, அரசு முன்னர் 2024-25 ஆம் ஆண்டுக்கு நிர்ணயித்து இருந்த தொகை ரூபாய் 840 கோடியை, ரூபாய் 380 கோடியாகக் குறைத்துவிட்டது. இதில் வெறும் ரூபாய் 73.72 கோடிதான் இதுவரை செலவிடப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டம் எதிர்பார்த்த வெற்றியை எட்டவில்லை எனலாம். ஆனால், பல மாநிலங்களில் கிடைத்த தகவல்களின்படி, அரசு நிறுவனங்களில் பயிற்சி அல்லது வேலை எனில், ஒரு (வேலை, பயிற்சி) காலி இடத்திற்கு, குறைந்தது ஐநூறு விண்ணப்பங்கள் குவிகின்றன. சமீபத்தில் தமிழகத்தில் ஒரு நடுவன அரசு பல்கலைக்கழகத்தில் ஒரு துணை வேந்தர் பதவிக்கு நானூறுக்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்ததாகச் செய்தி வந்தது.

இந்தப் புள்ளிவிவரங்கள் சொல்லுவது யாதெனில், அரசின் பண உதவியோடு, (தனியார்) உற்பத்தி நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகிற பயிற்சியில் சேர

இளைஞர்கள் தயக்கம் காட்டுகிறார்கள். பயிற்சி மேற்கொள்ளப் பலர் தயாராக இல்லை. ஆனால், அரசு வேலைக்கான மோகம் மிக அதிகமாக இருக்கிறது. எந்தவித நுழைவுத் தேர்வோ, பயிற்சியோ இன்றி அவர்கள் பெற்றிருக்கும் பட்டங்களை, மதிப்பெண்களை வைத்து வேலை கிடைக்கும் எனில், ஒரு பெரிய தொகையை செலவு செய்தாவது (கையூட்டு கொடுத்தாவது), வேலை பெறத் தயாராக இளைஞர்கள் இருக்கிறார்கள்.

நம் நாட்டில், பொதுத் துறைகள் மீது குறை காண்பவர்கள் அதிகம். "அவை சரியாக இயங்கவில்லை; அங்கே லஞ்சம், ஊழல் அதிகமாக இருக்கிறது; அலுவலகங்கள் அவலங்களாக இருக்கும்; சுத்தமாக இருக்காது, வேலை ஆட்கள் சரியாக வேலை செய்ய மாட்டார்கள், உற்பத்தித்திறன் குறைவு" என்றெல்லாம் குறை கூறுவார்கள். தனியார்மயம், தாராளமயம் கூட அதன் வெளிப்பாடே. ஆனால், வேலை என வரும்போது பொதுத் துறையையே இளைஞர்கள் விரும்புகிறார்கள் என்பது அங்கே வேலைக்காகக் குவியும் மிக அதிகமான எண்ணிக்கையிலான விண்ணப்பங்களும், பொதுத்துறையில் வேலைபெற யாரிடமாவது பணத்தைக் கொடுத்துப் பலர் ஏமாறுவதாக அடிக்கடி வரும் செய்திகளும் சொல்கின்றன.

சமீபத்தில் இண்டிகோ விமானச் சேவையில் ஏற்பட்ட குளறுபடிகள் அனைவரும் அறிந்ததே (The Hindu, Could IndiGo have hired more pilots to prevent the crisis?, 10.12.2025, p.11). அந்த நிறுவனத்தின் விமானம் ஓடும் நேரம் 50.9 விழுக்காடாக இருந்த போது, விமான ஓட்டிகளின் எண்ணிக்கை 43.6 விழுக்காடாகவே (குறைவாகவே) இருந்தது. சராசரியாக ஒரு விமான ஓட்டிக்காக ஏர் இந்தியா நிறுவனம் செலவு செய்யும் தொகை ரூ.7.3 million. ஆனால் இண்டிகோ நிறுவனம் செலவு செய்வது (குறைவு) ரூ.6.2 million ஆகும். கூலியைக் குறைவாகக் கொடுக்கும் இண்டிகோ நிறுவனம் 2024-25 ஆண்டு பெற்ற இலாபம் என வெளியே சொல்லப்பட்டது $81.6 billion ஆகும். இதுவரை, இந்தியத் தனியார் துறைகளில் இலாபத்தின் பங்கு உயர்ந்துகொண்டே போவதையும் கூலியின் (சம்பளம், ஊதியம்) பங்கு குறைந்துகொண்டே போவதையும் பல ஆராய்ச்சியாளர்கள் படம்பிடித்துக் காட்டியுள்ளனர். பல வளர்ந்த நாடுகளிலும் இதே நிலைமைதான் என, பாரீஸ் ஸ்கூல் ஆப் எகோனோமிக்ஸ் நிறுவனத்தின் தலைவர் தாமஸ் பிகெட்டி (Thomas Piketty) என்பவர் தம் "Capital in the twenty-first century" என்ற நூலில், எட்டு வளர்ந்த நாடுகளின் நானூறு ஆண்டு வரலாற்றை ஆராய்ந்து விளக்கியுள்ளார்.

பொதுவாகவே, மனிதர்களுக்குப் பதிலாக இயந்திரங்களைப் பயன்படுத்துவதையே முதலாளிகள் (இல்லத்தரசிகள் கூட) விரும்புகின்றனர். எனவேதான், முதலீடு கூடிய அளவிற்கு வேலைவாய்ப்புகள் கூடவில்லை. வீடுகளும் இயந்திரமயமாகி வருகின்றன.

குழந்தைகளைப் பெறுவது, வளர்ப்பது, அவர்களை நல்ல மனிதர்களாக உருவாக்குவது போன்றவை எவ்வளவு சிரமம் என்று பெற்றோரிடம் கேட்டால் தெரியும். ஆனால், அப்படி உருவாக்கப்பட்ட மனித மூளையை, சக்தியையை வீணாக்குவது எவ்வளவு தவறு? மனித உழைப்பை, குறிப்பாக இளைஞர்களின் சக்தியையை, விரயப்படுத்துவதில் நம் நாடு முதலிடம் பெறுகிறது. உயர்கல்வி பெறும் தொண்ணூறு விழுக்காடு இளஞர்கள் எந்த வேலைக்கும் லாயக்கில்லை எனக் கல்வியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வேலையின்மை என்பது மனிதர்களுடைய வருவாயை, செலவை, வாழ்வாதாரத்தை, வாழ்க்கைத்தரத்தைப் பாதிக்கும் மிக முக்கியக் காரணியாக நீண்ட காலமாக, பல நாடுகளிலும் இருந்துவருகிறது. இதுபற்றி ஏகப்பட்ட பொருளாதார நிபுணர்கள் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளனர். 1930-1940இல் நிலவிய உலகப் பொருளாதாரப் பெருமந்தத்தினால் ஏற்பட்ட வேலையின்மைப் பிரச்சனையால் பாதிக்கப்படாத நாடுகளே இல்லையென்று சொல்லலாம். அந்த சமயம், John Maynard Keynes என்பவர் The General Theory of Employment, Interest & Money என்ற நூலை 1936 இல் வெளியிட்டார். அவர் கூறிய அறிவுரைகளை நடைமுறைப்படுத்தியதன் மூலம், இந்த உலகம், பொருளாதாரப் பெருமந்தத்தின் கேடுகளில் இருந்து தப்பியது. பல ஆண்டுகளின் ஆய்வுக்குப் பின்னர், வேலையின்மையின் அளவுக்கும் கூலிக்கும் எதிரிடை உறவு இருப்பதாக Phillips என்பவர் நீண்ட கால ஆய்வுக்குப் பின்னர் 1958இல் ஒரு கட்டுரை வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து வேலைவாய்ப்பு மற்றும் வேலையின்மை பற்றிப் பல கோட்பாடுகள் வெளிவந்தன; வெளிவருகின்றன.

பொருளியலில் நோபல் பரிசு பெற்றுள்ள இந்தியர், Amartya Kumar Sen, என்பவர் "Employment, Technology and Development" (Oxford University Press, 1975) என்ற அவரது நூலில், வேலை என்கிற கருத்துருவைப் பல கோணங்களில் இருந்து பார்க்கிறார். வேலை என்பது வருமானம் (income aspect: earning money) தர வேண்டும்; உற்பத்தி செய்ய வேண்டும் (production aspect: contributing output); ஒரு மரியாதையும் தர வேண்டும் (recognition aspect: gaining self-worth and social recognition) என்கிறார். வருமானம் தராத வேலை, சேவை எனப்படும்.

கூலியின் அளவை நிர்ணயிக்கும் காரணிகள் பல உள்ளன. அவற்றை இங்கு விளக்க இடமிருக்காது. சுருங்கக் கூறினால், ஊதியம் ஏதும் இன்றி மன நிறைவுக்காக சமூக சேவை செய்வோரும் உண்டு; சட்ட, சமூக விரோதமான வேலையில் ஈடுபட்டு நிறையப் பணம் ஈட்டிச் சந்தோசப்படுபவரும் (மரியாதை பெறுபவரும்!) உண்டு. ஒரு வேலைக்கான தேவையும், அந்த வேலையைச் செய்வோரின் எண்ணிக்கையும், அவர்களின் பேரம்பேசும் சக்தியும் கூட்டாகச் சேர்ந்து கூலியின் அளவை நிர்ணயிக்கின்றன. ஒரு கூலியாள் உயிர்வாழ எவ்வளவு பணம் வேண்டுமோ, அவ்வளவு கூலி கிடைத்தால் நல்லது; ஆனால், அதைப்பற்றிய கவலை யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

நம் நாட்டில் பொதுவாக, எவ்வளவுதான் சிரமங்களும் சிக்கல்களும் இருதாலும், பணம் செலவானாலும், தனியார் துறையில் வேலை எளிதாகக் கிடைத்தாலும், அரசுத்துறை வேலைகள்தான் பெரும்பாலும் சாதாரண மக்களால் விரும்பப்படுகின்றன. தனியார் இலாபமே குறிக்கோளாக வைத்து இயங்கும் இப்போதைய பொருளாதார அமைப்பில், தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி இலாபம் குவிக்கும் போக்கு தனியார் துறையில் மிக அதிகமாக இருப்பதாகவே உணரப்படுகிறது.

செல்வந்தர்கள் வீட்டுப் பெண்கள் வேலைக்குச் செல்வதை அவலமாக, தரக்குறைவாக நினைக்கலாம்; அவர்கள் பல இயந்திரங்களின் உதவியோடு, சமைப்பதிலும், பொழுதுபோக்கிலும், சுகம் பெறுவதிலும் நேரத்தைச் செலவிடலாம்; வேலைக்குச் செல்லாமல் வீட்டில் இருப்பதைப் பெருமையாகச் சொல்லலாம்; சிலர் வேலை கிடைத்தும் (பெருமை பேசிக்கொண்டு, மத, சாதிக் கட்டுப்பாட்டுக்காக, குடும்பப் பொறுப்புக்காக, ஆண்களின் அடக்குமுறையால், திருமணம் நிமித்தம், பணியிடங்களில் நடக்கும் சித்திரவதைகளுக்குப் பயந்து) வெளி வேலைக்குப் போகாமல் இருக்கலாம்; சிலருக்கு வேலை கிடைக்காமல் இருக்கலாம். ஆனால், ஏழைப் பெண்கள் (அரசு) வேலை பெறுவதற்காக அலைவதையும் காணலாம்; தம்மைத் தாமே தாழ்மையாக, கேவலமாக நினைக்கலாம்.

இன்று, அரசு அறிக்கைகள் தரும் புள்ளிவிவரங்களின்படி, நம் நாட்டில் முதுநிலைக் கல்வியிலும், பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியல்களிலும் அதிகமாகப் பெண்கள் காணப்பட்டாலும், அவர்களில் இருபத்தைந்து சதவீதத்தினரே பணம் ஈட்டும் வேலைக்குச் செல்கின்றனர்; மீதம் உள்ளோர், குடும்பப் பணியினை ஏற்று செயல்பட்டாலும், அவர்கள் வேலையில்லாதோர் பட்டியலில்தான் சேர்கிறார்கள். அந்தப் பெண்களும் பணம் ஈட்டும் பணிகளுக்கு வந்துவிட்டால், தேசிய வருமானம் உயரலாம்; ஆனால், குடும்பங்களின் நிலைமை பாதிக்கப்படலாம்; பல ஆண்களுக்கு வேலை கிட்டாமல்கூடப் போகலாம்.

தானியங்கி இயந்திரங்களின் பயன்பாடு வேலைவாய்ப்பைக் குறைத்துவிடும் என்று பலர் நம்பினர், தெரிவித்தனர்; தெரிவிக்கின்றனர். ஆனால், அது நடக்கவில்லை. மக்கள் தொகை வளர்ச்சிவீதம் குறைந்தாலும், மக்கள்தொகையும் மக்களின் ஆசைகளும், தேவைகளும் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. அதன் விளைவாக, பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தி அளவும் அதிகரித்துக்கொண்டே இருப்பதால், இயந்திர மனிதன்கள் வந்தபோதும், மனிதர்கள் இயந்திரமாக இயங்கிக்கொண்டே உள்ளனர்; சில வேலைகள் காணாமல் போனாலும், பல புதிய வேலைகள் வந்துகொண்டே இருப்பதால், வேலைவாய்ப்பில் வீழ்ச்சி எதிர்பார்த்த அளவிற்கு இல்லை. ஏதேனும் ஒரு வேலை, சில சிரமங்களுடன், கிடைத்துக்கொண்டுதான் இருக்கிறது. விரும்புகிற,

நிரந்தர வேலை, எதிர்பார்க்கும் அளவிற்கு அதிக வருமானம், ஒய்வுக்காலத்திலும் ஊதியம் போன்றவை கிடைப்பதில்தான் சிரமங்கள் இருக்கின்றன.

நம் நாட்டு மக்கள் பணிக்காகவும், படிப்புக்காகவும், வசதிக்காகவும் வெளி நாடுகளுக்குப் பயணிப்பது அதிகரித்து வருகிறது. இது நம் நாட்டில் நிலவுகிற தரக் குறைவையும், பற்றாக்குறையையும், வசதிக்குறைவையுமே காட்டுகிறது. ஆனால், *Donald Trump* போன்ற (இந்தியாவிலும் சில) தலைவர்கள் இடம்பெயர்ந்த உழைப்பாளர்களைப் படுத்தும் பாடோ அதிகம். நம்மவர்கள் நாடுவிட்டு நாடு சென்று உழைத்துப் பெற்ற ஊதியத்தை, நம் நாட்டுக்கு அனுப்பி உதவுகிறார்கள். இதில் கேரளா மாநிலம் முதல் இடம் பெறுகிறது. ஆனால், அதே சமயம், வட மாநிலங்களில், வளர்ச்சியும் வாய்ப்பும் குறைவாக இருப்பதால், அங்கிருந்து கூட்டம் கூட்டமாய் உழைப்பாளர்கள், கேரளா மாநிலம் உட்பட, தென்மாநிலங்களுக்கு வந்து பிழைக்கிரார்கள் (இந்த ஏழ்மை நிலைமையை வடநாட்டு அரசியல்வாதிகள் பயன்படுத்தி உல்லாசமாக வாழ்கிறார்கள்). இப்படியாக, இடம்பெயர்ந்து மக்கள் பணம் ஈட்டினாலும், அவர்கள் மௌனமாக எதிர்கொள்ளும் சமூக, குடும்ப, உணர்வுப் பிரச்சனைகளோ ஏராளம். கொரான தொற்றுச் சமயம் மக்கள் பட்ட அவஸ்தையை விளக்கிட இயலாது. ஆனால், இவை எல்லாம் பொருளாதாரக் கணக்குகளுக்குள் வருவதில்லை. நமது அரசும், மக்களும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை.

இப்படியாக, அறிவியல், தொழில்நுட்ப, பொருளாதார வளர்சிக்குக் காரணமாக இருக்கும் உழைப்பாளர்கள் நீண்ட காலமாகப் பல சிக்கல்களுக்குள் மாட்டிக்கொண்டுள்ளனர். பொதுத் துறைகளில் தொழிலாளர்களுக்கு சற்று வசதி அதிகமாக இருந்தது. ஆனால், சமீப காலமாக அவர்கள் சரியாக உழைப்பது இல்லை என்ற குற்றச்சாட்டை வைத்து, பொதுத்துறையைச் சுருக்கிவிட்டார்கள். உழைப்பாளர்களிடம் உழைப்பைப் பெற, தனியார் துறைகள் பல சூழ்ச்சிகளைச் செய்து வருகின்றன. அவற்றில் மாட்டிக்கொண்டுள்ள தொழிலாளர்கள், வெளியில் சொல்ல முடியாத, அவர்களே அறியாத, பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். அதனால், கல்வி அறிவு பெற்றோரின் எண்ணிக்கை உயர்ந்துவந்தபோதும், சட்ட மற்றும் காவல்துறைகளின்மூலம் அரசு குற்றங்களைத் தடுக்க முயலும்போதும், ஏமாற்றுதல், திருடுதல், கொலை, தற்கொலை போன்ற பொருளாதார மற்றும் சமூகக் குற்றங்கள் குறையவில்லை. எனவே, அமைதியான, நிலைத்த மேம்பாடு அடைய, சிறு தொழில், இரவுத் தொழில், சாலையோரத் தொழில், அன்றாடக் கூலித்தொழில், வேலையின்மை போன்றவற்றில் மாட்டிக்கொண்டுள்ள தொழிலாளர்களின் நலனைப் பேணும் கொள்கைககளைக் கொண்டுவர அரசாங்கம் யோசிக்க வேண்டும்.

வரலாற்றுத் தொல்லெச்சமான நீலிக்கண்ணீர்!

தமிழ்மாமணி, புலவர். பூங்கொடி பராங்குசம்

பெண்களின் கண்ணீர் பொய்யெனத் தெரிந்தால், அக்கண்ணீரை "நீலிக்கண்ணீர்" வடிப்பதாகக் கேலியாகவும் குத்தலாகவும் தமிழ்நாட்டு மக்களிடையே பேசப்படுவது உண்டு. ஆனால், இப்பேச்சு வெறும் வார்த்தையால் பிறப்பதன்று; இதற்கும் பின்னால் ஏதோ ஒரு வரலாற்றுத் தொல்லெச்சம் ஒளிந்திருப்பதை ஆய்ந்து பார்ப்பின் அறிந்து கொள்ளலாம்!

காலங்காலமாக ஆண், பெண் தெய்வங்களைக் குறிப்பிடும்போது ஆண்களை மட்டும் வீரம் பொருந்தியவர்களாகவும் ஊரைப்பாதுகாக்கும் காவல் தெய்வங்களாகவும் பேசப்படுகின்ற நிலையில், பெண் தெய்வங்கள் பெரும்பாலும் பழிவாங்குவனவாகவும், கொடூரத்தன்மை படைத்தவையாகவும் சித்தரிக்கப்படுவதைக் கண்கூடாகக் காணலாம். இதன் அடிப்படையில் தான் நீலிக்கண்ணீரில் ஒளிந்துள்ள நீலியின் கதையும் அமைந்துள்ளது!

இலக்கியச் சான்றுகள்

நீலியின் கதையினைச் செவி வழியாகக் கேட்ட கதையாக ஒரு போதும் நினைத்தல் கூடாது. ஏனெனில், சேக்கிழாரின் பெரியபுராணத்தில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரியபுராணம்

நற்றிறம்புரி பழையனூரச் சிறுத்தொண்டர் நவைவந்து உற்ற போதும்
முயிரையும் வணிகனுக் கொருகாற் சொற்ற மெய்ம்மையும் தூக்கியச்
சொல்லையே காக்கப் பெற்ற மேன்மையி னிகழ்ந்தது பெரும்தொண்டை நாடு!

என்று வாக்குத் தவறாத வேளாண்குடி மக்களின் சிறப்பினைத் தொண்டை நாட்டுப் பெருமையுடன் கூறுமிடத்துச் சேக்கிழார், நீலியைப் பற்றிய ஒரு வரலாற்றுக் கதையையும் குறிப்பிட்டுப் பாடியிருப்பதால், அக்கதையில் ஒரு வரலாற்றுத் தொல்லெச்சத்திற்குச் சான்றும் கிடைக்கிறது.

மற்றும், தொண்டைமண்டலப் பெருமையைப் பாடும் தொண்டைமண்டலச் சதகத்தில்:

தொண்டைமண்டலச் சதகம் - 8

இன்னும் புக ழ்நிற்கவே ஓர் பழிக்கு ஆமற்று எழுப தின்மர் துன்னும்
தழல்புக்கு ஒளித்ததெல்லு ஆய்வு அருதிப் பொருளாய் உன்னும் புரிசைத்

திருவாலங் காட்டின் உரைப திகம் என்னும் தமிழில் வகுத்ததுஅன்று ஓதொண்
டைமண் டலமே!

என்னும் பாடலாலும் இக்கதையினை அறிந்துகொள்ள முடிகிறது! மேலும், இந்த வரலாறு பக்தி இலக்கியக் காலத்திற்கு மிக முற்பட்டதாகவே இருந்தது என்பதற்குக், கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தேவாரம் பாடிய திருஞானசம்பந்தரும் தம்முடைய தேவாரத்தில் பாடியுள்ளார்:

திருமுறை 1-45:1

துஞ்ச வருவாரும் தொழுவிப்பாரும் வழுவிப்போய் நெஞ்சம் புகுந்தென்னை
நினைவிப்பாரு முனைநட்பாய் வஞ்சப் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும்
வகைகேட் டஞ்சும் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகளே!

அதாவது, முன்பொருகால் வஞ்சிக்கப்பட்ட பெண்ணொருத்தி நட்புடன் பேசி, உயிர்ப்பலி வாங்கிய கதையினைக் கேட்டுப் பயப்படும் பழையனூர் ஆலங்காட்டில் கோவில் கொண்ட அடிகளே என்று சிவபெருமானைப் பாடுகிறார் சம்பந்தர் அடிகள்.

இன்னும் மேலாக, இக்கதையின் வரலாற்றைத் தெளிவாக விரிவுபடுத்தி உமாபதி சிவாச்சாரியார் எழுதிய சேக்கிழார் புராணம் என்னும் இலக்கியத்திலும் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சேக்கிழார் புராணம் - 15

மாறுகொடு பழையனூர் நீலி செய்த வஞ்சனையால் வணிகனுயிர் இழப்பத்
தாங்கள் கூறியசொல் பிழையாது துணிந்து செந்தீக் குழியிலெழு பதுபேரும்
முழுகிக் கங்கை ஆரணிசெஞ் சடைத்திருவா லங்காட் டப்பர் அண்டமுற
நிமிர்ந்தாடும் அடியின் கீழ்மெய்ப் பேறுபெறும் வேளாளர் பெருமை எம்மால்
பிரித்தளவிட் டிவளவெனப் பேச லாமோ?

இந்தப் பாடலில் நீலியின் கதை முழுவதும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நீலியின் வரலாறு

முன்பொரு காலத்தில் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த வணிகன் ஒருவன், பரத்தையர் தொடர்பில் இருந்ததைக் கண்டித்த தன்மனைவியைக் கொன்றுவிட்டான். இறந்த அவள், பேயாகத் திரிந்து தன்னைக் கொல்லத் தொடர்வதை அறிந்த வணிகன், ஒரு மந்திரவாதியை அணுகித் தன்னைப் பாதுகாக்குமாறு வேண்டினான். மந்திரவாதி கொடுத்த ஒரு வாளை எப்பொழுதும் தன்னுடன் வைத்துக்கொண்டிருந்தான்.

ஒருமுறை வணிகம் தொடர்பாகத் திருவாலங்காட்டு வழியே சென்றபோது, அவனைப் பின்தொடர்ந்த நீலி என்னும் அந்தப் பேய் மனைவி தன்னைக் கொல்லப் பின்தொடர்வதை அறிந்த வணிகன், தான் வைத்திருந்த வலிமை வாய்ந்த கத்தியை எடுத்தான். அச்சப்பட்ட நீலிப்பேய் அங்கிருந்த ஒரு கரிக்கட்டையைக் குழந்தையாகவும், தன்னை ஒரு பெண் உருவம் ஆகவும் இடுப்பில் குழந்தையுடன் வணிகனைப் பின் தொடர்ந்து சென்றாள்.

பயந்து போன வணிகனும், அந்த ஊரில் சென்று நிலைமையை எடுத்துச் சொல்லித் தன்னைப் பேய் கொல்ல வருவதாகக் கூறிக் காப்பாற்றுமாறு வேண்டினான். அவ்வூரில் எழுபதின்மர் கொண்ட குழுவினர் ஒன்று சேர்ந்து, நீலியை வழிமறித்துக் கேட்க, அவளோ வணிகன் தன்னுடைய கணவன் என்றும், பரத்தையர்பால் கொண்ட காமத்தினால் அவன் அவளைக் கைவிட்டதாகவும், மீண்டும் அவனுடன் தன்னைச் சேர்த்து வாழவைக்க வேண்டும் என்று அவர்களிடம் அழுது புலம்பினாள். ஆனால் வணிகனோ மறுத்தான்.

இந்நிலையில் நீலியின் இடுப்பிலிருந்த குழந்தையோ அவனைக் காட்டி "அப்பா" என்று கூறக் குழுமி இருந்தவர்கள், அவனே குழந்தையின் தந்தையாக இருக்க முடியும் என்று எண்ணி வணிகனிடம், "நாளைக்கு இதற்கு ஒரு முடிவு செய்யலாம்" என்று அடக்கினார்கள். மேலும், இரவு தங்குவதற்கு அவர்களே ஒரு வீட்டை ஏற்பாடு செய்தார்கள்.

வணிகன் பலமுறை மறுத்தும், நீலி வடித்த கண்ணீரை நம்பிய குழுவினர், அவனை வீட்டுக்குள் தள்ளி அடைத்தனர். அவன் வைத்திருந்த கத்தியால் தன்னைக் கொன்று விடுவான் என்று நீலி சொன்ன வார்த்தையை நம்பி, அவனிடமிருந்த கத்தியையும் அவர்கள் பிடுங்கிக் கொண்டார்கள். வணிகனும் இவள் என்னைக் கொன்று விடுவாள் என்று அலறித் துடித்தான்.

ஊர் மன்றக் குழுவோ, "எதுவும் நேராமல் நாங்கள் பார்த்துக்கொள்வோம்; அப்படி ஏதாவது நேர்ந்தால், நாங்கள் எழுபதின்மரும் தீக்குளித்துச் சாவோம்; நாங்கள் சொன்னசொல் தவற மாட்டோம், எங்களை நம்பு" என்று வணிகனிடம் உறுதி அளித்து விட்டுச் சென்றார்கள்.

ஆனால் நீலிப்பேயோ வணிகனைக் கொன்று விட்டுச் சென்றுவிட்டது. மறுநாள் செய்தியறிந்த வேளாண் மக்கள், வணிகன் கூறியதை ஏற்காமல் விட்டதற்கு வருந்தினார்கள். இருந்தும், சொன்ன சொல் மாறாத வேளாண் குடிகள் நாங்கள் என்பதை மெய்ப்பிப்பதற்காக ஒரு பெரிய குழிதோண்டி அதனுள் இறங்கித் தீவைத்துக் கொண்டார்கள். இதைக் கேள்வியுற்ற மூவேந்தர்கள், வேளாளர் பெருமையைப் புகழ்ந்து 3 பாடல்கள் எழுதியதாகவும், அவற்றைத் "தமிழர் நாவலர் சரிதை" என்னும் நூலில் இருந்து எடுத்து, மு. இராகவையங்கார் தம்முடைய "பெருந்தொகைப் பாடல் தொகுப்பு" என்னும் நூலில் வெளியிட்டதையும் குறிப்பிடுகிறார்.

இதுதான் நீலி பற்றிய கதை ஆனாலும், அது கதைகளில் பலவாறாகப் பேசப்படுகிறது. கேரள, கன்னட இலக்கியங்களிலும் சிலசில மாற்றங்களுடன் நீலியின் கதை இருக்கிறது. மேலும், இசக்கி அம்மன் கதையுடனும் இணைந்து, பழையனூர் நீலிக் கதை வில்லுப்பாட்டு வடிவிலும் பாடப்படுகிறது. ஆனால் எல்லாவற்றிலுமே நீலி பழிவாங்கும் பேயாகவே பேசப்படுகிறாள்!

சமணப் பின்னணியும் நீலிக்கண்ணீரும்

நீலியைப் பற்றிய தொன்ம வரலாறு ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சமணச் சார்புக் காப்பியமாம் குண்டலகேசியில், "நீலகேசி"யாக வருகின்ற சமணப் பெண் துறவியைக் குறிப்பதுதான் இந்த நீலிக்கண்ணீர் என்பதுவே!

நீலிக்கும் அவள் கண்ணீருக்கும் ஏன் இப்படித் தொடர்புபடுத்தப்படுகிறது?

சமணக் கொள்கை என்பது, அனைத்துப் பொருட்களும் கடவுளால் படைக்கப்பட்டவை என்பதை மறுப்பது; உலகில் எதுவும் கடவுளால் படைக்கப்பட்டது கிடையாது. தோன்றுவது அனைத்தும் உருமாற்றம் அடைவதுதான் உண்மை; மண் சேர்ந்து இறுகும் நிலையில் மலையாகும்; அதேபோல் மலை தேய்ந்து மண்ணாகும்; இவற்றின் துகள்கள்தான் உருமாறுகின்றனவே தவிர, மலையோ அல்லது மண்ணோ அழிவது கிடையாது என்பதே சமணம் சார்ந்த கொள்கை! ஆனால், அனைத்தும் கடவுளால் படைக்கப்பட்டவை என்று கூறுவது சுயம்பு வழிபாட்டுக் கொள்கையாளர் வாதம்! இரண்டிற்கும் முரண்பட்டதால் அடிக்கடி மோதல் ஏற்பட்டது.

இந்த வாக்குவாதத்தில் சமணத் துறவியான நீலிகேசி முறையாக எதிர்த்தும் சான்றுகள் கேட்டும் வாதித்ததால், எதிர்த்தரப்பினர் பதிலளிக்க முடியாமல் போகவே, அவர்கள் அரசரின் கவனத்தைத் தங்கள் பக்கம் திருப்பி, அந்தச் செல்வாக்குடன் அவளைச் சிறைப்பிடித்தனர். உயிர்ப்பலியாக அவளுக்குக் கொடுத்த தண்டனைக்காக அவள் இழுத்துச் செல்லப்படும்போது, கண்ணீர் விட்டுக் கலங்கி இருக்கிறாள். எதற்குமே கலங்காத நீலி கண்ணீர் வடிக்கிறார் என்று சூழ்ச்சியால் வெற்றி பெற்றவர்கள் அவளைக் கேலிசெய்து சிரித்தார்கள். அதிலிருந்து இந்நிகழ்ச்சியைச் சமண வாதங்களின் போது தூற்றுவதும் பழிப்பதுமாகத் தொடர்ந்ததால், நாளடைவில் "நீலிக்கண்ணீர் நெத்தியிலே" என்னும் சொலவடை பழிப்பதற்காகவே பயன்படுத்தும் சொற்றொடராக மாறிவிட்டது!

உண்மையைச் சொல்லப் போனால், நீலி உயிருக்குப் பயந்து கலங்கவில்லை என்பதே முற்றும் சரியானது. ஆனால் கண் கலங்கியதற்குக் காரணம், உண்மையை உணர்ந்து கொள்ளாதவர்களிடம் சிறைப்பட்டுத் தோற்றுவிட்டோமே என்பதை எண்ணித்தான்!

முடிவுரை

சிறந்த பண்பாட்டு மானுடவியல் ஆய்வாளரான தொ. பரமசிவம் ஐயா அவர்களின் ஆய்வில், "தெய்வம் என்பதோர்" நூல் பண்பாட்டுத் தொன்மக் கதைகள் அடங்கிய ஒரு நூலாக வெளியே வந்தது. இதில் அவர் இரண்டாம் கதையாக நீலியைப் பற்றி எழுதி இருக்கிறார்.இக்கதையைப்பற்றிஅவர்ஆழமானகருத்துக்களைக்கூறிப்படிப்பவர்களையும் சிந்திக்க வைக்கிறார். அதில் குறிப்பிடும்போது, இலக்கியங்கள் காலந்தோறும் பெண்களைப் பற்றிய ஒருதலை சார்பான கருத்துக்களையே வைப்பதாகத் தாங்குவதை உறுதியாகத் தெளிவுபடுத்திக் காட்டுகிறார்.

ஆனாலும் விதிவிலக்காக வரலாற்று நிகழ்வுகள் பலவற்றின் மையக்கருத்துகள், பண்பாட்டுத் தெய்வங்களிடையே காணப்பட்டாலும் நீலி போன்ற நம்முடைய பழையபெண்தெய்வங்கள் பழிவாங்குவதற்கே படைக்கப்பட்டதைக் குறிப்பிட்டும், காத்தவராயன், சுடலைச்சாமி, கருப்பண்ணன் போன்ற ஆண்தெய்வங்களை மட்டும்

வீரமுள்ள தெய்வங்களாகவே படைத்திருக்கும் நோக்கத்தினால், ஆணாதிக்கமும் அடிமைத்தனமும் மேலோங்கியிருக்கும் நிலையையையும் சுட்டிக் காட்டுகிறார்.

இதுபோன்ற பல வரலாற்றுக் கதைகள் பலவகைகளில் வடிவம் பெற்று இன்றும் வாழ்ந்து கொண்டே இருக்கத்தான் செய்கின்றன. அவற்றை முழுதும் கற்பனை என்று ஒதுக்கிவிட முடியாது. ஆனாலும், அவை ஏதோ ஒரு வடிவில் நம்மிடம் இன்றும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன என்பதை நாம் மறுக்க இயலாது. ஒரு சமயத்தைச் சாடுவதற்காக வேண்டுமென்றே பழிப்புப் பொருளில் பண்டையநாள் தொட்டு நீலிக்கண்ணீர் இடம்பெற்றாலும் நீலி என்னும் பெயர், இத்தனைக் காலங்கடந்தும் தொன்மை மாறாமல் மக்கள் பேச்சுமொழியில் கலந்திருப்பதே வரலாறு வழிவந்த சான்றாக வாழ்ந்துகொண்டிருக்கிறது என்பதை அறியமுடிகிறது!

Thirukkural

In English - Dr. Chandrika Subramanian

3. The Merit of Ascetics

21. Ascetics of self-control and self-sacrifice are esteemed very high by holy scriptures.

22. None can count the numbers dead in the world nor the glory of saints who have renounced the world.

23. Their peerless glory shines high in the world who after right discernment practice ascetic virtue.

24. He attains heavenly bliss who controls the wild senses with the hook of will power.

25. Mighty is the power of ascetics who have curbed the five senses. Indra, heaven's overlord, stands witness to it.

26. Great saints control their mind and do rare things small men cannot do so.

27. Taste, light, touch, sound and smell who knows how to control these five, commands the world.

28. Sages of soulful words are known by their words of wisdom, by the scriptures written by them.

29. The anger of those who stand high on the hill of virtue is momentary but overpowering.

30. Gentle sages are men of virtue, guardians of Dharma, with compassion for all beings

"பராசக்தியும் மொழிப்போரும்"

முனைவர் சிவ இளங்கோ
புதுச்சேரி.

தமிழ்நாட்டுப் பள்ளிக் கல்வியில், சிபிஎஸ்சி உட்பட, கட்டாய மும்மொழித் திட்டம் கிடையாது. கட்டாய ஆங்கிலத்தை உள்ளடக்கிய இருமொழிக் கொள்கை தான் உண்டு. அதைச் சட்டமாக்கியவர் பேரறிஞர் அண்ணா. அவர் மக்கள் சக்தியை மட்டுமே நம்பி அரசியல் செய்தவர். ''மக்களிடம் செல்; மக்களோடு பழகு; அவர்களோடு வாழ்; அவர்கள் தேவையை அறி; அதை நிறைவேற்று'' என்பதுதான் அண்ணா, தன் தம்பிகளுக்குக் கூறிய அரிச்சுவடிப் பாடம்.

மக்கள் சக்தி மீது அவருக்கு எந்தளவுக்கு நம்பிக்கை இருந்திருந்தால், ''நான் கொண்டு வந்த சட்டங்களின் மீது யாரேனும் கைவைக்க நினைத்தால், எம்மக்கள் வெகுண்டெழுவார்கள் என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கும் வரை, அண்ணாதுரை தான் இந்த நாட்டை ஆள்வதாகப் பொருள்'' என்று தமிழ் மக்கள் மீது தான் கொண்டிருந்த நம்பிக்கையை வெளிப்படுத்தி இருப்பார்? அறிஞர் அண்ணாவின் தம்பிகள் கூட மறந்து போய் விட்ட அந்தச் சிந்தனையைப் பராசக்தி படம் இன்றைய தலைமுறையினர்க்கு அறிமுகம் செய்து வைத்திருக்கிறது.

தற்போது தமிழ்நாட்டின் தனியார் பள்ளிகளில் இந்தி படிக்கும் மாணவர்களும், தம் பிள்ளைகள் இந்தி படிப்பதை வரவேற்கும் பெற்றோர்களும் கண்டிப்பாகப் பார்க்க வேண்டிய படம் இது. இந்தி படித்திருந்தால் வட இந்தியாவில் வாழ்ந்திருப்போம், இந்திய அரசின் உயர் பணியில் இருந்திருப்போம் என்று பெருமையாகக் கருதும், 'எப்படியும் வாழும்' கூட்டமும் சற்றே பொறுமையுடன் பார்க்க வேண்டிய படம் இது.

மத்தியில் ஆள்வது காங்கிரசாக இருந்தாலும், பாஜகவாக இருந்தாலும் ஏன் இந்தியைத் திணிக்க முயல்கிறார்கள்? தமிழ்நாடு அதை ஏன் எதிர்த்தது? இப்போதும் ஏன் எதிர்க்கிறது? ஏன் எதிர்க்க வேண்டும்? திடீரென கர்நாடகம், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்கள் இந்தியை எதிர்ப்பதின் காரணம் என்ன? இந்தித் திணிப்பை முன்னெடுத்த ஒன்றிய அரசும், அதற்குத் துதிபாடிய தமிழ்நாட்டு அமைச்சர் பெருமக்களும் எப்படி வெறியுடன் இந்தியைத் திணிக்க முயன்றனர் என்ற வரலாறு தெரியாதவர்களுக்கும்,

இந்தி திணிக்கப்படுவதை எதிர்த்துத் தாய்மொழியாம் தமிழுக்காகத் தங்கள் இன்னுயிரை நீத்த போராளிகளை இதுவரை அறியாதவர்களுக்கும், வீழ்வது நாமாக இருந்தாலும், வாழ்வது தமிழாக இருக்கட்டும் என்று போராடிப் பகைமுடித்து வென்ற

தமிழர் வரலாறு தெரியாதவர்களுக்கும் அந்த வரலாறைக் கூற இத்திரைப்படம் முயன்றிருக்கிறது

இந்தி தமிழர்களுக்கு மட்டுமல்ல மலையாளம், மராட்டியம், தெலுங்கு, வங்காளம் போன்ற மொழிகளுக்கும் எதிரானது என்பதையும் தெரியப்படுத்தி இருக்கிறார் இயக்குநர். அதேநேரம், திரைப்படங்களுக்கே உரிய தன்விருப்பத் தன்மைகளும், அதற்காகக் கதையைச் சற்றே வளைத்துக் கொள்ளும் தன்மைகளும் இல்லாமலில்லை.

இந்தி மொழியை எத்தனை ஆண்டுக் காலமாக பிறமொழி பேசும் மாநிலங்களின் மீது திணிப்பார்கள்? அதுவும், மொழிப் போராட்டங்கள் வெடித்து, தமிழ்நாட்டில் இத்தனை உயிர்கள் தங்கள் மொழிக்காக உயிர்த் தியாகம் செய்தும் கூட, மீண்டும் மொழியைத் திணிக்கும் பயங்கரவாதத்தின் அடிப்படைத் தன்மைக்குக் காங்கிரஸ், பிஜேபி மட்டும் காரணமல்ல ஒன்றிய அரசைப் பின்னணியில் இயக்கிக் கொண்டிருக்கும் பார்ப்பனியம் தான் காரணம் என்னும் அடிப்படைத் தன்மையைப் புரிந்து கொண்டிருப்பது தமிழ்நாடு மட்டுமே. அதற்குக் காரணம் திராவிட இயக்கமே. இந்த அடிப்படையை இத்திரைப்படம் கூறவில்லை. கூறமுடியாது. காரணம் நம் நாட்டுத் தணிக்கை முறை.

பராசக்தி காட்டும் ஒன்றிய காங்கிரஸ் என்பது இன்றைய ஒன்றிய பாஜகவின் முன் 'பரமசாது' என்றாலும், காட்டப்படும் ஒன்றிய அரசின் மக்கள் விரோதத் தன்மை, இன்றைய பாசிச பாஜகவின் மூர்க்கத் தனத்தோடு பொருந்தி வரும் காலத்தில், இப் படத்தைப் பார்க்க நேர்வதால் அதன் பலன்கள் தற்போதைய வலதுசாரிப் பாஜகவிற்கே செல்கின்றன என்பதைத் திரையரங்க ஆரவாரங்கள் வழி உணர முடிகிறது. இதைச் சரியாக உணராத காங்கிரசார் இத்திரைப்படம் ஏதோ தங்களுக்கு எதிரானது என்று கூறும் மேட்டிமைத் தனம், 1967 காலத்தை மீட்டெடுப்பது போல் நிகழ்கிறது. இந்திக்காகக் கல்வித் தொகையை மறுக்கும் ஒன்றிய அரசோடு தன்னை ஒப்பிட்டுத் தங்களைத் தாங்களே வலிந்து வலையில் மாட்டிக் கொள்ளும் காங்கிரஸ், 1967 க்குப் பிறகு இன்னும் வளராமலேயே உள்ளதோ என்று தான் நினைக்கத் தோன்றுகிறது.

படம் பார்த்து விட்டு வந்த ஒரு 10, 12 வயது சிறுமி தன் குடும்பத்தினரிடம் பேசிக் கொண்டிருந்தாள். "இவ்ளோ நடந்திருக்காப்பா... Goosebumpsப்பா! ஸ்கூல்ல இந்தி செகண்ட் லாங்குவேஜா எடுக்கவே கூடாது..." என்று அச்சிறு பெண் சொன்னதை வலைத்தளங்கள் வழி அறிய முடிவதைப் பார்க்கும் போது, பராசக்தி திரைப்படம் தன் பெயருக்கு ஏற்ப, வந்த வேலையைச் செய்துவிட்டது என்றே தோன்றுகிறது.

1952 ஆம் ஆண்டில் வெளிவந்த பராசக்தியில், “அம்பாள் எந்தக் காலத்திலடா பேசினாள், அறிவு கெட்டவனே!” என்றும், “அது பேசாது; கல்!” என்றும் கடவுள் மறுப்பு வசனங்களைப் பேசவைத்து, பராசக்தி பேரிலேயே படம் எடுத்தவர் கலைஞர். அந்தப் ‘பராசக்தி’ பெயர் திராவிட இயக்க வரலாறில் ஒரு மைல் கல்லாக, ஒரு குறையீடாக மாறிவிட்டது. இதைக் கிண்டல் செய்தாலும் கூடப் பராசக்தி என்ற சொல், திராவிட இயக்கத்தவரின் போராட்டச் சக்தியாக மாறிவிட்டதை நிரூபிக்கும் விதமாகவே இந்தப் படத்தில் வரும் வசனமான, “டில்லி தான் இந்தியாவா?” என்று மார்புக்கு நேராக துப்பாக்கி நிறுத்தப்பட்ட நிலையில் ஒரு மாணவன் குமுறும் எரிமலைச் பேச்சு அமைந்திருக்கிறது.

இன்றைய வறட்சி மிக்க தமிழ் சினிமாவில்,, மொழிப் போரைக் கூறும் ஒரு திரைப்படத்தில், திராவிட அரசியல், அடைமழையாய்ப் பொழிந்திருப்பதற்கு அவ்வியக்கத்தினர் மகிழ்ந்து கொண்டாடும் வேளையில், இத்தனை நாள் இப்படிப்பட்ட வரலாற்றுப் பின்னணி கொண்ட படங்கள் ஏன் வெளிவரவில்லை என்று தீவிரமாக யோசிப்பதும் நலம்.

திரைப்படத்தின் தொடக்கத்தில் 1959 ஆம் ஆண்டு நிகழ்வு ஒன்றைக் காட்டிவிட்டு, உடனேயே 1964 என்று கார்டு போட்டுக் கதைக்குள் சென்று விடுகிறார்கள். இந்தித் திணிப்பு எதிர்ப்பில் பெரியாரின் பங்களிப்பைக் காட்ட வில்லை. கதை நிகழ்காலம் 1959 - 1967 என்பதால், கதையில் வரும் வயதான ஒரு கதாபாத்திரத்தின் மலரும் நினைவுகளாகக் கூட 1938, 1948, 1958, 1962 ஆம் ஆண்டுகளின் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் காட்சிகளில் சிலவற்றைக் காட்டியிருக்கலாம். ஆனால் அதுவும் தணிக்கைக் குழுவிடம் தப்பியிருக்குமா என்பதும் கேள்விக் குறிதான்.

பராசக்தி கதையில் அறிஞர் அண்ணா, ஈ.வெ.கி.சம்பத், கலைஞர், நாவலர் உள்ளிட்ட பாத்திரங்களும், பாரதிதாசன் கவிதைகளும் உயிரோட்டம் உள்ளவை. படத்தின் இறுதியில் எல்லாப் பிரச்சனைகளும் ஒத்தி வைக்கப்பட்டு மக்கள் விரும்பும் வரை இந்தித் திணிப்பு இருக்காது என்று ஒன்றிய அரசு கூறிய பிறகு, தமிழ்நாட்டில் 1967 ஆம் ஆண்டு திமுக ஆட்சி அமைந்து, அண்ணாவைக் காட்டும் பொழுதுதான் “அறிஞர் அண்ணா தமிழ்நாடு முதலமைச்சர்” என்று டைட்டில் போல எழுத்தில் காட்டுகிறார்கள். அப்போதுதான் படம் பார்ப்பவர்களுக்கு அந்தக் கதாபாத்திரம் அண்ணாதான் என்று தெரிய வருகிறது. அதற்கு முன்பு பொதுக்கூட்டத்தில் மழையில் நனைந்து கொண்டே அண்ணா முழுக்கமிடும் காட்சியிலும், சிறையில் பத்திரிகை வாசிக்கும் காட்சியிலும் காட்டப்படுபவர் அண்ணாதான் என்று படம் பார்க்கும் இன்றைய தலைமுறைக்குத் தெரியாமல் போய்விடுகிறார். அதேபோல், “அண்ணாவே ரசஞ்சோறு தான் சாப்பிடுகிறார்” என்று சிவ கார்த்திகேயன் பேசும் வசனமும் யாரைக் குறிக்கிறது என்று படம் பார்க்கும் பூமர் அங்கிள்களைத் தவிர மற்றவர்களுக்குப் புரியவில்லை. இவையெல்லாம் நீண்ட, நெடிய ஒரு வரலாறைத் திரைப்படமாக்குவதில் ஏற்படும் சிக்கல்கள் என்றாலும், இத்திரைப்படத்தைப் பொறுத்தவரை, இன்றைய இளைய தலைமுறையினருக்குத் திராவிட இயக்கம் முன்னெடுத்த மொழிப்போர் குறித்த ஒரு நல்ல அறிமுகத்தைக் கொடுத்திருக்கிறது என்றுதான் கூற வேண்டும்.

முதலாம் மொழிப்போர் நடைபெற்ற 1938 ஆம் ஆண்டின் போராட்டங்களில் கலந்து கொண்டவர்கள் யாரேனும் தற்போது இருக்கிறார்களா என்று தெரியவில்லை. ஆனால் அதற்குப் பிறகு நடைபெற்ற மொழிப்போர் காலகட்டங்களில் அதில் பங்கு கொண்டவர்கள் பல பேர் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அவர்களில் சிலர் இல் திரைப்படத்தைப் பார்த்திருப்பார்கள். அவர்களுக்கு நிச்சயமாக அந்த உண்மை நிகழ்வுகளின் காட்சிகள் உணர்வு பொங்க நினைவில் ஓடியிருக்கும். அவர்களுக்காக அந்த வரலாற்று ஏடுகளை, மிகச் சுருக்கமாக, சற்றே திரும்பிப் பார்க்கலாம்....

தொடரும்....

தலைநகரில் காற்று மாசு : புகையும் புகைச்சலும்

முனைவர் ச. சீனிவாசன்
தமிழக அரசின் சிறந்த நூல் மற்றும் நூலாசிரியர் விருதாளர்
பேராசிரியர் & தலைவர் தமிழ்த்துறை, ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரி
தில்லிப் பல்கலைக்கழகம்

அறிமுகம்

'காற்று மாசுவின் மூலத்தை ஏஐ (AI) என்னும் செயற்கை நுண்ணறிவின் மூலம் கண்டறிய டெல்லி அரசு முடிவு செய்துள்ளது. அந்தளவிற்குக் காற்று மாசு ஒரு பேரிடராக மாற்றம் பெற்று வருகிறது. பூமிப் பந்தில் தீங்கு விளைவிக்கும் இம்மாற்றம் ஒரு தீவிரப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அதைக் கட்டுப்படுத்த முடியாமல் மத்திய-மாநில அரசுகள் திணறி வருகின்றன. நீர், நிலம், காற்று, காடுகள் ஆகியவை இயற்கை வளங்களாகக் கருதப்படுகின்றன. அவற்றால் மனித மற்றும் விலங்கினங்கள் பயன்பெற்று வருகின்றன. இயற்கை வளங்களைப் பயன்படுத்த முடியாத அளவுக்கு அவற்றில் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பண்புகளால் மாற்றங்கள் ஏற்பட்டு மனித வாழ்வு, உயிரினங்களுக்குத் தீங்கிழைக்கின்ற தன்மையை 'மாசுபாடு' என்று வழங்கப்படுகிறது. ஆங்கிலத்தில் இதைப் பொல்யூஷன் (Pollution) என்று அழைக்கிறோம். மனிதனின் வாழ்விற்கு ஆரோக்கியமான உணவும், மாசு இல்லாத காற்றும் சுத்தமான குடிநீரும் இன்றியமைதாவையாகும். இன்றியமையாத இம்மூன்றும் இக்காலத்தில் மாசுபாட்டிற்கு உள்ளாகியுள்ளன. இந்தியா உட்பட உலக நாடுகளிலுள்ள பெருநகரங்களில் காற்று மாசு என்பது தீராத பிரச்சினையாக உள்ளது. காற்று மாசுபாட்டில் சிக்கித் திணறிக்கொண்டிருக்கும் இந்தியாவின் தலைநகர் தில்லியின் அவல முகத்தை அடையாளம் காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

சுற்றுச் சூழலும் காற்று மாசும்

மாசுபாட்டின் வகைகளாக, காற்று மாசு, நீர் மாசு, நில மாசு, ஒலி மாசு மற்றும் ஒளி மாசு ஆகியவற்றைக் குறிப்பிடலாம். நீர் மற்றும் நில மாசுபாடு அந்தந்த நீரும் நிலமும் சார்ந்த எல்லைகளுக்கு உட்பட்டது. அவற்றால் ஏற்படும் நன்மை தீமைகள் அக்குறிப்பிட்ட இடங்களையே பாதிக்கும். ஆனால், காற்று மாசு அப்படியில்லை, குறிப்பிட்ட எல்லைக்குள் அடங்காதது. எல்லை தாண்டி தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது.

தொழிற்சாலைப் புகை, வாகனப் புகை, முறையற்ற கழிவு மேலாண்மை, மக்கள்த் தொகைப் பெருக்கம், நகரமயமாக்கல், கட்டுமானக் கழிவுகள், காடழிப்பு, அதிகப்படியான இயற்கை வளங்களைப் பயன்படுத்துதல் போன்றவை மாசுபாட்டிற்கான அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன. காற்றில் கலக்கக்கூடிய நுண்ணிய நச்சுக்களால் மாசுபாடு ஏற்பட்டு மனித ஆரோக்கியம், விலங்குகள், மற்றும் உணவுப் பயிர்கள் பாதிப்புக்குள்ளாகின்றன. காற்று மாசுவால் காலநிலை மாற்றம், புவி வெப்பமடைதல், நீர் ஆதாரங்கள் குறைதல் மற்றும் விலங்குகள், தாவரங்கள் எனும் பல்லுயிர் இழப்பு போன்ற சுற்றுச் சூழல் பாதிப்புகளும் ஏற்படுகின்றன. நீர், காற்று, நிலம் ஆகிய மூன்றும் அதிக மாசுபாட்டிற்கு ஆட்படுகின்றன. காடுகளும் மாசுபடுகின்றன என்று சுற்றுச்சூழல் வல்லுநர்கள் கண்டறிந்துள்ளனர்.

காற்று என்னும் பிராண வாயு

'நாம் வாழும் பூமியைச் சூழ்ந்துள்ள வளி மண்டலத்தில் 79% நைட்ரஜனும், 20% பிராண வாயு என்னும் ஆக்ஸிஜனும், 3% கரியமில வாயுக்களும் உள்ளன. (இ. முருகராஜ், தினமணி, 14.3.2019). காற்றானது பல வகையிலும் இன்றியமையாதது. மனித மற்றும் பல்லுயிர் வாழ்விற்குக் காரணமான காற்று பூமியின் மேற்பரப்பில் உலவும் ஆக்ஸிஜன் என்னும் உயிர்க்காற்று ஆகும். இந்த உயிர்க் காற்றின்றி மனிதன் உள்ளிட்ட உயிரினங்கள் உயிர் வாழ முடியாது. எனவேதான் காற்று 'பிராண வாயு' என்றழைக்கப்படுகிறது. பிராண வாயுவான காற்றின் நன்மைகளைச் சங்கப் பாடல் ஒன்று இவ்வாறு பதிவு செய்கிறது.

'வளி பொரு மின்னொடு வான் இருள் பரப்பி
விளிவு இன்று கிளையொடு மேலமலை முற்றி
தளி பொழி சாரல் ததர் மலர் தா அய்' (பரிபாடல், வையை 12 : 1-3)

'காற்றினால் மோதப்பட்ட மேகம் மின்னலையும் இருளையும் மாறி மாறிப் பரப்பித் தன் இனத்துடன் போய் மலையை அடைந்து அதனைச் சூழ்ந்து, இடைவிடாமல் மழை பெய்தது' என்பது இப்பாடல் அடிகள் தரும் திரண்ட கருத்தாகும். 'மேகம் நகர்வதும் ஒன்றாகி அடர்ந்து மழை பொழிவதும் காற்றால், அக்காற்றை மாசுபடுத்தும் பொழுது தூய மழை நீரும் நோய் பரப்பும் பாதக நீராக மாறுகிறது' என்கிறது குரானின், 25-48-ஆவது வசனம். 'காற்று வீசாவிடில் இவ்வுலகம் நாற்றத்தில் நலியும், அழியும்' என்று அறிவிக்கிறார் வக்கீஉ (ரஹ்) என்னும் அறிஞர்.

நன்மை விளைவித்த அதே காற்று இன்று 'காற்று மாசு' எனும் தீங்கு விளைவிக்கும் ஒன்றாக மாறியிருப்பது காலத்தின் கோலம். இயற்கை நமக்குக் கொடையாக வழங்கிய காற்றை மாசுபடுத்தினால் அதனால் விளையும் மோசமான பாதிப்புகளை நாம் அனுபவிக்க வேண்டி வரும். காற்று மாசைக் கட்டுப்படுத்தவில்லையெனில் நாமெல்லாம் பெரிய அளவிலான பாதிப்பைச் சந்திக்க நேரிடும் என்று உலகச் சுகாதார அமைப்பு எச்சரிக்கின்றது.

காற்று மாசு : சர்வதேச சர்வே

சர்வதேச அளவில் முப்பது கோடிக் குழந்தைகள் காற்றுமாசு நிறைந்த பகுதிகளில் வசிப்பதாக யூனிசெப் நிறுவனம் தெரிவிக்கிறது. உலக அளவில் காற்று மாசினால் ஆண்டுதோறும் சுமார் 65 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர் என்று சர்வதேச எரிசக்திக் கழகம் எச்சரித்துள்ளது. இந்திய அளவில் காற்று மாசுபாடு காரணமாக ஆண்டுக்கு 12 லட்சம் பேர் உயிரிழப்பதாக ‘கிறீன்பீஸ் இந்தியா’ என்ற தன்னார்வத் தொண்டு நிறுவன அறிக்கை தெரிவிக்கின்றது. ‘பி.எம். 10 எனப்படும் காற்று மாசுக்குத் தொழிற்சாலை மாசு 26 சதவீதமும், வாகனங்கள் மூலம் ஏற்படும் மாசு 27 சதவீதமும், விறகு அடுப்பு மூலம் ஏற்படும் மாசு 19 சதவீதமும், சீரற்ற சாலைகள் மூலம் ஏற்படும் மாசு 15 சதவீதமும், தொழிற்சாலைப் பகுதிகளால் ஏற்படும் மாசு 7 சதவீதமும், குப்பை எரிப்பு மூலம் ஏற்படும் மாசு 5 சதவீதமும் தான் காரணம்' என்று அதே ‘கிறீன்பீஸ் இந்தியா’அமைப்பின் நிபுணர்கள் கூறுகின்றனர்.

உலகம் முழுவதும் 10 பேரில் 9 பேர் மாசடைந்த காற்றைச் சுவாசிப்பதாகவும், இதனால் ஆண்டுதோறும் சுமார் 70 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர் என்றும் உலக சுகாதார அமைப்பு நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது. (தினமணி, தில்லிப் பதிப்பு, 3.5.2018) குளிர் மற்றும் பனிக் காலங்களில் காலை மற்றும் மாலை வேளைகளில் நடைப்பயிற்சி உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தி வருகின்றனர். நச்சுக் காற்றைச் சுவாசிப்பது புகை பிடிப்பதற்குச் சமமானது என்று கருதப்படுகிறது. மாசடைந்த காற்றைத் தொடர்ந்து சுவாசித்தால் மனிதனின் சராசரி ஆயுள் காலம் குறைவதாக மருத்துவ வல்லுனர்கள் எச்சரிக்கின்றனர்.

காற்றின் வழியாக மிக எளிதில் நோய்கள் பரவுவதாகவும், எடை குறைந்த குழந்தைகள் பிறக்கக் காற்று மாசு காரணமாக இருப்பதாகவும் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவப் பல்கலைக்கழக ஆய்வு தெரிவிக்கின்றது. ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு நுரையீரல் வளர்ச்சியும் இயக்கமும் குறைந்து நிமோனியாக் காய்ச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

எரிபொருள் பயன்பாடும் காற்று மாசும்

மக்களால் கையாளப்படும் பல்வேறு எரிபொருள்ப் பயன்பாடு மூலம் காற்று மாசு அதிகரிக்கிறது. தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் புகை, நிலக்கரியைப் பயன்படுத்தி மின்னுற்பத்தி செய்யும் நிலையங்கள் வெளியிடும் புகை, மோட்டார் வாகனப் புகை, பெயிண்ட் பயன்பாடு, கேசத்தில் தெளித்துக்கொள்ளும் ரசாயன ஹேர் ஸ்பிரேரகங்கள், வார்னிஷ் உள்ளிட்டவற்றில் இருந்து வெளியாகும் வேதிப்பொருள்கள் காற்றில் பரவி நச்சுத்தன்மையை அதிகரிக்கச் செய்கின்றன. (பா. ராஜா. தினமணி, 24.3.2018) காற்றில் கலந்திருக்கும் இந்த நச்சு என்னும் மாசு உலக அளவில் மிகவும் மோசமான உயிர்க்கொல்லியாக உருவெடுத்துள்ளது.

பகையாகும் புகை

நகரக் குப்பைக் கிடங்கு எரிப்புப் புகை, அலுமினியம், நெகிழி, ரப்பர் கலந்த கழிவுப் பொருட்களைத் திறந்த வெளியில் எரிப்பது முதலான செயற்கையான செயல்களால் காற்று மாசுபடுகிறது. தொழிற்சாலைகள் வெளியிடும் புகையினால் உண்டாகும் நைட்ரஜன் மற்றும் கந்தக ஆக்சைடு, பெட்ரோல் சுத்திகரிப்பு ஆலைகளிலிருந்து வெளிவரும் வீரியமிக்க ஹைட்ரோ கார்பன், வாகனங்களிலிருந்து வெளிவரும் கார்பன் மோனாக்சைடு மற்றும் புகை, ஹைட்ரோ கார்பன், உலோகம் பிரித்தெடுக்கும் ஆலைகளிலிருந்து வெளிவரும் உலோகத் துகள்கள், ரசாயனத் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கரிமச் சேர்மங்கள் ஆகியவை காற்றில் அதிகமாகக் கலக்கும் போது நச்சுத் தன்மையாக மாறி மாசுபட்டை ஏற்படுத்துகின்றன எனக் கருதுகிறார் பாறப்புறத் இராதாகிருஷ்ணன். (தினமணி- 11.4.2017)

நுகர்வுக் கலாச்சாரம், தனி வாகனப் பெருக்கம், சரக்கு வாகனப் புகை, குறைவான பொதுப்போக்குவரத்துப் பயன்பாடு, மின் உற்பத்தி நிலையங்கள், எரிபொருள் உற்பத்தி, கட்டிடங்களை இடிப்பது மற்றும் கட்டுமானப் பணிகளால் ஏற்படும் தூசுகள், சிமெண்ட் தூசி, புதிய கட்டுமானங்கள், கட்டுமானத்தின் போது செயற்கைப் பொருட்களைப் பயன்பட்டுத்துவது, பெயிண்ட், வெடிப்பொருட்கள், பூச்சிக் கொல்லிகள் உள்ளிட்டவற்றாலும் காற்று மாசுபாடு அடைகிறது. புத்தாண்டு, கேளிக்கைக் கொண்டாட்டங்களின் போது பட்டாசு வெடித்தலும் காற்று மாசுவுக்குக் காரணமாகிறது. மெட்ரோ உருவாக்கம், தொழில்மயம் மற்றும் நகரமயம் முதலான பணிகளுக்காக மரங்களை வெட்டுவதால் பசுமை இழப்பு எற்படுகிறது. நகரில் ஆங்காங்கே உள்ள ஏரி, குளங்களை ஆக்கிரமித்து கட்டிடமயமாக்குவதால் சுற்றுச்சூழல் பதிப்பு எற்படுகிறது. இத்தகைய இழப்புகளும், பாதிப்புகளும் காற்று மாசுவுக்கு வழிவகுக்கின்றன.

அதிக கிலோமீட்டர் ஓடும் என்ற காரணத்திற்காக பரிந்துரைக்கப்பட்ட அளவை விடக்கூடுதலான அளவு உயவு எண்ணை (Lubricating Oil) கலந்த கலப்பட எரிபொருளை நிரப்பி இயக்கும் வாகனங்களிலிருந்து வெளிவரும் கரும்புகையின் அடர்த்தி அதிகரிப்பு காற்று மாசுபாட்டுக்குக் காரணமாகிறது எனக் கருதுகிறார் மாதவன்.

தலைநகரில் காற்று மாசு : நிரந்தரமாக நீடிக்கும் பிரச்சினை

வட இந்தியாவில் டெல்லி உட்பட, கயா, ஸ்ரீநகர், ஜோத்பூர், வாரணாசி, பாட்னா, குருகிராம், குவாலியர், கான்பூர், ராய்ப்பூர், அகமதாபாத், ஆக்ரா, லக்னோவ், ஜெய்ப்பூர், அமிர்தசரஸ், ஃபரிதாபாத், முசாஃபர்பூர், பாட்டியாலா ஆகிய நகரங்களும் காற்று மாசு படிந்த நகரங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இந்தியா உட்பட உலகின் பல நாடுகள் காற்று மாசு எனும் சவாலான பிரச்சினையை எதிர்கொண்டு வருகின்றன. அதிக மக்கள்த் தொகை கொண்ட சீனா, இந்தியா ஆகிய நாடுகள் காற்று மாசு உள்ளவை என்று உலக சுகாதார அமைப்பின் அறிக்கை தெரிவிக்கின்றது.

தெற்காசியாவில் நகரமயமாதலால் ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றி உலக வங்கி ஆய்வு மேற்கொண்டதில் பெரும்பாலான பெரு நகரங்கள் காற்று மாசால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. பெருநகரங்களில் டெல்லிதான் காற்று மாசு அதிகம் உள்ள நகரமாகக் கண்டறியப்பட்டுள்ளது. 'டெல்லி' நாட்டின் தலைநகர் என்ற பெருமைக்கு நிகராகப் பல்வேறு பிரச்சினைகளையும் அது தன்னகத்தே கொண்டுள்ளது. டெல்லிக் காற்றில் படிந்துள்ள நுண்துகள்கள் அதிகமாக உள்ளதாக உலக வங்கியின் அறிக்கை தெரிவிக்கின்றது. உலகின் பிற நகரங்களைக் காட்டிலும் டெல்லி நகரின் பல பகுதிகளில் காற்றின் தரக் குறியீடு *(AQI)* அனுமதிக்கப்பட்ட அளவை விட மிகவும் மோசம், கடுமை என்ற நிலையே நீடிப்பதாக உலக சுகாதார மையம் உள்ளிட்ட ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. 'புகைசூழ் நகரம்' என்னும் இன்னொரு முகத்துடன் சர்வதேச அரங்கில் டெல்லி வலம் வருகிறது.

நாட்டின் தலைநகரான டெல்லிவாழ் மக்கள் காற்று மாசின் கோரப் பிடியில் சிக்கி மூச்சுத் திணறி வருகின்றனர். டெல்லிவாசிகள் சுத்தமான காற்றைச் சுவாசிக்கக் காற்று சுத்திகரிப்பான்களைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். அவற்றில் உள்ள பில்டர்கள் கூடக் கருப்பு நிறமாக மாறிவருகின்றன என்று பயனாளிகள் கூறுகின்றனர். கட்டுக்கடங்காத காற்று மாசுவைக் கட்டுப்படுத்தக் கோரிப் பொதுமக்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டம் நடத்தத் தொடங்கியுள்ளனர். டெல்லிக் காற்று மாசு நெருக்கடியிலிருந்து தற்காலிகமாகத் தப்பிக்க *40* சதவீத டெல்லிவாழ் மக்கள் வெளியூர்களுக்குச் சுற்றுலா மேற்கொண்டுள்ளனர். காண்புத்திறன் குறைவதால் தில்லிவாசிகள் கடுமையாக அவதிக்குள்ளாகியுள்ளனர். சுவாசக் கோளாறு, கண்களில் நீர்க்கசிவு, தொண்டை எரிச்சல், தோல் வறட்சி, நுரையீரல் புற்றுநோய், பக்கவாதம், இதயக் கோளாறு, ஆஸ்துமா முதலான சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. காற்று மாசால், தில்லிவாழ் மக்களின் ஆயுள் காலம் குறைகிறது என்று அம்மாநில உயர் நீதிமன்றம் கவலைப்படுகிறது.

நிலமை மோசமடைந்ததைக் கருத்தில் கொண்ட அரசு, பள்ளிகளுக்கு விடுமுறையை அறிவித்தது. கட்டுமானப் பணிகளுக்குத் தடை விதித்தது. ஐம்பது சதவீத ஊழியர்களை வீட்டிலிருந்தே பாணியாற்ற அரசு கேட்டுகொண்டுள்ளது. காற்று மாசு அபாயம் தொடர்ந்தால் மனிதன் வாழத் தகுதியற்ற 'பனி பூமி' யாக டெல்லி மாறக் கூடும் என அமெரிக்க வளிமண்டல ஆய்வு நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அச்சுறுத்தும் காற்று மாசுவால், நீண்டகால நோய்ப் பாதிப்புக்களை டெல்லிவாசிகள் அனுபவிக்க நேரிடும் என்று மருத்துவர்களும், வானிலை மற்றும் சுற்றுச் சூழல் வல்லுனர்களும் கணித்துள்ளனர். வரலாறு காணாத காற்று மாசுப் பிரச்சினையில் டெல்லி சிக்கித் தவித்து வருவது உலக நாடுகளுக்கு அபாய எச்சரிக்கை மணியை ஒலித்துள்ளது. விழித்துக்கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டதாக யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது. (தினகரன், தில்லிப் பதிப்பு, *13.11.2016*). வாகனங்கள், மின் உற்பத்தி நிலையங்கள், தொழிற்சாலைகள் ஆகியன வெளிவிடும் நச்சுப் புகைகளே தில்லிக் காற்று நச்சுத்தன்மை அடையப் பிரதானக் காரணம் என்பது ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. (தினமணி, தில்லிப் பதிப்பு, *20.11.2017*). தில்லிக் காற்று மாசுவைத் தடுப்பது

தொடர்பான உறுதியான செயல்த் திட்டம் தாக்கல் செய்யாத தில்லி அரசுக்குத் தேசியப் பசுமைத் தீர்ப்பாயம் கண்டனம் தெரிவித்தது. (தினமணி, தில்லிப் பதிப்பு, 5.12.2017). இவை எல்லாவற்றையும் கணக்கில் கொண்டு, காற்று மாசுவைக் கட்டுப்படுத்தத் தில்லி அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

டெல்லி : காற்று மாசுக்கான காரணிகள்

டெல்லியில் நான்கு காரணிகளால் காற்று மாசு ஏற்படுவதாக அமெரிக்க ஆய்வறிக்கை ஒன்று இவ்வாறு பதிவு செய்கிறது.

1. பனிக் காலத்தில் காற்று மாசு அதிகமாகக் காணப்படுகிறது. காற்றில் ஈரப்பதம் அதிகம் இருப்பதால், கலைய வழியின்றி காற்றுடன் புகை தங்கிவிடுகிறது.

2. காற்றில் புழுதி கலப்பதால் புகை முட்டம் அதிகரிக்கிறது.

3. விவசாய நிலங்களில் பயிர்க் கழிவுகள் மற்றும் குப்பைகள் தீவைத்து எரிக்கப்படுவதால் ஏற்படும் புகை.

4. தீபாவளிப் பண்டிகையின் போது ஏற்பட்ட புகையால் காற்று மாசு அடைந்தது.

காற்று மாசுவால் கொசு உற்பத்தி குறைந்துள்ளது. இதனால் டெங்கு மற்றும் சிக்கன் குனியா பாதிப்புகளும் குறந்துள்ளதாக மருத்துவ நிபுணர்கள் கூறியிருப்பது ஆறுதலான செய்தி.

அரசின் ஐந்து அம்ச மாசு கட்டுப்பாட்டு உத்திகள்

தலைநகர் டெல்லியில் நீண்டகாலமாக இருந்துவரும் காற்று மாசு நெருக்கடியைச் சமாளிக்கச் சாலைகளிலும், கட்டிடங்கள் மீதும் ஹெலிகாப்டர் மூலம் தண்ணீர் தெளிக்க டெல்லி அரசுக்கு 2016-இல் தேசியப் பசுமைத் தீர்ப்பாயம் யோசனை தெரிவித்திருந்தது. காற்று மாசைக் கட்டுப்படுத்தப் பழைய டீசல் வாகனப் பதிவு ரத்து, பட்டாசுகள் வெடிக்கத் தடை முதலான கட்டுப்பாடுகளை விதிக்கவும் டெல்லி அரசு ஆலோசனை செய்தது. பின்னர் செயற்கை மழை பொழிவித்தால் மாசு மட்டுப்படும் என எண்ணி அதற்கான முயற்சியில் ஈடுபட்டது அரசு. உரிய நிபுணத்துவம் இல்லாமை மற்றும் திட்டமிடல் குறைபாடுகளால் அது தோல்வியடைந்தது. அதனைத் தொடர்ந்து இப்போது ஐந்து அம்ச மாசுக் கட்டுபாடு உத்திகளைக் கையாள டெல்லி அரசு முடிவெடுத்துள்ளது. அவை :

1. தூசி மற்றும் திடக் கழிவுகளை அறிவியல் ரீதியாக நிர்வகித்தல்

2. மாசுபடுத்தும் தொழில்களுக்கு எதிரான நடவடிக்கை

3. வாகன உமிழ்வைக் குறைத்தல்

4. டெல்லியைப் பசுமையாக மாற்றுவதற்கான நீண்டகால முயற்சி

5. டெல்லியை ஆரோக்கியமானதாக மாற்றுவதற்கான நீண்டகால முயற்சி

மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக நகரம் முழுவதும் மின்சாரப் பேருந்துகளை இயக்கும் திட்டத்தைக் கையிலெடுத்துள்ளது தில்லி அரசு.

காற்று மாசைக் குறைக்கும் வழிகள்

காற்று மாசுவைக் குறைப்பதற்கான மாற்று வழிகளாக பின்வருவனவற்றை முன்வைக்கலாம்.

- நல்ல ஆக்ஸிஜனைத் தரவல்ல மரங்களை அதிக அளவில் வளர்ப்பது.
- காற்றில் உள்ள ஈரப்பதத்தை உறிஞ்சி வறட்சியை ஏற்படுத்தும் நச்சுத் தன்மை கொண்ட சீமைக் கருவேல மரங்களை அரவே அழித்துவிடுவது.
- வாகனங்கள் உமிழும் புகையைக் கட்டுப்படுத்துவதற்கான விதிகளை மேலும் கடுமையாக்குவது.
- கரியமில வாயுவை வெளியேற்றும் என்ஜின்கள் தாரித்து வாகனங்களில் பொருத்துவது.
- மாசு ஏற்படுத்தாத மின் வாகனப் பயன்பாட்டுக்கு முன்னுரிமை தந்து ஊக்குவிப்பது.
- நகரக் குப்பைகளைத் தீயிட்டு எரிக்காமல் மாற்று வழிகளைக் கையாண்டு மக்கச் செய்தல்.
- காற்று மாசுவை அரசால் சரி செய்வது சவாலான செயல் என்பதைக் கருத்தில் கொண்டு அதை ஒரு தேசியப் பேரிடராக அறிவித்தல்.
- காற்று மாசுவைக் கட்டுப்படுத்த அரசோடு மக்களும் கைகோர்த்து ஒத்துழைப்பு நல்கல்.
- காற்று மாசு என்பது தனிமனிதப் பிரச்சினை அல்ல, அனைவரது உயிர் சார்ந்த பொதுப் பிரச்சினை என்னும் விழிப்புணர்வு எல்லோருக்கும் ஏற்படல் .
- காற்று மாசு ஒரு உயிர்க் கொல்லி என்பதைத் தாமதித்தேனும் விழித்துக்கொள்வது அவசியம்.

வேளாண் பயிர்க்கழிவு எரிப்பு : புகையா ? புகைச்சலா ?

அண்டை மாநிலங்களான அரியானா, பஞ்சாப் பகுதிகளில் எரிக்கப்படும் பயிர்க் கழிவுகள் காரணமாக டில்லியில் 32 சதவீத காற்று மாசுவுக்குக் காரணம் என்று மத்திய காற்று மாசு ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (தினமணி- தில்லிப் பதிப்பு, 28.10.2018). டெல்லி தலைநகர் வலயப் பகுதிகளில் செயல்படும் செங்கல் சூளைகளும் காற்று மாசுக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது. டெல்லியைவிட அவ்விரண்டு மாநில நகரங்களில் மோசமான காற்று மாசு இருந்திருக்க வேண்டும். ஆனால், அப்படியொரு நிலைமை அங்கில்லை என்று ஆங்கிருந்து வரும் தரவுகள் தெரிவிக்கின்றன.

டெல்லியில் காற்று மாசுவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் பசுமைத் தீர்ப்பாயத்தில் தில்லி அரசுத் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ‘டில்லியில் காற்று மாசு அதிகரிக்க ஹரியானா, பஞ்சாப், ராஜஸ்தான் உள்ளிட்ட அண்டை மாநிலங்களில் எரிக்கப்படும் பயிர்க் கழிவுகள், வேளாண்மை எச்சங்கள்தான் காரணம்’ என்று

தெரிவித்தார். இதற்குத் தீர்ப்பாய அமர்வு, 'டில்லியில் காற்று மாசு அதிகரிக்கப் பயிர்க் கழிவுகள் எரிப்பது மட்டுமே காரணமாக இருக்க முடியாது. தற்போது டில்லியில் காற்று வீசவில்லை. அப்படியிருக்கும் போது அண்டை மாநிலங்களிலிருந்து தில்லிக்கு எப்படிப் புகை வரும். தூசி, பிளாஸ்டிக் கழிவுகள் எரிப்பு, திறந்த வெளியில் கட்டுமானப் பொருட்களைக் கொட்டுவது, வாகன மாசுக்கள் ஆகியனவும் காற்று மாசுவுக்குக் காரணமாக உள்ளன. *(தினமணி, தில்லிப் பதிப்பு, 5.11.2016)* எனத் தெரிவித்துள்ளது.

நில அமைப்பு முறையில் டெல்லியின் மேற்கு எல்லைப் பகுதிதிகளான ராஜஸ்தான், வடமேற்கு எல்லையான அரியானாவிலிருந்து எரிக்கப்படும் பயிர்க்கழிவுப் புகை காற்றின் திசை வேகத்தில் கிழக்கு நோக்கி நகர்ந்து டெல்லிக்குள் ஊடுருவிப் புகை மண்டலத்தை ஏற்படுத்துவது இயல்பு. 25.11. 2025- இல் வெடித்துச் சிதறிய எத்தியோப்பிய ஹேலி குப்பி *(Hayli Gubbi)* எரிமலையிலிருந்து கிளம்பிய சாம்பல் புகை மேகங்கள் இயற்கையான காற்றுத் திசை வேகத்தினால் கிழக்கு ஆப்பிரிக்கா, செங்கடல், வளைகுடா நாடுகள் வழியாகப் பல நாடுகளுக்கும் பரவியதே இதற்குச் சான்று. ஆனால், டெல்லியின் முறையே வடக்கு மற்றும் தெற்கு எல்லைப் பகுதிகளான பஞ்சாப் மற்றும் உத்திரப் பிரதேசப் பகுதிகளிலிருந்து வெளிவரும் பயிர்க்கழிவு எரிப்புப் புகை திசை மாறி டெல்லியை ஆட்கொண்டு மாசுபடுத்துகிறது என்று கூறுவது இயல்புக்கு மாறானது.

'தில்லி மற்றும் என்.சி.ஆர் பகுதிகளில் நிலவும் காற்று மாசு பிரச்சினைக்கு அண்டை மாநில விவசாயிகள் மட்டுமே காரணம் எனக் குற்றம் சாட்டுவது சரியல்ல' என்று பாஜக, காங்கிரஸ், பிஜு ஜனதா தளக் கட்சி உறுப்பினர்கள் மக்களவையில் பேசிப் பதிவு செய்துள்ளனர். *(தினமணி, 20.11.2029).* 'டெல்லி காற்று மாசுபாட்டிற்குப் பயிர்க் கழிவுகள் எரிப்போ, வாகன உமிழ்வோ கிடையாது தீபாவளிப் பட்டாசுகளே காரணம்' என்று முன்னாள் ஒன்றிய அமைச்சர் மேனகா காந்தி குற்றம் சாட்டியுள்ளார். *(தினகரன், தில்லிப் பதிப்பு- 6.1.2026).* இந்நிலையில்,'தலைநகரில் காற்று மாசுபாடு ஒருசில மாதங்களுக்குக்கு மட்டுப்படுத்தப்பட்ட பிரச்சினைஅல்ல. அதைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஆண்டு முழுவதும் முயற்சிகள் தேவை' என்று தில்லி முதல்வர் ரேகா குப்தா தெரிவித்துள்ளார். *(தினமணி, 11.1.2026)*

அரியானா, பஞ்சாப் முதலான அண்டைமாநில விவசாயிகள் ஏற்கனவே எதிர்கொண்டு வரும் பல்வேறு பிரச்சினைகளுக்கிடையே இப்போது அவர்கள் மீதான இந்தக் காற்று மாசுப் பிரச்சினை அவர்களுக்கு மேலும் கவலைக்குள்ளாக்கியுள்ளது. விவசாயிகளால் வெளிவரும் புகையை விட அவர்கள் மீதான புகைச்சலாகவே இது கருதப்படுகிறது.

கிராமங்களில் வேளாண் பயிர்க்கழிவுகளை எரிப்பதால் ஏற்படும் புகை ரசாயனக் கலப்பற்ற அதிக நச்சுத்தன்மையற்றதாகும். நகரக் குப்பைகளை எரிப்பதால் வெளிவரும் நச்சுப் புகை இதற்கு நேர் எதிரானது. அதே சமயம், அறுவடைக்குப் பின்னரான பயிர்க் கழிவுகளை அப்புறப்படுத்தக் கூலி கொடுக்க முடியாததாலும், பசுந்தாள் உரமாகப் பயன்படுத்தவும் அவற்றை விளை நிலத்திலேயே எரிப்பதாக

விவசாயிகள் கூறுகின்றனர். டெல்லியை மாசுபடுத்த வேண்டும் என்பது இம்மாநில விவசாயப் பெருங்குடி மக்களின் நோக்கமல்ல. நகரக் கழிவுகளால் கிராமங்கள் மாசுபடுவதாகக் கிராமவாசிகள் குறைகூறாத நிலையில், நகரங்களில் உருவாகும் நச்சுக் காற்றுக்கு அண்டை மாநிலங்களின் கிராம விவசாயிகள் மீது வீண்பழி சுமத்துவது வேதனையானது. இது ஒருவிதத் திசைதிருப்பும் நோக்கமாகவே தோன்றுகிறது.

பயிர்க்கழிவுகளை அழிப்பதற்கு அவற்றைத் தீயிட்டு எரிப்பதற்குப் பதிலாக ஒரு திரவத்தைப் பயன்படுத்தி அழிக்கலாம் என்று தில்லியிலுள்ள பூசா நிறுவனம் ஒரு புதிய கண்டுபிடிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. அண்டை மாநிலங்களில் பயிர்க்கழிவுகளை எரிப்பதனால் பரவும் புகையின் திசை மூலத்தை ஏஐ (AI) மூலம் கண்காணித்தால், உண்மையிலேயே பயிர்க்கழிவு எரிப்பினால் வெளிவருவது வெறும் புகையா? விவசாயிகள் மீதான புகைச்சலா? என்பது புலப்படும்.

சான்றாதாரங்கள்

1. அபுல் அமீன். மு.அ. 'சுற்றுச் சூழல் மாசு' தினமணி, தில்லிப் பதிப்பு, 8..3.2019.
2. இராதாகிருஷ்ணன் பாறப்புறத். 'காற்றைக் காப்போம்' தினமணி, தில்லிப் பதிப்பு, 11.4..2017.
3. பார்த்தீனியமான தேசிய மொழி - இந்திநேசியா வரலாறு, காக்கைச் சிறகினிலே, ஆகஸ்ட், 2018. பக். 19-22.
4. சந்திரா. யாழ் சு. 2015. இலக்கியமும் சூழலியலும், மதுரை : மீனாட்சி புத்தக நிலையம்.
5. சர்ஃப்ரஸ். அ. 'மனிதப் பேரிடர் மாசு' தினமணி, தில்லிப் பதிப்பு, 16.11..2017.
6. நடராஜ். ஆர். 'மாசில்லாத காற்று... நோயில்லாத வாழ்வு !' தினமணி, தில்லிப் பதிப்பு, 21.3.2025.
7. நாராயணன். ஆர். எஸ். 'ஆகாய ஆக்கிரமிப்புகள்' தினமணி, தில்லிப் பதிப்பு, 3.2..2016.
8. ----------------------------.'உயிரை வளர்க்கும் உயிர்க் காற்று' தினமணி, தில்லிப் பதிப்பு, 9. 9.2017.
9. முத்து. நெல்லை. சு. 'மெய்ப்பொருள் காண்பது அறிவியல்' தினமணி, தில்லிப் பதிப்பு, 20.1.2016.
10. மாதவன். 2026. 'காற்று மாசுபாட்டில் திணறும் தலைநகரம்' காக்கைச் சிறகினிலே, ஜனவரி, 2026. பக். 304-306.
11. முருகராஜ். இ . 'ஆயுளைக் குறைக்கும் காற்று மாசு', தினமணி, தில்லிப் பதிப்பு, 14.3.2019.
12. ராஜா. பா. 'பகையாகும் புகை' தினமணி, தில்லிப் பதிப்பு, 24.3.2018.
13. KumKum Desgupta, How to save our Fragile Ecosystem ? Pay for it !, Hindustan Times, 19.3.2017.
14. Woodford Chris, 2015. Air Pollution.

எளிய முறையில் யாப்பறிவோம்:

நெருப்பலையார்.இராம இளங்கோவன்,
பொருளாளர், பெங்களூர் தமிழ்ச் சங்கம், பெங்களூரு.

பாடம்:38.

அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா:

ஒத்தாழிசைக் கலிப்பாக்களில் நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவை அடுத்து வருவது இந்த அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா வாகும். இப் பாவினத்தின் உறுப்புகளாக வருவது நான்கு சீர்கள் ஓரடியாகக் கொண்ட ஆறடிக் கொண்ட ஒரு தரவு, நான்கடிக் கொண்ட மூன்று தாழிசைகள், அம்போதரங்கத்தில் அடங்கும் நான்கு சீரடிக் கொண்டு நான்கடிகளாக அமைந்த பேரெண், நான்கு சீர்களை ஓரடியாகக் கொண்ட நான்கடிளான அளவெண், முச்சீரடிகள் கொண்ட இடையெண், இரண்டு சீர்கள் ஓரடியாகக் கொண்ட சிற்றெண், தனிச்சொல்லுக்கடுத்து, பாடலின் இறுதியாக நான்கு சீர்கள் கொண்ட ஆறடியாக வந்த ஆசிரியச் சுரிதகம் அல்லது வெண்பாச் சுரிதகம் வந்து பாடல் முடிவுறும்.

ஆக, தரவு, தாழிசை, அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் ஆகிய ஐந்து உறுப்புகளைக் கொண்டதாகும். சுரிதகம் முடியும் போது ஈற்றுச் சீரின் ஈற்றசை ஏகாரத்தில் முடிதல் வேண்டும். தரவு, தாழிசை, அம்போதரங்கத்தில் அடங்கும் பேரெண், அளவெண், நான்கு நான்கு சீர்கள் கொண்ட அளவடிகளாக வரும். பேரெண், அளவெண், சிற்றெண், சுரிதகம் ஆகிய அடிகளின் சீர்கள் இயற்சீர்களில் அமையும். இடையெண் அடிகளில் காய்ச் சீரும் இயற்சீரும் அமையும்.

தரவு முதற்கொண்டு இடையெண் வரை அடி தோறும் முதல் சீருக்கும் மூன்றாம் சீருக்கும் பொழிப்பு மோனை அமையும். எல்லா உறுப்புகளும் இரண்டடிக்கோர் எதுகையைப் பெற்று வரும். தளைப் பார்க்கத் தேவையில்லை. இனி அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவுக்கு ஓர் எடுத்துக் காட்டுப் பாடலைக் கீழே காண்போம்:

உயர்படைப்பான அனைத்தும் இவளே!
அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவுக்கான எடுத்துக் காட்டுப் பாடல் இதோ:
தரவு (ஆறடி):

பெற்றோரை நினைவினிலே பெரிதுவக்கச் சுமந்திருப்பாள்;
பற்றுடனே உடன்பிறப்பைப் பாங்குடனே போற்றிடுவாள்;
முற்றுந்தான் துணைவனையும் முழுமனத்தில் நிறைத்திடுவாள்;
பெற்றெடுக்க மழலையினைப் பேறெனவே கருச்சுமப்பாள்;
சற்றுந்தான் தளராமல் தான்சுமப்பாள் இல்லறத்தை!
கற்றிடாத பட்டறிவால் கனிந்தின்பம் இவையென்பாள்!

தாழிசைகள் (நான்கடிப் பெற்ற மூன்று பாடல்கள்):

1)
துணைவனவன் பெற்றோரைத் தூணெனவே தாங்கிடுவாள்;
துணைவனவன் உடன்பிறப்பைத் துணிந்தென்றன் பிள்ளையென்பாள்;
அணைக்கட்டாய் நாத்தனாரை அடைகாத்துக் காத்திடுவாள்;
இணையென்றே துயர்துன்பம் ஏற்றிடுவாள் நல்லறத்தால்!
2)
வருவாய்க்கே ஏற்றபடி வாழ்ந்திடுவாள் வரையறுத்து;
விருந்தளித்தே உறவுகளை விழைந்தேற்பாள் பாலமாவாள்;
அருகாமல் மரபுவழி அதுபெருகப் பிள்ளையீவாள்;
பருகிடவே மழலைக்குப் பாலமுதம் ஊட்டிடுவாள்!
3)
பெண்கல்விக் கற்றாலோ பெரிதுவக்க நாடுயரும்;
பண்பாட்டின் அடையாளம் பாதுகாக்கும் உச்சமாகும்;
எண்ணற்றப் பயன்கூட்டும் ஏற்றமிகுப் பனிமலையே!
கண்ணெனவே விளங்குகிற கண்மணிதான் பெண்ணினமே!

அம்போதரங்கம்:

பேரெண்:
பெண்ணெனப் பிறந்தவள் பேரிறை யானவள்;
மண்ணிலே தாயென மனைவி மகளென
எண்ணிலா வடிவென இயல்புடன் திகழ்பவள்;
விண்ணையும் ஆய்பவள் விண்ணிலும் செல்பவள்!

அளவெண்:
கண்டுமே மகிழவும், காதிலே கேட்கவும்,
எண்ணிலா வகையில் இனிதாய்த் தொடவும்,
வண்ண மலரென வகையாய் நுகரவும்,

உண்டு மகிழவும் உயர்ந்த புதையலே!

இடையெண்:
விரும்பியே ஏற்கும்செல் வம்நீ;
அருகிடா தேற்கும்எ ழில்நீ;
பருகிடும் திகட்டாத முதம்நீ;
உருகிட வைத்திடும் குளிர்நீ!

சிற்றெண் (கடை எண்):
இயற்கை நீயே; இறையும் நீயே;
இப்புவி நீயே; எல்லாம் நீயே;
உயர்ந்தவள் நீயே; உலகும் நீயே!

தனிச்சொல்: என்பதனால்,

ஆசிரியச் சுரிதகம் (ஆறடிப் பாடல்):
போற்றிக் காக்கும் பொன்மணி வயிரம்
ஏற்றுத் தொழுதிடும் ஈடிலா இறையே!
வானம் காற்று வையம் நீரும்
ஆன வரையில் ஆற்றல் நெருப்பு;
ஆக்கல் காத்தல் அழித்தல்
ஊக்கங் கொண்ட உயர்படைப் பிவளே!

-நெருப்பலையார்.

இப் பாடத்தில் அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாப் பற்றி இலக்கண வாய்பாட்டுக் குறிப்புகளுடன் பாடலை எவ்வாறு அமைக்க வேண்டும் என்ற எடுத்துக் காட்டுப் பாடலுடன் அறிந்தோம். இனி அடுத்த பாடத்தில் வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாப் பற்றி இலக்கண வாய்பாட்டுக் குறிப்புகளுடன் பாடலையும் அறிவோம்.

யாப்பிலக்கணம் வளரும்.

நூலாய்வு

மரபின் வேர்கள் -2

டாக்டர் புதேரி தானப்பன்
டில்லி

31) கொப்புளம் - கொப்பளம் என்னும் சொற்கள்:

கொப்புளம், கொப்பளம் இந்த இரண்டில் எது சரி? கொப்புளம் என்பதுதான் சரி என்பது பாவலரின் வாதம்.

"கள்ளமின்றி உழைப்பவரின் கை இரண்டில்
காட்சிதரும் கொப்புளங்கள் உழைப்பின் சாட்சி "

என்று கூறும் பாவலர்,

"---------கொப்பளமாய்ச் சிலரோ சொல்லிக்
குதிக்கின்றார் கொப்புளத்தை! தவறு தானே!"

என்று கேட்கிறார். நாமும் கொப்புளத்தைக் கொப்பளமாய் எழுதாமல் கொப்புளம் என்றே எழுதுவோம்!

32) ஏகப்பட்ட - எண்ணற்ற என்னும் சொற்கள்:

ஏகப்பட்ட என்னும் சொல்லும் எண்ணற்ற என்ற சொல்லும் வழக்கத்தில் உள்ளன. ஏகப்பட்ட என்னும் சொல் வடமொழிச் சொல் என்பதால் அதனை விடுத்து, எண்ணற்ற என்னும் சொல்லையே பயன்படுத்த வேண்டும் என்று பாவலர் சொல்லுகிறார்.

ஆம். ஏகப்பட்ட என்னும் சொல் வடமொழிச் சொல்தான். ஏகம் என்றால் ஒன்று என்று பொருள். பட்ட என்றால் அழிந்த என்று பொருள். அதாவது, ஒன்று அழிந்த என்று பொருள். ஒன்று அழிந்தால் அங்கே சுழியம்தான் (பூஜ்யம் தான்) மிஞ்சும். அதற்கு எண்ணிக்கை அற்ற , ஏராளமான என்று பொருள். எண்ணற்ற என்றால் எண்கள் இல்லாத, கணக்கற்ற என்று பொருள். ஆக, இரண்டுமே ஒன்றுதான்.

பாவலர்
கருமலைத்தமிழாழன்

ஆனால் முன்னது வடமொழி; பின்னது தூய தமிழ். இதுதான் வேறுபாடு. தூய தமிழ்ச் சொல் இருக்கும்போது நாம் ஏன் வடமொழியின் பின்னால் ஓட வேண்டும்? ஆகவே, ஏகப்பட்ட என்னும் சொல்லுக்கு மாற்றாக எண்ணற்ற,

எண்ணிறந்த, ஏராளமான, பற்பல, கணக்கற்ற போன்ற சொற்களைப் பயன்படுத்தலாம்.

33) ஏற்கனவே - ஏற்கெனவே என்னும் சொற்கள்:

சிலர் தவறாக எழுதும் சொற்களில் ‘ஏற்கனவே’ என்னும் சொல்லும் ஒன்றாகும். ஏல் என்னும் சொல்லோடு கனவே என்னும் சொல்லைச் சேர்த்தால் ஏற்கனவே என்னும் சொல் வருகிறது. இது தவறு.

ஆனால் ஏல் என்னும் சொல்லோடு எனவே என்னும் சொல்லைச் சேர்த்தால் ஏலெனவே > ஏற்கெனவே என்னும் சொல் வருகிறது. இதுதான் சரி.

ஏல் என்றால் ஏற்றுக்கொள், ஒத்துக்கொள், ஒப்புக்கொள், இணங்கு என்று பொருள். ஆகவே, ஏற்கனவே என்று எழுதாமல் ஏற்கெனவே என்று எழுதிப் பழக வேண்டும் என்று பாவலர் சொல்லுகிறார்.

34) காய்கறி - கறிக்காய் என்னும் சொற்கள்:

கறி என்றால் மரக்கறி என்றும் இறைச்சி என்றும் பொருள். காய்கறி என்றால் காய்கள், கிழங்குகள் போன்ற உணவுப் பொருள்கள் ஆகும். கறிக்காய் என்னும் சொல் வழக்கத்தில் இல்லை. ஆனால் பார்ப்பனர்கள் ககர ஒற்று நீக்கி கறிகாய் என்று சொல்லுவார்கள். அவர்கள் கறிகாய் என்னும் சொல்லைப் பேச்சு வழக்கில் கறிகா என்று சொல்வார்கள். கறிக்காய் என்னும் சொல் லிப்கோ அகராதியிலும் இல்லை.

ஆனால் காய்கறி என்று சொல்லக்கூடாது; கறிக்காய் என்றே சொல்லவேண்டும் என்று பாவலர் சொல்லுகிறார். இதனை,

"சரியளவாய்க் கறிக்காயை வாங்க வேண்டும்
அமையாத காய்கறிக்குப் பொருளோ இல்லை
அறுசுவைக்குக் கறிகாய்கள் துணையாய் நிற்கும்!
சுமையான காய்கறியை விட்டு விட்டுச்
சுவையான கறிக்காயை வாங்கச் செல்வீர்!"

என்னும் அவரது கவிதை வரிகள் மூலம் அறியலாம்.

35) காச்சு - காய்ச்சு என்னும் சொற்கள்:

காச்சு, காய்ச்சு என்னும் சொற்களில் காச்சு என்னும் சொல் பொருளற்றது. இந்தச் சொல்லை பெரும்பாலான மக்கள் சொல்வதில்லை. விழுப்புரம் மாவட்டத்தில் கல்வி அறிவு அற்ற, ஏழ்மை நிலையில் உள்ள ஒரு சிலரே பேச்சு வழக்கில் இச் சொல்லைப் பயன்படுத்துகின்றனர்.

"அவன் காச்சு மூச்சென்று கத்தினான்" என்னும் போது அது பயனற்ற சொல் என்பது எளிதில் விளங்குகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள சில பாமர மக்கள் 'காசு' என்னும் சொல்லைக் காச்சு என்று அழுத்திச் சொல்லுகின்றனர்.

காய்ச்சு என்னும் சொல்தான் பொருளுடைய சொல். தண்ணீரைக் காய்ச்சு, தண்ணீரைக் காய்ச்சிக் குடி என்னும்போது அது பொருளுடையதாக இருக்கிறது.

"மண்நீரைக் காய்ச்சென்றே சொல்ல வேண்டும்
மறந்தினிமேல் காச்சென்று சொல்ல வேண்டா"

என்று பாவலர் கேட்டுக் கொள்ளுகிறார். எனவே நாமும் காச்சு என்னும் தவறான சொல்லைக் கைவிட்டுக் காய்ச்சு என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

36) மேன்மேலும் - மென்மேலும் என்னும் சொற்கள்:

படித்தவர்களுக்கும் குழப்பத்தை ஏற்படுத்தும் சொற்களில் ஒன்றாக மேன்மேலும், மென்மேலும் எனனும் சொற்கள் விளங்குகின்றன. அவன் மேன்மேலும் முன்னேறுகிறான்; அவன் மென்மேலும் முன்னேறுகிறான்.

இவற்றில் எது சரி? எது தவறு? என்று சிலர் தாமும் குழம்பி, அடுத்தவர்களையும் குழப்புகிறார்கள்.

மேலும் மேலும் என்னும் அடுக்குத் தொடரின் திரிபுதான் மேன்மேலும் என்னும் சொல். இந்த மென்மேலும் என்னும் சொல் தமிழ் மொழிக்குக் களங்கம் விளைவிப்பதாகும் என்று பாவலர் பாடுகிறார். கற்றோர் சிந்திப்பாராக.

37) அறுவடை - அறுவிடை என்னும் சொற்கள்:

அறு என்றால் அறுத்தல்,

விடை என்றால் பிரித்தல், வேறுபடுத்துதல், அடித்தல் என்று இன்னும் பல பொருள்படும்.

அறு + வடை = அறுவடை . இது பொருளற்ற சொல்.

அறு + விடை = அறுவிடை . அறுவிடை என்றால் நெற்கதிர்களைப் பிரித்தல் என்று பெயர். அதாவது இன்றைய நாளில் நாம் அறுவடை என்று சொல்கிறோமே அதனுடைய உண்மையான சொல் அறுவிடைதான். ஆம். நெல் அறுவிடைதான்; நெல் அறுவடை அல்ல.

“விளைந்துள்ள நெல்லறுத்துப் பிரிப்ப தற்கு
விடைசேர்த்தே அறுவிடைஎன் றழகாய்ச் சொல்லி
விளைச்சலினைப் போற்றுகின்ற பொங்கல் நாளை
விளைவிக்கும் அறுவிடைநாள் என்ற ழைப்போம் ”

என்பது பாவலர்ப் பாட்டு. எனவே அறுவடைநாள் என்பதை இனி அறுவிடைநாள் என்று அழைப்போம்.

38) உடன்படுகை - உடன்படிக்கை என்னும் சொற்கள்:

உடன்படுகை, உடன்படிக்கை என்னும் சொற்களில் உடன்படுகை என்னும் சொல்லை நாம் கேள்விப்பட்டிருக்கவே மாட்டோம். இரு நாட்டுத் தலைவர்களும் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தை உடன்படிக்கை செய்து கொண்டார்கள் என்றுதான் படித்திருக்கிறோம். ஆனால் அந்தச் சொல் தவறான சொல் என்று சொல்லி,

“கற்றவரே உடன்படிக்கை என்று ரைத்தால்
கல்லாதார் என்ன செய்வர்?”

என்று கேட்கிறார் பாவலர். ஒரு குறிப்பிட்ட ஒப்பந்தத்திற்கு இருவரும் உடன்படுவதால் அது உடன்படுகை ஆகும் என்கிறார். இச் சொல்லை ஏற்றுக்கொள்ள மனம் ஒப்பவில்லை. நமது பழக்க குணம் அதனை ஏற்றுக் கொள்வதைத் தடுக்கிறது. எனினும் சில நாள்களில் ஏற்றுக்கொள்ளும்; ஏற்றுக்கொள்ள வேண்டும்.

உடன்படிக்கை என்னும் சொல்லை ஒதுக்கி வைப்போம்; உடன்படுகை என்னும் சொல்லை பழகிக் கொள்வோம்.

39) குற்றம் சாட்டுதல் - சார்த்துதல் என்னும் சொற்கள்:

குற்றம் சுமர்த்துதல் என்பதைத்தான் சிலர் குற்றம் சாட்டுதல் என்றும் சிலர் குற்றம் சார்த்துதல் என்றும் எழுதுகின்றனர். ஆனால் இவற்றில் எது சரி என்றால் சார்த்துதல் தான் சரி என்று பாவலர் கூறுகிறார்.

அம்மனுக்கு மலர் மாலை சார்த்த வேண்டும் என்றும்; அம்மனுக்குக் கண்மலர் சார்த்த வேண்டும் என்றும் சிற்றூர் வாழ் கல்வி இல்லா மக்கள் பேசுகின்றனர். குற்றம் சாட்டப்பட்டவர்; குற்றம் சாற்றப்பட்டவர் என்று கற்றோர் கூறுகின்றனர். ஆக, சார்த்துதல் என்னும் சொல்லை கல்வி இல்லாத பாமர மக்கள் சரியாகவும் கல்வி கற்ற நகரத்து மக்கள் தவறாகவும் பேசுகின்றனர்.

"தாய்த்தமிழில் சார்த்துதலே பொருத்த மாகும்
தவிர்த்திடுவீர் சாட்டுதலை உணர்வீர் உண்மை!"

என்று பாவலர் சொல்வதை மனத்திற் கொண்டு சார்த்துதல் எனும் சொல்லைப் பயன்படுத்தி தமிழின் மேன்மையைக் காத்திடுவோம்.

40) தேர்ந்தெடுத்தல் - தெரிந்தெடுத்தல் :

தேர்ந்தெடுத்தல், தெரிந்தெடுத்தல் ஆகிய இந்த இரண்டு சொற்களுக்கும் இடையே மிகுந்த வேறுபாடு உண்டு. தேர்ந்தெடுத்தல் என்றால் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கைக்குள் இருக்கும் சிறந்த ஒன்றை ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காகத் தேர்ந்து எடுத்து அறிவித்தல் ஆகும்.

தெரிந்தெடுத்தல் என்றால் நமக்கு எது தேவை என்பதை அறிந்து அது, சிறப்பானதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் நமக்கு ஏற்றதைத் தேடி எடுத்தல் ஆகும். இந்த இரண்டு சொற்களுக்கும் உள்ள வேற்றுமையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

தேர்தலில் போட்டியிடும் சில வேட்பாளர்களில் யார் ஒருவர் மக்களுக்கு அக்கறையோடு நன்மை செய்யக்கூடியவர் என்று சிந்தித்து, அவருக்கு வாக்களித்து, அவரை வெற்றிபெறச் செய்தல் என்பது தேர்ந்தெடுத்தல் ஆகும்.

ஓர் அங்காடிக்குச் சென்று, அங்குள்ள பொருள்களையும் அவற்றின் விலைகளையும் பார்த்து நமது வசதிக்கும் வாய்ப்புக்கும் தேவைக்கும் ஏற்ப, அவற்றில் ஒன்றை வாங்கிச் செல்ல முடிவு எடுக்கிறோமே அது தெரிந்தெடுத்தல் என்பதாகும். இதுதான் தேர்ந்தெடுப்பதற்கும் தெரிந்தெடுப்பதற்கும் உள்ள வேறுபாடு. இந்த வேறுபாட்டை நன்கு புரிந்து கொண்டு சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்பது பாவலரின் வேணவா. அவரது அந்த அவாவைப் புரிந்து கொண்டால் தமிழும் சிறக்கும்; தமிழால் நாமும் சிறப்போம்.

41) தோப்புக் கரணம் - தோற்புக் கரணம் என்னும் சொற்கள்:

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் தொடக்கப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்குத் தோப்புக் கரணம் என்னும் தண்டனை சர்வ சாதாரணமாக இருந்தது. தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களிடம் எப்படிப் பேசுகிறார்களோ அப்படித்தான் அந்த ஆசிரியர்களிடம் பயிலும் மாணவர்கள் தமது வாழ்நாள் முழுவதும் பேசுவார்கள். சில மாணவர்கள் இதற்கு விதி விலக்காக இருக்கலாம். அந்தத் தோப்புக் கரணம் என்னும் சொல் சரியா அல்லது தோற்புக் கரணம் என்னும் சொல் சரியா என்று பார்ப்போம். இதைப் பற்றிப் பாவலர் கருமலைத் தமிழாழன்,

"மரம்வெட்டும் தவற்றைப்போல் தோப்புக் கரணம்
மாத்தமிழில் தவறாகப் போடு கின்றோம்
சிரம்தாழ்த்தித் தண்டனையாய்ச் செய்யும் கரணம்
செப்பிடுவோம் அதைத்தோற்புக் கரண மென்றே "

எனப் பாடுகிறார்.

தோப்புக் கரணம் என்பதைச் சில பகுதிகளில் தோப்பிக் கரணம் என்று சொல்வார்கள். தோப்பு என்றால் ஒரு குறிப்பிட்ட மரங்கள் அடர்த்தியாக இருந்து, நிழல், காய், கனி போன்றவற்றைத் தரும் இடத்துக்குப் பெயராகும். மாந் தோப்பு, தென்னந் தோப்பு, இலுப்பைத் தோப்பு என்பது போல.

கர்ணம் என்னும் சொல் வடமொழிச் சொல்லாகும். கர்ணம் என்றால் காது என்பதும் பொருள். வலது கையால் இடது காதையும் இடது கையால் வலது காதையும் பிடித்துக் கொண்டு பலமுறை உட்கார்ந்து உட்கார்ந்து எழுவதுதான் இந்த தோற்புக் கரணம் ஆகும்.

கோ கர்ண வித்தை என்ற தொடர்மொழி ஒன்று உள்ளது. கோ என்றால் பசு என்று பொருள்; கர்ணம் என்றால் காது என்று பொருள். வித்தை என்றால் தந்திரம் என்று பொருள். காதுகளை மட்டும் தனியாக ஆட்டும் தந்திரம் என்று இந்தத் தொடருக்குப் பொருளாகும். பசு தனது காதுகளைத் தனியாக ஆட்டுவது போல மனிதர்களால் காதுகளைத் தனியாக ஆட்டுவது என்பது இயலாத செயலாகும். அதனால் பசுவுக்குச் சிறப்புச் சேர்க்கும் முகத்தான் "கோ கர்ண வித்தை" என்று சொல்லப்படுகிறது.

ஆகவே தோப்புக் கரணம் என்று சொல்வதைத் தவிர்ப்போம்; தோற்புக் கரணம் என்று சொல்வதை ஏற்போம்.

42) நாலா பக்கம் - நாலு பக்கம் என்னும் சொற்கள்:

இன்றைக்கும் சிற்றூர் வாழ் மக்கள் ஆடு, மாடு, கோழி காணாமல் போனால், போய் நாலா பக்கமும் தேடிப்பார்; இங்கேதான் எங்கேயாவது கிடக்கும் என்று சொல்வது வழக்கம். நாலு பக்கமும் போய் தேடிப்பார் என்று அரிதாகவே

சொல்வார்கள். வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என பக்கங்கள் நான்காகும் . நாலு பக்கம் என்பதை நாலா பக்கம் என்று சொல்வது பொருளற்றது அல்லவா? எனவேதான்,

"முறையாக நாலுபக்கம் என்றே தான்நாம்
முன்னுரைத்தும் எழுதிடவும் வேண்டும்"

என்று பாவலர் சரியாகப் பாடுகிறார். ஆகவே நாமும் நாலா பக்கமும் என்பதை விடுத்து, நாலு பக்கமும் என்று சொல்லுவோம்; சொல்லப் பழகுவோம்.

43) புழக்கடை - புறக்கடை என்னும் சொற்கள்:

இந்நூலில் எடுத்துக் கொண்ட சொற்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வில்லை. மாறாக, அவற்றில் எது சரி எது தவறு என்பதை எடுத்துச் சொல்லி மக்களுக்குப் புரிய வைக்கும் முயற்சியில் பாவலர் ஈடுபட்டுள்ளார்.

நாம் காலாகாலமாகப் பயன்படுத்தி வரும் தவறான சொற்களில் ஒன்று புழக்கடை என்பது. புழக்கடை என்னும் சொல் தவறானது; அது புழக்கடை அல்ல; புறக்கடை ஆகும் என்று பாவலர் எடுத்துக் கூறுகிறார். புழக்கடை என்னும் சொல் ஏன் தவறானது? அது எவ்வளவு காலமாக வழங்கப்பட்டு வருகிறது? புறக்கடை என்னும் சொல் எப்படிச் சரியான சொல்லாகும்? பேச்சு வழக்கில் இந்தச் சொல் எப்படித் திரிந்தது? இதைப்பற்றி பாவலர் ஆராய விரும்பாமல் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்றே கருதத் தோன்றுகிறது.

"பின்புறத்தில் புழக்கடையாம் என்று சொன்னால்
பொருளில்லை புறக்கடையாம் என்று சொல்லி
முன்புறத்தில் புறக்கடையில் இடத்தை விட்டே
முன்னோர்போல் நல்வாழ்வைப் பெறுவோம் நாமும்!"

என்று பாவலர் பாடுவதைப் பார்க்கிறோம். வீட்டுக்குப் பின்புறத்தில் இருப்பது புறக்கடையாகும்; இதனைச் சிற்றூர் மக்கள் 'பேக்கடை' என்று பேச்சு வழக்கில் சொல்கிறார்கள். அந்தப் புறக்கடையிலும் வீட்டுக்கு முன்புறமும் இடத்தை விட்டு மரங்களை நட்டு காற்றோட்டமாக வீட்டைக் கட்டி நலமாக வாழ்ந்திடுவோம் என்பது அவரது அறிவுரையாகும்.

அதனால் அது புழக்கடை அல்ல; புறக்கடையாகும்.

44) சுடுநீர் - சுடுதண்ணீர் என்னும் சொற்கள்:

சுடுநீர், சுடுதண்ணீர் என்னும் இந்த இரண்டு சொற்களுமே வினைத்தொகைச் சொற்கள். சுட்ட நீர், சுடுகின்ற நீர், சுடும் நீர். அதுபோலவே சுட்ட தண்ணீர், சுடுகின்ற தண்ணீர், சுடும் தண்ணீர்.

ஆனால் இந்தச் சுடுதண்ணீர் என்னும் சொல் பொருளற்ற சொல்லாகும். நீர் என்பது சாதாரண நீரைக் குறிக்கும். தண்ணீர் என்றால் குளிர்ந்த நீரைக் குறிக்கும். சுடுதண்ணீர் என்றால் சூடான குளிர்ந்த நீர் என்று பொருளற்ற பொருள்.

சிலர் *But* ஆனால், *Gate* வாசற்படி, நடு *Center* என்று பேசுவார்களே, அப்படித்தான் இந்தச் சுடுதண்ணீர் என்கிற சொல்லும் ஆகும். இத்தகைய சொற்கள் யாவும் மொழியைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாத மனப்போக்கு ஆகும். நாட்டையும் நாட்டு மக்களையும் மக்களின் மொழியையும் எட்டூ அளவும் கவலைப் படாதவர்களே இத்தகைய மனிதர்களாவர்.

> "தணலாகக் கொதிக்கின்ற நீரை நாமோ
> சுடுதண்ணீர் என்றுரைத்தல் சரியா சொல்வீர்"

என்று பாவலர் கேட்கிறார். ஆகவே சுடுதண்ணீர் என்று சொல்லாமல் சுடுநீர் அல்லது வெந்நீர் என்று நாம் சொல்ல வேண்டும்.

45) சில்லரை - சில்லறை என்னும் சொற்கள்:

இக்காலத்தில் பல பேருக்குத் தமிழ் மொழியில் வல்லின, மெல்லின, இடையின எழுத்துகள் சரியாகத் தெரிவதில்லை. அவர்கள் அதைப்பற்றிக் கவலைப்படுவதும் இல்லை.

> "எந்த எழுத்தைப் போட்டால் என்ன?"
> "எதற்கு இவ்வளவு எழுத்துகள்?"
> "எதற்கு மூன்று னக்கள், இரண்டு ரக்கள், இரண்டு லக்கள்?
> மொழி என்பது பேசுவதற்கு ஏற்பட ஒரு கருவிதானே?
> எந்த மொழியில் பேசினால் என்ன?
> எதற்கு இந்த மொழியின் மீது இவ்வளவு வெறி?

என்றெல்லாம் சிலர் கேட்கிறார்கள். அவர்களுக்கு எதைச் சொல்லி எப்படிப் புரிய வைப்பது?

> "வல்லெழுத்துச் சொல்தன்னை இடையெ ழுத்தில்
> வகையின்றி எழுதிபொருள் மாற்று கின்றோம்"

என்று பாவலர் கவலைப்படுகிறார். வல்லெழுத்தில் எழுதப்பட வேண்டிய சில்லறை என்னும் சொல்லை, சில்லரை என்னும் இடையெழுத்தில் எழுதிப் பொருளை மாற்றுகின்றோம் என்பது அவரது கவலையாகும். சில் என்றால் சில, சிறு துண்டு, அற்பமான என்றெல்லாம் பொருள். அரை என்றால் இடுப்பு, பாதி என்னும் பொருளாகும்.

ஆகவே சில்லறை என்னும் சொல்லுக்கு வல்லின றகரம் இட்டு எழுதவேண்டும். இடையின ரகரம் இட்டு எழுதக்கூடாது.

46) தக்கவைத்து - தங்கவைத்து என்னும் சொற்கள்:

வழக்கமான நமது பார்வையில், தக்கவைத்துக் கொள்ளுதல் என்றால் ஏற்கெனவே நம்மிடம் இருக்கும் ஒன்றை நம்மிடமே வைத்துக் கொள்ளுதல் என்று பொருள். ஒரு போட்டியில் தான், கடந்த முறை பெற்ற வெற்றியை இம் முறையும் பங்கு பெற்று மீண்டும் வெற்றி பெறுதல் ஆகும்.

ஆனால் பாவலர் இங்கே நம்மிலிருந்து வேறுபடுகிறார். ஆம். "தக்கவைத்துக் கொள்ளுதல்" என்னும் சொல் தவறானது என்று சொல்லுகிறார். 'தக்க' என்னும் சொல்லுக்குத் தகுதி, தகுந்த, பொருத்தம் என்பவை பொருளாகும் என்கிறார்.

தக்க கூலி தருதல், தக்க செயல் செய்தல் போன்ற தொடர்கள் சரியானவை யாகும் என்று கூறும் அவர், வெற்றியை இவர் தக்கவைத்துக் கொண்டார் என்று கூறாமல், வெற்றியை இவர் தங்கவைத்துக் கொண்டார் என்று கூறுவதே சரியாகும் என்கிறார்.

ஆகவே, “வெற்றியை தங்கவைத்துக் கொண்டார்" என்றே நாமும் கூறிப் பழகுவோம்.

47) தலை - தலா என்னும் சொற்கள்:

தலை, தலா என்னும் இந்த இரண்டு சொற்களும் சிற்றூர்களில் அடிக்கடி பயன்படுத்தப்படும் சொற்களாகும். ஏதேனும் கோயில் திருவிழாக்கள் நடைபெற வேண்டுமானால் கூட்டம் நடத்தி, அந்தக் கூட்டத்தில், “தலைக்கு முன்னூறு உரூபாய் செலுத்த வேண்டும்" என்று சொல்வார்கள். அல்லது, “தலா முன்னூறு உரூபாய் செலுத்த வேண்டும்" என்று சொல்வார்கள். தலைக்கு என்னும் சொல் கூட்டத்தில் இருப்பவர்களையும் இல்லாதவர்களையும் குறிக்கும். ஆனால் தலா என்னும் சொல் கூட்டத்தில் கலந்து கொள்பவர்களை மட்டுமே குறிக்கும். இது ஊருக்கு ஊர் வேறுபடலாம்.

தலைக்கு என்று சொன்னால் ஒரு குடும்பத்தில் ஆறு பேர் இருந்தால் *6 X 300 = 1800 / -* உரூபாய் செலுத்த வேண்டும் என்று பொருள்.

தலா என்று சொன்னால் குடும்பத்தில் எத்தனை பேர் இருந்தாலும் ஒரு குடும்பத்துக்கு *300/-* உரூபாய் செலுத்த வேண்டும் என்று பொருள்.

ஆயின் தலா என்னும் சொல் தவறானது என்று பாவலர் சொல்லுகிறார். இதனை,

“தலைக்கொன்று எனும்சொல்லோ தலாவென் றாகித்
தமிழினிலே பிழையாக நுழைந்த தின்று"

என்னும் வரிகள் நமக்குச் சொல்கின்றன. தலா என்னும் சொல்லைப் பயன்படுத்தாமல் ஒவ்வொருவரும் அல்லது ஒவ்வொன்றும் என்னும் சொல்லைப் பயன்படுத்துவதே சரியாகும் என்று இந்நூலாசிரியர் கூறுகிறார். இஃது உண்மையல்லவா?

48) தேனீர் - தேநீர் என்னும் சொற்கள்:

குடிப்பதற்கு நீர் தேவைப்படுகிறது. அந்த நீரில் தேன் கலந்தால் தேனீர் ஆகிறது. அதுபோலவே தேயிலைத் தூளைக் கலந்தால் தேநீர் ஆகிறது. இதனை அறியாமல் சிலர் தேனீரையும் தேநீரையும் குழப்பிக் கொண்டு தேநீரைத் தேனீர் என்று தவறாக எழுதுகின்றனர்.

தேன் + நீர் = தேனீர்; தே + நீர் = தேநீர்; தே + இலை = தேயிலை.

------ ‘‘தேனீர் என்றால்
தேன் கலந்த நீரென்றே பொருளைச் சுட்டும்
தேநீரைத் தேனீராய்ச் சொல்லல் நன்றோ?’’

என்னும் பாவலரின் வினாவுக்கு நம்மிடம் விடை என்ன? எனவே,

‘‘போயினிமேல் கடையினிலே தேநீர் என்றே

பெயர்சொல்லிப் பருகுங்கள் தேனீர் வேண்டாம்!"

என்று அவர் நம்மையெல்லாம் கேட்டுக்கொள்கிறார். நாமும் தேநீர் என்றே சொல்வோம்.

49) உயர் (மட்டம்) நிலைக்குழு என்னும் தொடர்:

உயர் என்றால் உயர்ந்த, உயரமான, மேல்நிலை என்று பல பொருள்களைக் குறிக்கும். மட்டம் என்றால் கீழான, தாழ்வான, சிறப்பற்ற என்னும் பொருளாகும். உயர்மட்டம் என்றால் உயர்ந்த தாழ்ந்த என்னும் எதிரெதிர் பொருள்களைக் குறிக்கும். அங்காடிக்குச் சென்றால் இது மட்டமான பொருள்; இது வேண்டாம் என்கிறோம். ஒரு குறிப்பிட்ட மனிதரைப் பார்த்தால், ‘‘அவன் மிகவும் மட்டமானவன்" என்கிறோம். எனவே மட்டம் என்னும் சொல், ‘‘தரமற்ற" என்னும் பொருளை உடையது என்று புலனாகிறது. அதனால்,

‘‘உயர்மட்டக் குழுவென்னும் சொல்லை நீக்கி
உயர்நிலையாம் குழுவென்றே இனிமேல் சொல்வீர்! "

என்று கூறுகிறார். உயர்ந்த மட்டமான குழு என்று சொல்வது அந்த உயர்நிலைக் குழுவையே கேவலப்படுத்துவதுபோல் இல்லையா? குழுவும் கேவலப்படுகிறது; தமிழும் கேவலப்படுகிறது. எனவே உயர்மட்டக் குழு என்னும் சொல்லை விடுப்போம்; உயர்நிலைக் குழு என்னும் சொல்லை ஏற்போம்.

50) கட்டடம் - கட்டிடம் என்னும் சொற்கள்:

மிகு பலரும் கட்டடங்களைக் கட்டிடங்கள் என்று எழுதுகிறார்கள். கட்டடத்துக்கும் கட்டிடத்துக்கும் வேறுபாடு உண்டு. கட்டிடம் என்பது காலியாக இருக்கக்கூடிய இடம் ஆகும். அந்தக் காலி இடத்தில் கட்டப்படுவது கட்டடம் ஆகும். கட்டிடம் என்றால் கட்டும் + இடம் = கட்டுமிடம் > கட்டிடம். ஆகவே

காலியாக உள்ள இடத்தை கட்டிடம் என்றும் கட்டப்பட்டதைக் கட்டடம் என்றும் அழைக்க வேண்டும்.

''---------- கட்டுகின்ற இடத்தைத் தான்நாம்
கட்டிடமாய்ச் சொலல்வேண்டும்! கட்டி விட்டால்
கட்டடமாம் ---------------"

என்று இதனைப் பாவலர் பாடுகிறார்.

51) கோர்ப்பு - கோத்தல் என்னும் சொற்கள்:

கோர்த்தல், கோத்தல் என்னும் இந்த இரண்டு சொற்களில் கோர்த்தல் என்னும் சொல்தான் மக்களிடையே பரவலாக உள்ளது. ஊசியில் நூலைக் கோர்த்தல்; பூக்களை மாலையாகக் கோர்த்தல், முத்துகளை மாலையாகக் கோர்த்தல், அச்சகத்தில் அச்சுக் கோர்த்தல் என்று பரவலாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அச்சுக் கோர்த்தல் அல்ல; அச்சுக் கோப்பு ஆகும்; முத்துகளை மாலையாகக் கோர்த்தல் அல்ல; கோத்தல் ஆகும் என்று பாவலர் சொல்லுகிறார்.

''முத்துகளை மாலையாகக் கோத்த ணிந்தால்
முழுநிலவாய் நகையொளிரும் பெண்மு கத்தில்
நித்திலங்கள் தரையினிலே சிதறிப் போக
நின்றிருந்த கர்ணனிடம் கோக்கவோ என்றான்!
முத்துகளை மணிவகையைக் கோர்ப்ப தற்கு
முனையாமல் மாலையாகக் கோக்க வேண்டும் "

என்னும் பாடலில் கோத்தணிந்தால், கோக்கவோ, கோக்க வேண்டும் முதலிய சொற்களைத்தான் பாவலர் பயன்படுத்தியுள்ளார் என்பதை நாம் பார்க்கிறோம்.

ஆகவே கோர்த்தல் என்னும் சொல் தவறானது என்பதையும் கோத்தல் என்னும் சொல்லே சரியானது என்பதையும் நாம் அறிய வருகிறோம். இந்தச் சரியான சொல்லையே நாம் பயன்படுத்த வேண்டும்.

52) அந்தப்புறம் - அந்தப்புரம் என்னும் சொற்கள்:

யாரையேனும் திடீரென அந்தப்புறமா அந்தப்புரமா? வல்லின றகரமா இடையின ரகரமா என்று கேட்டால் பலரும் தடுமாறித்தான் போவார்கள்.

புறம் என்றால் வெளியே இருக்கும் இடம் என்று பொருள். புரம் என்றால் ஒரு பகுதி என்று பொருள். அந்தப் புறம் என்றால் புறத்தே உள்ள அந்த இடம் என்றும் அந்தப்புரம் என்றால் அரண்மனையின் உள்ளே உள்ள ஒரு பகுதி என்று பொருள்.

இந்த இரண்டு சொற்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை உணர்ந்து வல்லின, இடையின, றகர, ரகர எழுத்துகளைப் பயன்படுத்த வேண்டும். ஆகவே அரண்மனைக்குள் இருப்பது அந்தப்புரம் ஆகும்.

TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor

Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D
Translator, Publisher, Madurai

Chapter 12

'An important matter. Look here, we say 'where' in Germany and yaar or evar for 'who' in Tamil. This Yaar or evar has become 'evaru' in its sister language, Telugu. To find the etymology of any word in any language, Tamil helps a lot. I believe there must be at least five thousand languages. In all these languages, you can trace the existence of Tamil. So I call it as the Proto Language.'

Dev told doctor Maran.

"Mmm", said the doctor.

'Doctor, you can find some common changes that have taken place in Indo-Aryan languages when they borrow the words from Proto Dravidian language or Tamil. Speech in English is paechu in Tamil. Sudden in English is 'udane' in Tamil, sponge in English is from the panju in Tamil. Just if you add a sound 's' to a Tamil word, then it will become English'.

What about Sanskrit and Hindi?



They are the grandchildren of Tamil and burst into laughter.

The doctor could not know where to start the therapy for Dev. He talked to Dev's father, Anthanan in Tamil Nadu and asked him whether Dev had any symptoms in his childhood days.

Anthanan started a story to explain why he was named Anthanan. 'Anthanar enpoer aravoer' tells Thiruvalluvar, which means a person who leads a virtual life is an Anthanan or Brahmin. And my grandfather named me to lead a righteous life. My grandfather is a Tamil scholar. He is a student of the great Tamil scholar Ki. Aa. Pe. Visuvanatham. Now the doctor could identify the genesis of Dev's sickness. Dev's family had an affinity for Tamil in their genes.

புதிய வெளியீடுகள்





சந்திரோதயம் பதிப்பகம், மதுரை -18.
போன் 7010997639